
கல்கி
KALKI
7.6.1959
30 காசு



திடீரென வரும் விருந்தாளிகளுக்கு...



...இணையற்ற விருந்து



மிட்சலின்

கிஸான் பானங்கள் ❋

ஆரஞ்சு ஸ்க்வாஷ் - லெமன் ஸ்க்வாஷ் - லெமன் பார்லி - ஆரஞ்சு பார்லி - மாம்பழ ஸ்க்வாஷ் - கிரேப் புரூட் ஸ்க்வாஷ் - லைம்ஜூஸ் கார்டியல்.

இவ்வினிய பழரஸ பானங்களை என்ன விருப்பமுடன் விருந்தாளிகள் ரஸிக்கின்றனர் என்பதை நீங்களே பார்க்கலாம். வருஷம் முழுவதும் உபயோகிக்கத் தகுந்த உன்னதமான பானங்கள் இவை. உங்கள் குடும்பத்திற்கும் உகந்த தொருவிருந்து. பிரதி ஞாயிற்றுக் கிழமையும் இவ்வினிய பானங்களை அருந்தத் தவறாதீர்கள்.

என்றும் வீட்டிலொரு பாட்டில் இருக்கட்டும்

❋ பழம், காய்கறி பொருள்கள், தயாரிப்பில், இந்திய சர்க்காரால் நடத்தப்பட்ட இரண்டாவது அகில இந்தியப் போட்டியில் கிஸான் ஸ்க்வாஷ்கள் முதல் மற்றும் இரண்டாவது பரிசுகள் பெற்றன.


KP 547a


கிஸான் பிராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், பெங்களூர்.

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.





சௌகரியத்திற்கும் . . . நற்பணி புரிவதற்கும்

Accaire

AW - 102 (A.C.)
DW - 102 (D.C.)

அக்கயர்

அறையின் ஜன்னலில் பொருத்தும் ஏர்கண்டிஷனர்

- குறைந்த பராமரிப்பு செலவு
- சத்தமின்றி இயங்கும்
- தொந்தரவற்ற சேவை
- ஒரு வருஷ உத்தரவாதம்


accooler

தண்ணீர் குளிர்சாதனம்

அக்கூலர்

- சுகாதார முறையில் குளிர்ச்சி செய்யப்பட்ட — நிரந்தரமான தண்ணீர் சப்ளை
- துருப்பிடிக்காத பெட்டி
- சுலபமாக அமைக்கலாம்

உங்கள் சேவைக்கு
நல்ல அனுபவமுள்ள
சர்வீஸ் டிபார்ட்மெண்ட்



ஏர் கண்டிஷனிங் கார்ப்பரேஷன் பிரைவேட் லிட்.

மற்றும் பபலோ இண்டஸ்ட்ரியல் பங்காக்கள் தயாரிப்பாளர்கள்

கல்கத்தா - பம்பாய் - புது தில்லி!

விநியோகஸ்தர்கள் :

ஓபுல் செட்டி (மதராஸ்) பிரைவேட் லிமிடெட், மதராஸ் - போன் 84680
ரெப்ரிஜிரேட்டர்ஸ் & ஹோம் அப்ளையன்ஸ் பிரைவேட் லிட்., மதராஸ் - போன் 86105
மரிக்கார் (மோட்டார்ஸ்) லிமிடெட், திருவனந்தபுரம் - போன் 2855
குவாலிட்டி மெஷினரி கம்பெனி, கோயமுத்தூர் - போன் C/o79



மலர் 18
இதழ் 45

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

விகாரி ௵
வைகாசி ௴ 24

இரண்டாயிரம் கோடிக்குப் புதுவரிகள்

இரண்டாவது திட்டம் முடிவடைய இன்னும் இரண்டு ஆண்டுகள் இருக்கும் போதே மூன்றாவது திட்டத்தின் லட்சியம், முதலீடு, நிதிவசதி, செயல் முறை முதலியவை பற்றி விவாதங்கள் தீவிரமாகத் தொடங்கி விட்டன. இந்த மூன்றாவது திட்ட காலத்தில் சோஷலிஸப் பாதையில் நாடு முழுதும் மிக வேகமாக முன்னேற வேண்டும் என்பது லட்சியம். திட்டத்தின் முதலீடு 11,000 கோடி அளவில் இருக்க வேண்டும் என்று ஒரு அபிப்பிராயம் நிலவுகிறது. இது போதாது, 12000 கோடியாக இருக்க வேண்டுமென்று மற்றொரு கருத்து. திட்டத்துக்கு வேண்டிய நிதிக்காக 2000 கோடி வரி மூலம் வசூலிக்க வேண்டியதாகும் என்ற எச்சரிக்கையும் நிலவி வருகிறது.

இவற்றையெல்லாம் படிக்கும்போது மக்கள் மனத்தில் பெரும் பீதி ஏற்படுகிறது. திட்டத்தை உருவாக்குபவர்கள் பூமிமேல் நிற்கவில்லை. இன்னமும் கனவிலேயே சஞ்சரிக்கிறார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. இது வரையில் ஏற்பட்ட அனுபவங்களினின்று எந்தப் பாடத்தையும் அவர்கள் கற்கவில்லை, அல்லது தேர்தலைக் கருத்தில் வைத்து எதையேனும் சொல்லிக் கொண்டு போகலாம் என்று எண்ணுகிறார்களோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

உணவுப் பிரச்னையைத் தீர்க்க வேண்டி விவசாய அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு முதல் திட்டம் வகுக்கப்பட்டது. "வெற்றிகரமாக நிறைவேற்றி விட்டோம்; ஏற்படுத்திக்கொண்ட லட்சியம் கிட்டி விட்டது" என்று பெருமிதத்துடன் கூறிக்கொண்டு இரண்டாவது திட்டத்தில் ருஷ்யாவைப் போல் பிசாகத் தொழில் விஸ்தரிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

ஆனால் இப்போது காண்பது என்ன? முதல் திட்டத்தில் கண்ட "வெற்றி" கானல்நீர் போலாயிற்று. உணவு உற்பத்தி இன்னமும் தீராத பெரும் பிரச்னையாகவே இருந்து வருகிறது. சமீபத்தில்தான் மத்திய உணவு மந்திரி, இந்த ஆண்டில் மற்றொரு 'வங்காளப் பஞ்சம்' ஏற்பட இருந்தது, ஆண்டவன் அருளினால் எப்படியோ தப்பித்தோம் என்று சொன்னார். தொழில் ஸ்தாபனங்களில் உற்பத்தி இன்னமும் குறிப்பிட்ட அளவுக்குப் பெருகவில்லை. தேசிய வருமானம் இருமடங்காகப் பெருக வேண்டுமென்றார்கள். இதிலும் கணிசமான முன்னேற்றத்தைக் காணவில்லை.

எட்டு ஆண்டுகளில் நமது திட்டங்களுக்குச் செலவான தொகை ஏராளம். ஆனால் கிடைத்த பலனுக்கும் செலவு செய்த பணத்துக்கும் சம்பந்தமில்லை. ஏன் இப்படி? நமது திட்டக் கமிஷனும் மந்திரி சபைகளும் ஒதுக்கப்பட்ட பணத்தை எப்படியும் செலவு செய்து விட்டால் திட்டம் நிறைவேறி விட்டது என்று எண்ணி விடுகின்றனர். அப்படித்தான் ஆண்டுதோறும் திட்டமிட்ட பணத்தைச் செலவு செய்தோம் என்று அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

ஆனால், செலவு செய்தால் மட்டும் திட்டம் நிறைவேறாது. எதிர்பார்த்த பலன் கிடைத்தால்தான் திட்டத்தின் வெற்றிக்கு லட்சணம் என்பதாகச் சொல்லலாம். இதை நமது திட்டம் வகுக்கும் பெரியோர்கள் இன்னமும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

மேலும், செலவாகும் பணத்தில் வீண் செலவு எவ்வளவு, உற்பத்தியைப் பெருக்க வல்ல அவசியச் செலவு எவ்வளவு, வேலை வாய்ப்புகள் எத்தனை பேர்களுக்குக் கிடைத்

திருக்கின்றன. கிராமப்பகுதிகளில் வேலையின்றி உழலும் பெரும்பாலான மக்களுக்குப் பயன்படும் வகையில் தொழில் வளர்ச்சி எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது என்பதுதான் மக்கள் கவனிக்கும் விஷயங்கள். பொது மக்களை வறுமையிலாழ்த்தி, அவர்களுடைய வருங்கால சுக வாழ்க்கைக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் மிகவும் முக்கியம் என்று கூறி வரிகள் விதித்துப் பணம் திரட்டப்படுகிறது. அது அரசாங்க வர்க்கத்தினரின் சம்பளத்துக்கும், மற்ற நிர்வாகச் செலவுக்கும், ஊதாரித்தனத்திலும் செலவழிக்கப் படுவதைத்தான் பாமர மக்கள் கண்டு பொருமுகின்றனர். இரண்டாவது திட்ட காலத்தில் மட்டும் அதிகப்படியாக வரிகள் மூலம் வசூலித்த தொகையில் சுமார் 900 கோடி ரூபாய் நிர்வாகத்துக்கு அதிகப்படியாகச் செலவாயிற்றாம்! அதாவது விவசாயப் பண்டங்களின் உற்பத்தியோ, தொழிற்சாலைகளில் உற்பத்தியோ பெருக்குவதற்காகச் செலவழிக்க வேண்டிய தொகை வீணாகச் செலவாயிற்று என்றுதான் இதற்குப் பொருள். இதைக் கண்டு மனம் வெதும்புகின்றனர் மக்கள்.

திட்டங்களினின்று பயன்கள் பெறாததாலும் வாழ்க்கைக்கு வேண்டிய பண்டங்களின் குறைவாலும் பணச் செலாவணி காட்டில் வரம்புமீறி உயர்ந்ததாலும் விலைவாசிகள் எல்லாம் உயர்ந்து தினசரி வாழ்க்கையே கஷ்டமாகி விட்டது.

இந்நிலையில் மேலும் 2000 கோடி ரூபாய் அளவுக்கு மூன்றாவது திட்ட காலத்தில் வரி விதிக்க வேண்டியிருக்குமென்றால் பீதி யுண்டாகாமல் எப்படியிருக்கும்? யார்பேரில், எந்தவிதத்தில் வரி, இதுவரை போடப்பட்டதற்கு மேல், எப்படிப் போடமுடியும்?

அயல்நாட்டு உதவியை எதிர்பார்த்தே திட்டங்கள் போடுவது என்பது இப்போது ஒரு 'பாப்பர்' பழக்கமாகவே ஆகிவிட்டது. இரண்டாவது திட்டம் அந்நியச் செலாவணி நெருக்கடியால் எப்படித் தத்தளித்தது என்பது நேரடியாகக் கண்டும், அடுத்த திட்டத்திலும் மிகப் பெரிய அளவுக்கு அயல்நாட்டு உதவி எதிர்பார்க்கப்படுகிறது. இதைக் கண்டும் நாட்டு நன்மையில் நாட்டம் கொண்டவர்கள் வருந்துகின்றனர்.

புதுதில்லியின் வெப்பத்திலிருந்து ஒதுங்கி வந்து உதகையின் குளிர்ந்த காற்றில் பள்ளிக்கூடம் போட்டிருக்கும் இந்திய காங்கிரஸ் கமிட்டியின் திட்டக் குழுவினர் ஆசை லட்சியங்களை மட்டும் கருத்தில் கொள்ளாமல் அவசியம் எது, அவசியமல்லாதது எது, உடனடியாகப் பயனளிக்கவல்லது எது, நீண்ட காலத்துக்குப் பின் பயன் தரக்கூடியது எது என்று இனங்களைப் பாகுபாடு செய்துகொண்டு, நிதி வசதிகளையும் மக்கள் நிலைமையையும் கருத்தில் வைத்து, இணக்கமான முறையில் திட்டம் வகுப்பார்களா என்று ஐயத்துடன் எதிர்பார்க்கிறோம்.


அனாவசியப் பிரிவினை

சென்னைப் பகுதியிலிருந்த கோவை, ஈரோடு வருமானவரி இலாக்காக்களைச் சென்ற வருஷம் 1-1-58 முதல் கேரளப் பகுதியில் இணைத்து விட்டார்கள். இவ்வருஷம் 1-6-59 முதல் உதகமண்டலத்தையும் கேரளப் பகுதியில் சேர்த்துவிடப் போகிறார்கள் என்று அறிகிறோம்!

இதற்குக் காரணம் என்ன என்று விசாரித்ததில் உருப்படியான காரணம் யாராலும் சொல்ல முடியவில்லை. 'நிர்வாக வசதி' என்று கபடமாக மூடி மறைத்தாற்போல் சொல்கிறார்கள். நிர்வாகத் துறையிலிருப்பவர்களோ இதனால் எங்களுக்கு யாதொரு வசதியுமில்லை என்கிறார்கள். அதற்குப் பதில் இடையூறுகள் தான் இருக்கின்றன என்கிறார்கள். கோவை, ஈரோடு, உதகமண்டலம் முதலிய இடங்களில் உள்ள காரியாலயச் சிப்பந்திகள் மாற்றப்பட்டால் இனி மலையாளப் பகுதிகளுக்குத்தான் செல்ல வேண்டியிருக்கும். அப்படியே மலையாளப் பகுதிகளிலுள்ள வருமானவரி காரியாலயச் சிப்பந்திகள் கோவை, ஈரோடு, உதகை முதலிய மூன்று இடங்களுக்கு மாற்றப்படுவார்கள். அப்படி மாற்றப்பட்டால், தமிழ் படித்து வந்த சிப்பந்திகளின் குழந்தைகள், மலையாளம் படிக்கவும், மலையாளம் படித்து வந்த சிப்பந்திகளின் குழந்தைகள் தமிழ் படிக்கவும் நேருகிறது. இது எவ்வளவு இடையூறு என்று சொல்லத் தேவையில்லை. அதனால் தமிழ்நாட்டுச் சிப்பந்திகள் கேரள நாட்டுக்குப் போக விரும்பவில்லை. ஆகவே இந்தப் புதிய மாற்றங்கள் வேண்டாம்; பழையபடியே நிலவட்டும் என்று இரு பகுதியினரும் வற்புறுத்துகின்றனர்.

மற்றொரு விஷயமும் இங்கு குறிப்பிட வேண்டும். வருமான வரி இலாக்கா மத்திய சர்க்காரைச் சேர்ந்தது. ராஜ்யங்களுக்கு மான்யங்கள் வழங்கப்படும் போது, ராஜ்யங்களின் ஜனத்தொகையையும், வருமான வரி இலாக்காவுக்குச் செலுத்தியுள்ள தொகையையும் கணக்கெடுத்துக் கொள்ளப்படுகிறது. மலையாளமும் தமிழ்நாடும் ஒன்றாக இருந்தபோது, சிக்கல் இருக்கவில்லை. இப்பொழுது சென்னையைத் தனிப்படுத்தியபின் இந்த வருமான வரி இலாக்காவின் மாறுதலால் சிக்கல் ஏற்படப் போகிறது. கோவை பெரிய ஆலைகள் கொண்ட இடம் என்பது யாவரும் அறிந்ததே. கேரளத்துடன் சேர்த்து விட்டால், தமிழ் நாட்டின் வருமான வரி வசூல் பெரிதும் குறைந்து காணப்படும் அல்லவா? தேச முன்

நேருஜியின் முயற்சி!



கம்யூனிஸ்ட் செயல் முறைகளை மட்டும் கண்டித்து, அவர்களுடைய கொள்கைகளை, நேருஜி கடைப்பிடிக்கப் பார்க்கிறார். சிறுத்தையின் மீதுள்ள புள்ளிகளை அகற்றி விடுவதால் சிறுத்தை பூனையாகி விடுமா என்று திரு மஸானி பெங்களூரில் கேட்டார்.

னேற்றத்துக்கான திட்டச் செலவுகளுக்குத் தமிழ்நாடு அதிக பங்கு கேட்கும் போது, தமிழ்நாட்டின் காணிக்கை குறைவாக இருக்குமானால், எப்படிச் சர்க்கார் தமிழ்நாட்டுக்கு அதிகமாகச் செலவு செய்ய முடியும் என்று பதில் சொல்ல இடம் ஏற்படுகிறதல்லவா? ஒருகால் விஷயம் தெரிந்தவர்கள், அப்படிச் சொல்லாமல் இருக்கலாம். ஆனால் அரசியல்வாதிகள் நிச்சயமாகச் சொல்லி ஏய்க்கப் பார்ப்பார்கள்! ஆகவே, கோவை, ஈரோடு, உதகமண்டலம் ஆகிய மூன்று நகரங்களிலுள்ள வருமான வரி காரியாலயங்களையும் முன்போலவே தமிழ் நாட்டு வட்டத்துடன் இணைந்தே இருக்கும்படி செய்ய வேண்டும்! அனாவசியமான பிரிவினைகள் செய்து இரு ராஜ்ய ஊழியர்களையும் மக்களையும் கஷ்டப்படுத்த வேண்டியதில்லை. இருப்பது இருப்பது போல் விட்டு விடுவது நன்மை.

என்ன சேதி?

கூட்டு விவசாயத்துக்கு எதிர்ப்பு

வட ஆற்காடு ஜில்லாவில் கூட்டு விவசாய முறையை எதிர்த்து ஒரு மாநாடு கூட்ட ஏற்பாடாகி வருகிறது என்று அறிகிறோம். இதற்கு காட்டரம்பள்ளி திரு எச். எஸ். துரைசாமி கவுண்டர் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிட்டி அமைத்திருக்கிறார்கள். மிட்டூர் திரு பீமராஜ ரெட்டியார், ஜோலார்ப்பேட்டை திரு தேவராஜ ரெட்டியார், வடக்குபட்டு திரு வி. கே. கந்தசாமி, திரு எம். அப்துல் ஜப்பார் சாயபு, வாணியம்பாடி திரு ஆர். சின்னைய ரெட்டியார், திரு ஏ. வி. வெங்கடேசன் முதலியோர் அந்தக் கமிட்டியில் இருக்கிறார்கள். வாணியம்பாடி திரு வே. ச. விசுவநாதம் அவர்கள் பொதுச் செயலாளராக இருந்து இந்த மகாநாட்டுக்கான பணிகளைச் செய்து வருகிறார்.

கிராம மக்களின் வாழ்வைச் சிதைக்க வரும் இந்தக் கூட்டு விவசாய யோசனைகளை எதிர்த்து, அவர்கள் அபிப்பிராயத்தைப் பகிரங்கமாக வெளியிட வேண்டிய காலம் வந்துவிட்டது. இனியும் சும்மா இருப்பதற்கில்லை. ஆகவே, கிராம மக்கள்

ஆங்காங்கே திரண்டு, தாங்கள் விழிப்புடன் இருக்கிறார்கள் என்பதைச் சர்க்காருக்குக் காண்பித்துக் கொள்ளவேண்டும். அம்முறையில் வட ஆற்காடு மற்ற ஜில்லாக்களுக்கு வழிகாட்ட முன்வந்தது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.]

இந்தித் திணிப்பு!

மத்திய சர்க்கார் இலாக்காக்களில் வேலை செய்து வந்த குமாஸ்தாக்கள் இந்தி படித்துப் பரீட்சை எழுதித் தேறினால் சம்பளத்தில் பத்து அல்லது பதினைந்து ரூபாய் உயர்வு தரப்படும் என்று அறிவித்தார்கள். அத்துடன், அந்த உத்தியோகஸ்தர்கள் இந்தி படிப்பதற்காக வேண்டி காரியாலய நேரம் முடிந்த பிறகு இந்தி வகுப்பு நடத்தச் சர்க்கார் இந்தி ஆசிரியர்களையும் நியமித்தார்கள். இப்படி மறைமுகமான பலாத்காரத்தில் இந்தியை நுழைக்கப் பார்த்தார்கள். நாற்பது வயது, ஐம்பது வயதானவர்கள் கூட இந்தி வகுப்புக்கு வந்தார்கள். ஆனால் அவர்களுக்கு இந்தி பிடிபடவில்லை. மேலும் இளைஞர்களாயிருந்தவர்களிடம் இந்தித் திணிப்புக்குக் கடுமையான எதிர்ப்பு இருப்பதையும் கண்டு கொண்டார்கள். இது பயனற்ற காரியம் என்று கண்டுகொண்டு பொது மக்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுப்பது போல் இந்த இந்தித் திணிப்பு உத்தரவை வாபஸ் பெற்றார்கள். உத்தியோகஸ்தர்களும் குமாஸ்தாக்களும் தங்கள் எதிர்ப்புக்குச் சர்க்கார் பணிந்து விட்டார்களே என்று மகிழ்ந்தார்கள்.

ஆனால் இப்பொழுது சாமர்த்தியமாக வேறு விதத்தில் இந்தித் திணிப்புக்கு ஏற்பாடு செய்து விட்டார்கள். குமாஸ்தாவாக நுழைபவர் சூபரின்டெண்டெண்ட் ஆகவோ, மற்ற உயர் பதவிகளைப் பிடிக்கவோ, இலாக்கா நடத்தும் பரீட்சைகள் எழுத வேண்டியதுண்டு. அவற்றில் தேறினால் அந்தப் பதவியை அடையலாம். இப்பொழுது சர்க்கார், அந்தப் பரீட்சைகளுடன் இந்தியைச் சேர்த்து விட்டார்கள். இலாக்காப் பரீட்சைகளுடன், இந்திப் பரீட்சையும் நடத்தப்படும். இந்திப் பரீட்சையில் தேற வேண்டியது அவசியம் என்று ஏற்படுத்தி விட்டார்கள்! மத்திய சர்க்காரின் சாமர்த்தியம் எப்படி!

தென்னாட்டில் பிறந்து வளர்ந்த உத்தியோகஸ்தர்களின் உரிமைகளை 1965-வது வருஷத்துக்கு முந்தியே பறிப்பதில் இறங்கி விட்டார்கள்! ஒரு புது நியதி கொண்டு வந்தால் அதனால் கஷ்டமடையக் கூடியவர்களுக்குத் தவணை கொடுப்பது வழக்கம். அதற்கு மாறாக, புதுக் கொள்கையைப் புகுத்துவதற்கு நிர்ணயித்திருக்கும் தேதிக்கு முன்னாலேயே புகுத்தி உரிமைகளைப் பறிப்பது அரசியல் நிர்ணயச் சட்டத்துக்கு நேர் விரோதமாகும்.

இலங்கைக் கடிதம்

கல்வித்துறையிலும் அநீதி

கொழும்பு, மே, 28உ

இலங்கைப் பல்கலைக் கழகத்திலிருந்து தமிழர்களாயுள்ள பேராசிரியர்களைக் கல்தா கொடுத்து வெளியேற்றத் திட்டம் தீட்டப்பட்டு வருகிறதோ என்று சந்தேகிக்கும்படியான ஒரு சூழ்நிலை இப்போது உருவாகி யிருக்கிறது. பல்கலைக் கழகத்தில் கணிதப் பேராசிரியராகக் கடமையாற்றும் டாக்டர் எனியேஸர் என்ற தமிழ்ப் பிரமுகரை மலாயா பல்கலைக் கழகம் ஆறு மாத காலம் அங்கு வந்திருந்து மலாயா பல்கலைக் கழகக் கணிதப் பிரிவைச் சீர்திருத்தித் தருமாறு அழைத்திருந்தது. இவ்விதம் ஒரு பல்கலைக் கழகப் பேராசிரியரை இன்னொரு பல்கலைக் கழகம் அழைப்பது புதிய விஷயமல்ல. அல்லாமலும் இலங்கைப் பல்கலைக் கழகக் கணிதப்பிரிவின் சிறப்பை அறிந்து டாக்டர் எனியேஸரை மலாயா பல்கலைக் கழகம் அழைத்தது இந்நாட்டுப் பல்கலைக் கழகத்துக்கு மட்டுமல்ல, இலங்கைக்கே பெருமை தருவதாகும். அப்படி விரும்பும் டாக்டர் எனியேஸர் மலாயாவுக்குப் போய்வரப் பல்கலைக் கழக செனட் சபை ரஜாக் கொடுக்க மறுத்து விட்டது. இதைப் பின்பற்றி டாக்டர் எனியேஸர் தமது பேராசிரியர் பதவியை ராஜினாமாச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் உருவாக்கப் பட்டுள்ளது. இதேபோல் பேராசிரியர் தம்பிப் பிள்ளை என்பவருக்கும் லண்டனுக்குச் சென்று உலகப் பிரசித்திபெற்ற விஞ்ஞானியாகிய பிளாங்கட் என்பவரிடம் ஆராய்ச்சி நடத்தச் சம்பளமின்றிக்கூட ரஜாக் கொடுக்கப் பல்கலைக் கழகம் மறுத்து விட்டது.

பேராசிரியர்களில் எவருக்கும் ரஜாக் கொடுப்பதில்லையென்ற கொள்கையைப் பல்கலைக் கழக செனட் சபை கடைப்பிடிக்கும் பட்சத்தில் அதை யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை. பாளி மொழிப் பேராசிரியரான டாக்டர் ஜி. பி. மலாலசேகரா என்பவரை சோவியத் ருஷ்யாவில் ஸ்தானிகராக நியமிக்க அரசாங்கம் விரும்பியபோது அவருக்குப் பல்கலைக் கழகம் மூன்று வருட ரஜா வழங்கியது. பல்கலைக் கழகத்துடனோ அல்லது கல்வியுடனோ எவ்விதமான சம்பந்தமும் இல்லாத ஒரு வேலைக்கு ஒரு சிங்களவர் போகும்போது ரஜா வழங்கியிருக்கையில் கல்வி சம்பந்தமாக வெளிநாடு போக விரும்பும் தமிழர்களுக்கு மாத்திரம் ரஜா வழங்கப் பல்கலைக் கழகம் மறுக்க எவ்விதமான நியாயமும் இல்லை.

—ரஜனி



அகிலன்
எழுதும்
புதிய
சரித்திர நாவல்
வேங்கையின்
மைந்தன்
கல்கி
ஜீலை 5உ இதழில்
ஆரம்பமாகிறது



தென்னாட்டைச் சேர்ந்த ஒருவர், தென்னாட்டை விட்டுப் பலநூறு மைல்களுக்கு அப்பால் வர்த்தகப் பிரமுகர்கள் வாழும் இடத்தில் தங்கிப் பன்னாண்டுகள் தொண்டாற்றி அவர்கள் அன்பையும் பெருமதிப்பையும் சம்பாதித்திருக்கிறார் என்றால் அது தென்னாட்டுக்கே பெருமைதரும் விஷயம் அல்லவா? அப்படிப்பட்ட பிரமுகர்தான் திரு ஏ. வி. ராமலிங்கம். அவர் பம்பாயில் வர்த்தக சங்கத்தின் காரியதரிசியாக மூப்பத்திரண்டு ஆண்டுகள் திறம்படப் பணியாற்றிச் சமீபத்தில் ஓய்வு பெற்றார். அவருக்குப் பம்பாய் நகரத் தொழிலதிபர்களும் வர்த்தக ஸ்தாபனங்களும் சேர்ந்து சென்ற மே 27ம் தேதி அருமையான பிரிவு உபசார வைபவம் நிகழ்த்திக் கௌரவித்தனர். அந்த வைபவத்தில் கலந்து கொண்ட மத்திய மந்திரி திரு மொரார்ஜி தேசாய் திரு ஏ. வி. ராமலிங்கத்துக்கு நூற்றுக்கு மேற்பட்ட வர்த்தகப் பிரமுகர்கள் கையெழுத்திட்டளித்த வெள்ளித் தட்டைப் பாராட்டுக் குழுவினரின் சார்பில் அளித்தார்.

ஆகாச வெடி

"சென்ற ஏப்ரல் மாதம் இந்திய ரயில் வண்டிகளில் ஏழு குழந்தைகள் பிறந்திருக்கின்றன."
—ரயில்வே துறை

அவை பாசஞ்சர் வண்டிகளாயிருந்தால் குழந்தைகளுக்கு ஆண்டு நிறைவும் ரயிலிலேயே கொண்டாடியிருக்கலாம்.

✶

"சர்க்கரை விலை உயர்ந்துகொண்டே போவது, மக்கள் மனத்தில் கசப்பையே உண்டாக்கும்."
—இந்திய மந்திரி திரு ஜெயின்

மனத்தில் மட்டுமா, காப்பியிலும் வரவரக் கசப்பைத்தான் இது உண்டாக்கும்.

✶

"தேனீ கொட்டுவதால் கீல் வாத நோய் தீர்ந்து விடுகிறது."
—ராஜ்ய தேனீ வளர்ப்பு மகாநாடு

ஆனால் தேனீ கொட்ட விடாமல் கீல் வாதக்காரர்களுக்கு, பிடிவாதமும் ஏற்பட்டால்....!

✶

பள்ளி விழா ஒன்றில் பேசும்போது டாக்டர் பி. சுப்பராயன் "படித்த மந்திரிகளை விடப் படிக்காத மந்திரிகளே விஷயங்களை எளிதில் புரிந்துகொள்கிறார்கள்" என்று கூறினார்.
—செய்தி

இதனால் பள்ளிக் குழந்தைகள் படிக்காமலிருக்க ஆசைப்பட்டுவிட வேண்டாம்!

★

"நடு ரஸ்தாவில் நின்று பேசும் வழக்கம் கண்டிக்கத் தக்கது."
—ரயில்வே உதவிமந்திரி திரு ராமசுவாமி

நின்றுகொண்டு பேசினால்தானே வம்பு என்று அவர்கள் உட்கார்ந்து விடப் போகிறார்கள்!

✶

"தொட்டதற்கெல்லாம் வரிகள் விதிக்கும், இந்திய சர்க்கார், இனி பேச்சுக்குக்கூட வரி போடுவார்கள் போலும்!"
—சென்னையில் ம. பொ. சி.

அப்படிப் பேச்சுக்கு வரி போட்டால் மத்திய மந்திரிகள்தான் அதிகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்பது அவருக்குத் தெரியாதா?

✶

"டெலிபோனில் போலீஸை அழைத்துப் பாட்டுப் பாடியவர் கைது."
—சென்னைச் செய்தி

ஒருவேளை அவர் பாட்டுக்களைக் கொலை செய்தது காரணமாயிருக்கலாம்.



உண்மையில் நான் பிரியப்படுகிறேன்


ஸாதே பிஸ்கோத்துகள்

“கடித்தால் இனிப்பு . . .
மற்றெல்லாவற்றையும் தோற்கடிக்கிறது”

ஸாதே பிஸ்கட் & சாக்லேட் கம்பெனி லிட்., பூனா-2.

Heros 93 TAM

2 - 7-6



ஜூன் 12-ந் தேதி முதல்
சென்னை மற்றும் தென்னாடெங்கும்
ஈன்றவளுக்கு இழுக்கு செய்தோரைப்
பூண்டோடு ஒழிப்பேன் - என்று !
சீறி எழுந்த சிங்கத்தம்பி ...!
அந்த சிங்கத்தின் கர்ஜனையைச்
சிங்காரத் தென்றலாக்கி
வெற்றி கண்ட அண்ணன் !
மாடர்ன் தியேட்டர்ஸ்
தலை கொடுத்தான் தம்பி
டைரக்ஷன். டி. ஆர். சுந்தரம்
கதை-வசனம். முரசொலி மாறன். எம். ஏ
இசை. விஸ்வநாதன், ராமமூர்த்தி.

[சென்ற மே மாதம் 13ந் தேதியன்று ஸ்ரீ சங்கர ஜயந்தியை யொட்டி, காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சாரியார் அகில இந்திய ரேடியோவில் ஸம்ஸ்கிருதத்தில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து சில பகுதிகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. — ஆசிரியர்.]

சாந்தி நிலைக்கட்டும்

ஸ்ரீ சங்கரர் லோக சங்கரர். உலகுக்கெல்லாம் க்ஷேமத்தைச் செய்தவர். அவர் பரமேச்வரனின் சுயவடிவமே. சிவம் என்றால் மங்களம், சுபம் என்றுதான் அர்த்தம். சங்கரரும் மங்களகரமானவர், மங்களத்தையே செய்பவர். சம் என்றால் சுகம், ஆனந்தம். பிருஹதாரண்யக உபநிடதத்தில் இதைப் பிரியம் என்று சொல்லியிருக்கிறது. ஒவ்வொருவனுக்கும் பிரியமானது இந்த ஆனந்தம். அதனாலேயே பிரியம் என்று சொல்லப்பட்டது. சாதாரணமாக உலக மக்கள் இந்த சம், பிரியம் அல்லது ஆனந்தம் எங்கு இருக்கிறதென்பதை அறிகிறதில்லை. அதனால் உலகத்தில் பலவித கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். இப்படி மக்கள் கஷ்டப்படுவதைப் பார்த்து பகவத்பாதருக்குக் கருணை உண்டாயிற்று. தன்னைத்தான் உணருவதால் உண்டாகும் எல்லையற்ற மேலான ஆனந்தத்தை எல்லோரும் அடைய வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார்.

எந்த மேலான ஆனந்தத்தை அனுபவித்ததனால் ஸ்ரீ சங்கரரே சகல துக்கத்திலிருந்தும் விடுதலையடைந்து சுகசொரூபமாகவிளங்கினாரோ, அந்த ஆனந்தம் எது? தன்னுடைய ஆத்மாதான் சுகம். அதுதான் ஆனந்தம். தனது ஆத்மாதான் சகலமும். அதுவேதான் பிரம்மம். நாம் காண்பது எல்லாம் பிரம்மமே. பிரம்மம் ஒன்றைத் தவிர வேறு ஒன்றுமே காணப்படுவதில்லை. காண்பதெல்லாம் அதனுடைய காரியம்தான். காரணமே காரியமாகிறது. காரியம் காரணத்திலிருந்து தனித்து வேறில்லை. எல்லாம் பிரம்மம் தான். எல்லாம் சம். சுகம். எல்லாம் ஆனந்த சொரூபம். இந்த ஆனந்த அனுபவம் எல்லாருக்கும் உண்டாகட்டும். எல்லாக் காலத்திலும் ஏற்படட்டும். எல்லா அனுபவங்களிலும் இந்த ஆனந்தம் பிரதிபலிக்கட்டும். எல்லா அனுபவங்களும் தனது சுய ஆத்ம அனுபவமாகவே உண்டாகட்டும்.



ஆத்மாவுக்குப் புறம்பாக உள்ள வெளி வஸ்துக்களெல்லாம் ஆத்மாவுடன் சம்பந்தப்பட்டிருப்பதனாலேயே பிரியமாக ஆகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக ஒவ்வொருவனுக்கும் பிரியமாக உள்ளது அவனுடைய ஆத்மாதான். இந்த ஆத்மாவும் பிரம்மத்தினின்று வேறுபட்டதல்ல, ஒன்றுதான் என்பதை அனுபவபூர்வமாக உணருவதுதான் உண்மையான ஆனந்தம். இதைத்தான் சங்கரர் உலகுக்குச் சொன்னார்.

பரமாத்மா என்பது ஒன்றே. பலவாறாகத் தோன்றுவதெல்லாம் உண்மையில் ஒன்றுதான். இந்தப் பரமாத்மாதான். எல்லாம் பிரம்ம சொரூபம் என்று வேதங்கள் சொல்லுகின்றன. வேதங்கள் சொன்னதையே சங்கரரும் சொன்னார்.

• • •

எல்லாம் பிரம்மமாகவே இருப்பதால் பிரம்மத்தைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை என்று சங்கரர் சொன்னார். உலகம் ஒன்றுதான் சத்தியம். பிரம்மம் என்பது இல்லை என்று சார்வாகர்கள் கூறினர். தர்க்கவாதிகளும், நையாயிகர்களும் இதரத்வைதவாதிகளும் உலகம், பிரம்மம் இரண்டுமே சத்தியம் என்றார்கள். பௌத்தர்கள் பிரம்மம் உலகம் இரண்டுமே அசத்தியம், இல்லாத பொருள்கள் என்று மறுத்தனர். உலகம் சுதந்திரமாக விளங்கும் நித்தியவஸ்து அல்ல. பிரம்மத்துடன் சம்பந்தப்பட்டே தோன்றுவதால் பிரம்மம் ஒன்றே சத்தியம் என்று உபதேசித்தார் சங்கரர்.

• • •

புத்தர் காலத்தில் அதற்கு முன்னிருந்த மதங்கள் நசித்துப் போகவில்லை. சார்வாக மதத்தாலும் அதன் காலத்துக்கு முன்னிருந்த மதக் கோட்பாடுகளை விரட்ட முடியவில்லை. ஆனால் சாங்கர மதம் தோன்றியதும் மற்ற எல்லா மதங்களும் சூரிய வெளிச்சத்தில் நட்சத்திரங்களின் ஒளி மறைந்து போவது போல மறைந்தன. உலக ஜோதியின் தேஜோமயமான பிரகாசத்தில் சிறு சிறு விளக்குகளின் மின்மினிப் பிரகாசங்கள் மறைந்து போனதில் ஆச்சரியமில்லை. பக்தி, உபாசனை, தர்மம், தந்த்ரம், ஆசாரம், போகம், சமாதி முதலிய பல்வேறு ஒன்றுக்கொன்று முரணான மார்க்கங்களெல்லாம் இரண்டற்ற ஏகமான அத்வைத ஆனந்தத்தில் நான்கு திசைகளிலும் ஓடும் நதிகள் முடிவில் சமுத்திரத்தில் கலப்பது போல் கலந்து

போகின்றன. எல்லா மார்க்கங்களுக்கும் அந்த மேலான ஆனந்தம்தான் முடிவு.

நமது காலத்தில் பௌதிக விஞ்ஞானத்தின் முன்னேற்றத்தினால் உயிர்களை அழிக்கும் ஆயுதங்கள் அதிகரித்து உலகத்துக்கே ஆபத்து ஏற்படலாம் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் இம்முன்னேற்றத்தையே மற்றொரு விதமாகக் கவனித்துச் சிந்தித்தால் மனித வர்க்கத்தினிடையே சமாதானமும் சாந்தியும் நிலவ விஞ்ஞான வளர்ச்சி வழி காட்டுகிறது என்றே தோன்றும். ஐம்பதாண்டுகளுக்கு முன்னால் பொருள்கள் எல்லாம் வெவ்வேறு தன்மை கொண்ட பல தனிப் பொருள்களின் (Elements) சேர்க்கையாலானவை என்றுதான் விஞ்ஞானிகள் எண்ணினர். ஆனால் இப்போதோ உருவத்துடன் உள்ள வஸ்துக்களுக்கும் உருவமில்லாத வஸ்துவுக்குமுள்ள பேதங்களையும் நிராகரித்து, தனிப் பொருள்களுக்குள்ள தனித் தன்மையையும் மறுத்து சக்தியின் பரிணாமந்தான் எல்லாப் பொருள்களும் என்று சித்தாந்தம் செய்திருக்கின்றனர். எல்லா அறிவாளிகளும், விஞ்ஞானிகளும் பேததர்சனத்தை உதறித் தள்ளி அபேத தர்சனத்தையே அங்கீகரிக்கிறார்கள் என்பது இதனின்று விளங்கும். பௌதிக விஞ்ஞான மேதைகளான ஐன்ஸ்டீன், ஸர் ஜேம்ஸ் ஜீன்ஸ், எடிங்டன் முதலியவர்கள் சங்கர பகவத்பாதர் பிரகடனம் செய்த அத்வைதக் கொள்கைக்கு வெகு சமீபமாக வந்து விட்டனர். காணும் உலகம் அனைத்தும் தத்துவ ரீதியில் உண்மையல்ல, வியவகார தசையில் மட்டுமே தற்கால உண்மைகள் என்பதை அவர்கள் விஞ்ஞான ஆராய்ச்சிகள் மூலம் ஒப்புக் கொண்டு அதனின்று பேதங்களையே ஒதுக்கித் தள்ளும் நிலைமைக்கு வந்திருக்கின்றனர்.

விஞ்ஞான வளர்ச்சி சங்கரர் கண்ட முடிவுகளை ஆமோதிக்கும் அளவுக்கு வளர்ந்து நெருங்கிக்கொண்டேவருகிறது. உலக மக்களிடையே பேதமே இல்லை என்ற உணர்ச்சி பெருகி அதனால் சாந்தியும் சமாதானமும் உலகத்தில் நிலவுவதற்கு நவீன விஞ்ஞான முன்னேற்றம் வகை செய்கிறது. உலகத்தின் பல பாகங்களிலுள்ள தலைவர்களும், அதிகாரிகளும், அறிஞர்களும், தீரர்களும், சிந்தனையாளர்களும், பொது மக்களும் உண்மையான உள்ளுணர்வினால், தங்களுக்குள் பேதமில்லை என்பதை அறிந்தால் வேறுபாடுகள் மறைந்து போகும். விரோதி நாடுகளுடன்கூட ஐக்கிய பாவம்தான் உண்டாகும். விரோதி நாடுகள்படும் கஷ்டங்களைப் பார்த்து அவற்றுடன் ஒன்றிப் போனால், உலக சமாதானம் செழிப்பதற்கு அப்படிப் பட்டவர்கள் அஸ்திவாரமாவார்கள். இப்புனித காலடிய சங்கரஜயந்தியன்று அவர் பெயரிலேயே பொதிந்துள்ள 'சம்' (சாந்தி) எல்லோரிடத்திலும் நிலை பெறட்டும்.



தொண்டை மற்றும் மார்பு உபாதைகளுக்குக் குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை

உட்கொண்டால், உங்கள் இருமல் உடனேயே அகலும்

பெப்ஸ் வில்லை ஒன்றைச் சுவைத்து ஆவி போன்ற அதன் சத்து குணமளிக்க வேலை செய்வதை உணருங்கள். வலியைக் குறைக்கவும், தொண்டைப் புண், பிராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷம் இவைகளுக்குக் காரணமாகிய கிருமிகளை அகற்றவும் உதவியளிக்கிறது. பெப்ஸ் உடனடி நிவாரணம் அளித்து விரைவில் குணமடையச் செய்கிறது.



பிராங்கைடிஸ், தொண்டைப்புண் மண்டைநீர், அடைப்பு, ஜலதோஷம் மற்றும் இருமலுக்கு உடனேயே நிவாரணமளிக்கிறது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

FPY-54-TAM

பி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்.

சோல் ஏஜண்டுகள்: தாதா அண்டு கம்பெனி
86, நைனியப்ப நாயக் தெரு, சென்னை-3



வள்ளுவர் வாசகம்

ராஜாஜி

85

குணவான்களுடைய நட்பு நாளுக்கு நாள் வளரும். சிறுமைக் குணம் பெற்றவர்களின் நட்பு வர வரக் குறைந்து போகும். இதற்கு வளர்பிறை தேய்பிறை உவமை வைத்துச் சொல்கிறார்

நிறைநீர நீரவர்
கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு

நீரவர்-நல்ல குணம் படைத்தவர்கள். நிறை நீர - பிறையானது நாளுக்கு நாள் நிறைவது போல் வளர்வது; பின்நீர-பௌர்ணமிக்குப் பின் பிறை குறைந்துகொண்டு போவது போல்.

நட்பின் தன்மை இது: நல்லவர்களுக்குள் நட்பு வளரும். கெட்டவர்களுக்குள் அது வரவர வாடிப் போகும். செடி வளர்வதற்கு வேண்டிய தண்ணீரும் வெயிலும் போல் நட்பு வளர்வதற்கு நல்ல குணம் இருவரிடமும் இருக்க வேண்டும். விதை நல்லதாயினும் அது வளர்வதற்கு வேண்டிய வாய்ப்பை எடுத்துச் சொன்னார்.

* * *

நல்ல பண்பு உடையவர்களிடையில் உண்டான நட்பு அவர்களுக்குப் பழகப் பழக அதிக இன்பம் தரும்—படிக்கப் படிக்க உயர்ந்த நூல்கள் அறிவும் இன்பமும் தருவது போல்.

நவில்தொறும் நூல்நயம்
போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

நட்பைப் பற்றிச் சொல்லிய இந்தக் குறள் நூல்களைப் பற்றிய பெருண்மையும் சொன்னதாயிற்று. நல்ல நூல்களுக்கு அடையாளம் அவற்றைப் படிக்கப் படிக்க அவற்றின் நயம் மேன்மேலும் விளங்கும். இதற்கு உதாரணம் வள்ளுவரின் திருக்குறளேயாகும்.

* *

நகுதற் பொருட்டன்று
நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற்
பொருட்டு

நண்பர்களின் கடமையை எடுத்துக் காட்டுகிறது இந்தக் குறள். நட்பின் காரணத்தினால் குற்றத்தைக் கண்டனம் செய்து அதைத் தவிர்க்காமல் சும்மா இருத்தல் கூடாது. நண்பர்களின் கடமை ஒருவரையொருவர் காப்பது. முக்கியமாகத் தவறு செய்யாமல் காப்பது.


நகுதல்—சந்தோஷமாகவும் வேடிக்கையாகவும் காலம் கழித்து விடுவது மட்டும் அல்ல நட்பின் பயன்.

மிகுதி—வரம்பு கடந்து செய்யும் வினை. அதாவது அறத்தின் வரம்பு மீறிய செயல் ஏதேனும் நண்பன் செய்யப் போவதைக் கண்டால் உடனே நண்பனுக்கு இடித்துக் கூறி நல்வழியில் திருப்புவது கடமை.


'மேற்சென்று' என்பதன் வேகத்தைக் கவனிக்க வேண்டும்.

இதுவே நட்பின் பயன் என்கிறார் முனிவர்.

அறம் வழுவிய செயல் அதைச் செய்துவிட்ட பின்னரே தெரிந்தாலும் அதைக் கண்டனம் செய்து மறுபடியும் அத்தகைய காரியம் நடவாதபடி காக்க வேண்டும்.




துறையூர் திரு ஆர். கிருஷ்ணசாமி ரெட்டியார் புதல்வி சௌ. ஜயலக்ஷ்மிக்கும் திரு வேங்கடராமனுக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.




பத்திரிகை நிருபர் திரு ரங்கஸ்வாமி பி.ஏ., எல்.டி. அவர்களின் குமாரர் திரு ஆர். ராதாகிருஷ்ணனுக்கும் சௌ. சகுணாவுக்கும் திருமணம் நடந்தது.


வாழ்க



கார்டன் உட்ராப் அண்டு கம்பெனியைச் சேர்ந்த திரு அண்ணாமலை அவர்களின் புதல்வி சௌ. மாயாராணிக்கும் திரு பழனிக்கும் திருமணம் நடந்தது.



எழுத்தாளர் என். வி. ஆர். சுவாமியின் சகோதரி சௌ. சாவித்திரிக்கும், திரு கே. சுந்தரத்துக்கும் விவாகம் சிறப்பாக நடந்தேறியது.




திருமங்கலக் கோட்டை கல்வி ஏஜண்ட் திரு ஆர். சுந்தரராஜனுக்கும் சௌ. வடிவாம்பாளுக்கும் திருமணம் விமரிசையாக நடந்தேறியது.




மதராஸ் அட்வர்டைஸிங் கம்பெனியைச் சேர்ந்த திரு நாராயணசாமிக்கும், சௌ. சாவித்திரிக்கும் திருமணம் சிறப்பாக நடந்தது.


மணமக்கள்




திரு. ஏ. ராமானுஜத்துக்கும் சௌ. சரோஜாவுக்கும் சென்னையில் விவாகம் விமரிசையாக நடைபெற்றது.



புது தில்லி இந்திய விவசாய ஆராய்ச்சி கௌன்ஸிலைச் சேர்ந்த திரு விசுவநாதனுக்கும், சௌ. சரோஜாவுக்கும் விவாகம் நடந்தது.




எழுத்தாளர் மகரம் அவர்களின் மைத்துனி சௌ. ஜயலக்ஷ்மிக்கும் திரு ராதா கிருஷ்ணனுக்கும் சமீபத்தில் விவாகம் சிறப்பாக நடைபெற்றது.



மிராசுதார் கே. எஸ். ஜெயராமய்யரின் புதல்வி சௌ. விஜயலக்ஷ்மிக்கும், திரு ராகவனுக்கும் திருவாரூரில் திருமணம் நடைபெற்றது.



'பெங்களூர் ஹிந்து' பத்திரிகை நிருபர் திரு கே. எஸ். ராமசுவாமி அவர்களின் புதல்வர் திரு நாராயணனுக்கும் டாக்டர் ஹேமாவதிக்கும் திருமணம் நடந்தது.




ஸ்பென்சர் கம்பெனியைச் சேர்ந்த திரு எம். கே. ஸ்ரீதரன் அவர்களின் புதல்வி சௌ. வஸந்தாவுக்கும் திரு எ. ரங்கநாதனுக்கும் திருமணம் நடந்தது.

கவர்ச்சியுள்ள அழகான


கான்கிரீட் வீடுகளை

ஏசிசி அல்லது சங்கர் பிராண்டு ஸிமெண்ட்

கொண்டு கட்டுங்கள்



கான்கிரீட் சுவர்கள், கான்கிரீட் தளம் மற்றும் கான்கிரீட் கூரைகளால் ஆன வீடே, பக்காவாக அமைத்த வீட்டிற்குள்ள முக்கிய மூன்று அம்சங்கள் கொண்டவையாகும். முதல அம்சம் சிக்கனம்: அதாவது முதலீடு செலவு மிதமானதே, தவிர பராமரிப்புச் செலவும் குறைவு. தீ விபத்தின்றிப் பாதுகாப்பு: காரணம் கான்கிரீட் எரியாது. உறுதியானது: ஏனெனில் கான்கிரீட்டின் மூல குணமே வலுமையாகும்,



நிலைத்திருக்கும் ஆக்க வேலைக்கு ஏசிசி அல்லது சங்கர் பிராண்டு ஸிமெண்ட் உபயோகியுங்கள். இவை கண்ட்ரோல் விலையில் ஏராளமாகக் கிடைக்கின்றன.

* உங்கள் கட்டிட பிரச்னைகளைத் தீர்க்க எங்கள் இலவச யோசனைக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: தி கான்கிரீட் அசோஸியேஷன் ஆப் இந்தியா, 9, மவுண்ட் ரோடு, மதராஸ்.

ACC

IC

தி ஸிமெண்ட் மார்க்கெடிங் கம்பெனி ஆப் இந்தியா பிரை. லிட்.

தி அஸோஸியேடெட் ஸிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்

தி இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட்

USTA'S-CHI-336-TAM

சிவகெங்கைச் சீமை



வீரபாண்டிய கட்டபொம்மன் படத்துக்குப் போட்டியாக இந்தப் படம் வருகிறது என்ற அபிப்பிராயம் எப்படியோ ரசிகர்களிடையே பரவி விட்டது. உண்மை அதுவல்ல. கட்டபொம்மன் வரலாறுக்கும் இந்தக் கதைக்கும் உள்ள சம்பந்தம் வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் உள்ள சம்பந்தம் போன்றதுதான்!

கட்டபொம்மன் கயத்தாற்றில் வீர மரணம் அடைந்த பின்னர் ஊமைத்துரை கும்பினியாரின் கொடுமைகளிலிருந்து தப்பிச் சிவகெங்கைச் சீமை அரசர் மருது பாண்டியரிடம் சரண் அடைந்து, காட்டிக் கொடுக்கும் கயவர்களின் சூழ்ச்சியால் கும்பினியாரிடம் சிக்குகிறான். பிறகு போர் நடக்கிறது. மருது சகோதரர்கள் கும்பினியாரால் தூக்கிலிடப்படுகின்றனர். அவர்களிடம் தளபதியாயிருந்த முத்தழகும் தூக்கு மேடை ஏறுகிறான். இதற்கு இடையில் கொஞ்சம் காதலும் இடம் பெறுகிறது.

ஆரம்பக் காட்சியிலேயே படம் தளர் நடை போட ஆரம்பித்து விடுகிறது. "சாந்துப் பொட்டு தளதளக்க" என்ற பாட்டுக்கு ஏற்ப, பெண்கள் ஆடும் நடனத்தைத்தான் குறிப்பிடுகிறேன். கைகளைத் தூக்கிக் கொண்டு அவர்கள் ஆடுவது சகிக்கக் கூடியதாயில்லை.


கண்ணதாசன் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பான "சிவகெங்கைச் சீமை" ஓடும் தியேட்டர்களில் கரகோஷத்துக்குப் பஞ்சமே இல்லை. "மன்றம் மலரும் முரசொலி கேட்கும்" என்ற வரிகள் பாடப்படும் போது ஒரு கரகோஷம். அந்தப் பாட்டு முடிந்ததும் ஒரு கரகோஷம்! இதேமாதிரி எஸ். எஸ். ராஜேந்திரன் திரையில் தோன்றியதும் ஒரு கரகோஷம்! மறைந்தால் ஒரு கரகோஷம்! நின்றால் ஒரு கரகோஷம்!

கரகோஷத்துக்குச் செவி சாய்க்காமல் கொஞ்சம் படத்தைக் கவனிப்போமானால் கரகோஷத்துக்கு அடுத்தபடியாகச் "சிவகெங்கைச் சீமை"யில் நாம் அதிகமாய்க் காணக் கூடியது மீசைதான். வீரமும் தீரமும் பொங்கும் கட்டபொம்மன் வரலாறு மாதிரி இருந்தால், மீசை கண்ணை உறுத்தாது. கதையில் ஒன்றும் இல்லையாகையினால் பாத்திரங்களின் வீரத் தோற்றம் பயன் இல்லாமற் போய் விடுகிறது. இந்தப் படத்துக்குச் "சிவகெங்கை மீசை" என்றே பெயர் வைத்திருக்கலாம்!

மருது பாண்டியராக வரும் டி. கே. பகவதி பெரிய மீசையோடு கம்பீரமாகத் தோன்றுகிறார். பலவிதத்திலும் அதிருப்தியை அளிக்கும் இந்தப் படத்தில் பகவதிதான் வீரம் ததும்பப் பேசி, மறவர் குலத்துக்கு மதிப்பு ஏற்படும் விதத்தில் நன்றாக நடித்திருக்கிறார்.

மருது பாண்டியனிடம் தளபதியாக இருக்கும் முத்தழகுதான் சிவகெங்கைச் சீமையின் கதாநாயகன். எஸ். எஸ். ராஜேந்திரன் முத்தழகாக வருகிறார்.

"சிவகெங்கைச் சீமை"யில் பார்ப்பதற்குப் பிரமாதமான காட்சிகள் எதுவும் இல்லை. ஆனால் கேட்பதற்கு 'டண் டண்' என்று முழங்கும் பலத்த வசனங்கள் இருக்கின்றன! அந்த வசனங்களில் பெரும் பகுதியை ராஜேந்திரன் முழங்குகிறார். மூச்சு இறைக்க முழங்கும் வசனங்களின் வேகத்தில் நடிப்பு போய் விடுகிறது. சிட்டு என்ற பெண்ணின் காதலைப் பெறுவதற்காக அவள் முகத்தில் ராஜேந்திரன் சேற்றைப் பூசுவதும், பெண்கள் வீசிய வலையில் சிக்கிக் குதிரையின் மேலிருந்து விழுவதும் அசட்டுத்தனமாக இருக்கின்றன. சிட்டுடன் மணம் முடித்துக் கொண்டு கடைசியாகப் போர்க்களத்துக்குச் செல்லும்போது, சிட்டு முத்தழகுக்கு வாய்க்கரிசிபோட்டு அனுப்புகிறாள். இது எந்த வரலாற்றிலும் காணாத



நிகழ்ச்சியாயிருப்பதுடன் அசம்பாவிதமாகவும் இருக்கிறது. பகுத்தறிவு முதிர்ந்து விட்டால் இத்தகைய யோசனை தோன்றும் போலும்! நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு உகந்த எத்தனையோ நல்ல சம்பிரதாயங்களுக்கு வாய்க்கரிசி போட்டு, வரலாற்றிலிருந்தே அவைகளை வழியனுப்ப முயலும் பகுத்தறிவு வாதிகள் வாய்க்கரிசி போடும் சம்பிரதாயத்தை நம்பித்தானாக வேண்டுமா? முத்தழகு ஆரம்பத்தில் மருதுபாண்டியன் அரண்மனைக்குள் உழவனாக மாறுவேடத்தில் வந்து நாணயத்தை வளைத்துத் தனது தோள் வலிமையைக் காட்டும் இடத்தில் எஸ். எஸ். ராஜேந்திரனின் நடிப்பு, பேச்சு எல்லாமே நன்றாயிருக்கின்றன. அவர் யாரென்று புரிந்து கொள்ள வெகு நேரம் சிரமப்பட வேண்டியிருந்தது.

பி. எஸ். வீரப்பா முத்தழகின் தமையனாக, சதிகார வில்லனாக வந்து வழக்கம் போல் நடிக்கிறார்.

சிட்டாக வரும் கமலா லக்ஷ்மணன் இந்தப் படத்தில் நிறைய நடனமாடியிருப்பதுடன், பேசி, நடித்தும் இருக்கிறார்! கமலா லக்ஷ்மணன் கடைசியில் கறுப்பு உடையுடன் ஆவேசமாக ஆடியிருக்கும் பயங்கர நடனம் சிவகெங்கைச் சீமையின் அழிவை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

கும்பினியாருடன் தமிழர் சைனியம் போரிடும் காட்சி சாரமற்றதாய்ச் சாதாரணமாய்க் கிராமங்களில் ஏற்படும் கைகலப்பு மாதிரி தோன்றுகிறது.

வில்லன் வீரப்பாவின் மனைவி கண்ணாத்தாளாக வரும் எம். என். ராஜம் முத்தழகின் அன்பு அண்ணியாகவும், இறுதியில் நாட்டுக்காகக் கணவனையே குத்திக் கொல்லும் வீராங்கனையாகவும் நடித்திருக்கிறார். கண்ணாத்தாளிடம் வீர வாசகம் பேசும் தாம்பரம் லலிதா அவ்வளவு பலமாகக் கத்தியிருக்க வேண்டியதில்லை!

ஊமைத்துரையாக வரும் ஜி. முத்துகிருஷ்ணன் அநேகமாக ஊமையாகவே இருந்து விடுகிறார். அது நல்லதுதான்!

கண்ணதாசன் கருத்தழகும் சொல்லழகும் கொண்ட அருமையான பதினொன்று பாடல்கள் இயற்றியிருக்கிறார். அவற்றுள் 'கனவு கண்டேன் நான் கனவு கண்டேன்' என்ற பாட்டும், 'தென்றல் வந்து வீசாதோ' என்ற பாட்டும் மிகவும் இனிமையாக இருக்கின்றன. இரண்டாவதாகக் குறிப்பிட்ட பாட்டை எஸ். வரலக்ஷ்மியும், டி. எஸ். பகவதியும் மிகவும் உருக்கமாகப் பாடியிருக்கின்றனர். அந்தப் பாட்டை 'ஒன்ஸ்மோர்' கேட்கலாமா என்று எனக்குத் தோன்றியது. சினிமாவில் தான் அது சாத்தியமில்லையே! கண்ணதாசன் எழுதியிருக்கும் வசனமும் நன்றாயிருக்கிறது.


சினிமாப் பாட்டுப் புத்தகங்களில் வெளியிடும் கதைச் சுருக்கத்தைப் பற்றி விமரிசனம் எழுதுகிறவர்களும் சரி, படிக்கிறவர்களும் சரி அதிக அக்கறை செலுத்துவது வழக்கமில்லை. ஆனால், "சிவகெங்கைச் சீமை"ப் பாட்டுப் புத்தகத்தில் கதைச் சுருக்கத்தை ஆவலோடு கவனிக்கும்படியாகச் செய்திருக்கிறார்கள். படத்தின் கதைச் சுருக்கத்தைக் கவிஞர் கண்ணதாசன் தேனினும் இனிக்கும் தீந்தமிழ்க் கவிதையாகத் தீட்டிப் பாட்டுப் புத்தகத்துக்கே தனிமதிப்பு தந்து விட்டார். இது சினிமாப் பாட்டு நூல் ஏட்டில் இதுவரையில் காணாத புதுமை! படத்தைப் பார்க்கா விட்டாலும் அவசியம் புத்தகத்தை வாங்கிப் பார்க்க வேண்டும்.

ஏழு மாதங்களில் தயாரிக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்தப் படத்தில் பல குறைகள் இருப்பது இயல்பே. ஆனால் பரீட்சை எழுதிய மாணவன் அவசரத்தில் கேள்விகளுக்கு விடை சரியாக எழுதவில்லை என்று கூறினால் பரீட்சாதிகாரி ஒப்புக் கொள்ள மாட்டார் அல்லவா? இவர்களை யார் அத்தனை விரைவில் வெந்ததும் வேகாததுமாகப் படம் தயாரிக்கச் சொன்னார்? அவசரப்பட்டு இந்தப் படத்தைத் தயாரிக்கா விட்டால் தமிழ்நாடு குடி முழுகிப் போய் விடுமா?

ஒளிப்பதிவு நிபுணரான தம்புவின் கைவண்ணம் இந்தப் படத்தில் வெற்றிபெறவில்லை என்பதைக் கூறாமல் ஒளிப்பதிவில் பயனில்லை. என்ன செய்யலாம்!

"சிவகெங்கைச் சீமை" அள்ளித் தெளித்த அவசரக் கோலம்!





பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

"பாலுஸேரி பில்டிங்ஸ்"
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி
தபால் பெட்டி நெ. 414. மதராஸ் - 5
தந்தி : 'EVERMANS' போன் : 85834

சேரக் கடைசி தேதி 26-6-1959 ... முதல் ஏலத் தேதி 27-6-1959

25 மாதங்கள்	மாதாந்திர சீட்டுகள் (4-வது சனிக்கிழமை ஏலங்கள்)	25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-
D	ரூ. 25/-	ரூ. 625/-	G	ரூ. 10/-	ரூ. 250/-

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப்படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது.

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்

டெல்லி கிளை ஆபீஸ்கள் B-6, பிளாக் III, ஆஸப் அலி ரோடு, புது டெல்லி - 1. ● 10197, அஜ்மல்கான் ரோடு கரோல்பாக், புது டெல்லி-5 ● பெங்களூர் கிளை ஆபீஸ்: "ஜெயகத் பில்டிங்ஸ்", கிங்வே ஜூபிலி பார்க் ரோடு, பெங்களூர்-2 ● பம்பாய் கிளை ஆபீஸ்: "விஜய விஹார்" 17-A, லைரன் - மாதுங்கா எஸ்டேட் (கிங்ஸ் ஸர்க்கிள் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில்) பம்பாய் - 22

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை



வலிமைக்கு புலி மார்க்கு தேயிலே



புலி மார்க்கு
தேயிலே

LIPTON (INDIA) LIMITED *(Incorporated in England)*

LTC-6 TM



விநியோகஸ்தர்கள் — செங்கற்பட்டு, தென்னாற்காடு, வட ஆற்காடு, சித்தூர், பாண்டிச்சேரி: ஆனந்தா பிக்சர்ஸ், வேலூர், N.A. ★ மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்யாகுமரி, திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, காரைக்கால்; செட்டியார் பிலிம்ஸ் பிரைவேட் லிட்., திருச்சிராப்பள்ளி ★ சேலம், கோயமுத்தூர், நீலகிரி சந்திரபிரபா பிக்சர்ஸ், கோயமுத்தூர்

இதர விவரங்களுக்கு சேவாஸ்கிரீன்ஸ் - - - சென்னை -14

பாகவதமாகிய

பக்தி வயல்

பௌராணிகர்

40. காளிய நடனம்

பிருந்தாவனத்தில் மாடு மேய்த்து விளையாடிக் கொண்டிருக்கையில், கண்ணனும் மற்ற சிறுவர்களும், ஒருநாள், கோடை வெய்யில் தாங்காமல் யமுனைக் கரையை அடைந்தார்கள். அங்கு சென்று பசுக்களும் பையன்களும் ஆற்றின் நீரை அருந்தினர். ஆனால் அவ்விடத்தில் நீர் நஞ்சுடன் கலந்திருந்தது. அருந்தியதுமே அனைவரும் இறந்தனர். கண்ணன் தன்னுடைய அமுதப் பார்வையினால் அவர்களைத் திரும்பவும் பிழைக்க வைத்தான். ஆற்றுநீர் விஷத்தோடு கலந்திருந்ததற்குக் காரணம் நீரில் கிடந்த ஒரு பாம்பு.

யமுனையில் ஓரிடத்தில் மடுவொன்று இருந்தது. அம்மடுவில் காளியன் என்ற பாம்பு வசித்து வந்தது. காளியன் கக்கிய விஷத்தால் நீரில் சூடேறி ஆவி கண்டது. அதன்மேல் ஆகாயத்தில் பறக்கும் பறவைகள் மாண்டு விழுந்தன. நஞ்சு நீர்த்துளி தாங்கிய காற்றுப்பட்டுக் கரையில் இருப்பவரும் மாண்டனர். அம்மடுவில் நீர் அருந்திய பசுக்களும் கோபாலச் சிறுவரும் உயிர் துறந்தனர்; பிறகு கண்ணன் அருளால் உயிர் பெற்றனர்.

கண்ணன் அவதாரம் செய்தது தீயவரைத் தண்டிக்கவன்றோ! ஆகவே கரையிலிருந்த கதம்ப மரத்தின்மீது தாவி ஏறினான். ஆடையை இடுப்பில் இறுகக் கட்டினான். மார் தட்டினான். மரத்திலிருந்து மடுவிலே குதித்தான். கண்ணன் குதித்த வேகத்தில் நஞ்சுநீர் நானூறு முழம் பரவியது. தனிமையிலே தானிருக்கும் மடுவில் குதித்துக் குட்டி யானையைப்போல் அட்டகாசம் செய்யும் கண்ணனைக் கண்ணுற்ற காளியன் சினம் பொங்கிச் சின்னஞ் சிறு வயதாய்ச் சேவை தரும் பெருமானை எதிர்க்க வந்தான். துளிர்த்தான் அசைந்து கொண்டு நீரிலே நீந்திவரும் கார்முகில் மேனியனைத் தன் உடலால் சுற்றிக் கொண்டான். கரையிலே காத்திருந்த ஆயர்குலப் பாலகர் இச் சிக்கலைப் பார்த்துத் துயர் தாங்காமல் மெய் மயங்கிக் கீழே விழுந்தனர். சேய்களும், பசுக்களும் கண்ணனையே நோக்கிக் கண்ணீர் வடித்தன. அப்பொழுது புவியிலும் வானத்திலும் மாந்தர் உடலிலும் ஆபத்தைக் குறிக்கும் தீச் சகுனங்கள் பல தோன்றின. கண்ணன் பலராமனை விட்டுத் தனிமையில் சிறுவரோடு கானகம் சென்றிருக்கிறானே என்று நந்தனும் மற்ற இடையரும் கவலையால் சோர்வுற்றனர். அபசகுனங்களைக் கண்டு கண்ணன் இறந்தானோ என்று பயந்தனர். ஆண்களும் பெண்களும் சிறியவரும் பெரியவரும் கண்ணனைத் தேட வெளியேறினர். கண்ணனை யாரென்று அறிந்த பலராமன் மட்டும் தன்னுள் நகைத்துச் சும்மா இருந்தான். கண்ணனின் கால் சுவட்டைப் பின்பற்றிக் கொண்டு அனைவரும் தேடலாயினர்.

பசுக்களின் அடிச்சுவட்டின் இடையே கண்ணனின் கால் அடிகளின் குறிப்பான தாமரையும், யவம் (பார்லி) என்ற தானியத்தின் விதையும், அங்குசமும், இந்திராயுதமும் கொடியும் ஆங்காங்கு புவிமீது பதிந்திருப்பதைப் பார்த்தனர். அவ்வடிகள் அவரை யமுனைக் கரைக்கு வழிகாட்டின. தூரத்திலிருந்தே கண்ணன் பாம்பால் கட்டப்பட்டிருப்பதைக் கண்டனர். கரையும் ஆனினத்தையும் கீழே கிடக்கும் பையன்களையும் பார்த்தனர். வந்தவரும் சிறிது நேரம் நினைவற்றுச் சாய்ந்தனர். மனத்தைப் பறித்த மாதவன் மடுவிலே கட்டுண்டதைக் கண்ட ஆயர் மங்கையர் துயரம் மிகுந்து தவித்தனர். மூவுலகும் பாழானதென்று எண்ணி வருந்தினர். ஆற்றில் குதிக்கத் துணிந்த யசோதையைத் தடுத்து அவளோடு தாமும் கண்ணீர் சொரிந்தனர். அச்சமயம் நந்தன் முதலியோர் மடுவில் இறங்கத் துணிந்தனர். கண்ணனையறிந்த பலராமன் அவர்களைத் தடுத்தார்.

தன்னைக் குறித்துக் கோகுலவாசிகள் வருந்துகின்றனர் என்று அறிந்த கண்ணன், பாம்பின் கட்டினின்று தன்னை விடுவித்துக் கொள்ளும் பொருட்டுத் தன் உடலைப் பெரிதாக்கினான். காளியனுக்கு உடல் வலி தாங்க முடியவில்லை. கண்ணனை விட்டு அகன்றான். படமெடுத்துக் கண்ணனின் எதிரே நின்றான். மூச்சினிலே விஷம் கக்க, எரியும் அடுப்பெனக்

கொதிக்கும் மேனியோடு கண்ணனை அசையாது உற்று நோக்கினான். கண்ணன் விளையாட்டாகக் காளியனைச் சுற்றி வந்தான். பாம்பின் கூரிய நாக்கு இங்கு மங்குமாய் அசைந்தது. காளியனும் கடிக்கத் தருணம் தேடிக் கண்ணனைச் சுற்றலானான்.

அப்பொழுது கண்ணன் பாம்பின் உடலை வளைத்துப் பிடித்துப் படமெடுத்து ஓங்கி நிற்கும் அதன் தலைமீது குதித்து ஏறினான். காளியன் தலைமீது தாண்டவம் ஆடினான். காளியனுடைய படங்கள் மீது இரத்தினங்கள் பதிந்திருந்தன. அவைகளின் ஒளிபட்டு ஆடும் திருவடி சிவப்பாக விளங்கியது. திருமால் ஆடுவதை அறிந்த கந்தர்வரும், சித்தரும், தேவரும், சாரணரும் அப்ஸரரும், பேரிகை, மத்தளம், வாத்தியங்கள், மலர்களெல்லாம் எடுத்துக் கொண்டு அங்கு கூடினர்.

காளியனுக்கு நூறு தலைகள் இருந்தன. அவைகளெல்லாம் படம் எடுத்து ஓங்கி நின்றன. பணிபாத படம்மீது கண்ணன் குதித்தாடினான். காளியன் வாயிலும் மூக்கிலும் நின்று ரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. ஒவ்வொரு தலையாகச் சாய்ந்தது. தூக்கிய தலைமீதெல்லாம் கண்ணன் கால் வைத்துப் பணிய வைத்தான். பாம்பின் ரத்தம்பட்ட திருப்பாதம் பூவிட்டுப் பூஜை செய்யப்பட்டதெனத் திகழ்ந்தது.

காளியனுக்கு உயிர் போகும் தருணம் நெருங்கி விட்டது. அப்பொழுது அப்பெரும் பாம்பு அனைவருக்கும் அடைக்கலமான நாராயணனைத் தன் மனத்திலே சிந்தித்தது. உலகைத் தன் உதிரத்தில் அடக்கிய கண்ணனுடைய பாரத்தைத் தாங்காது ஒடுங்கி உயிர் துறக்கும் காளியனுடைய நிலையை அவன் மனைவியர் கண்டு தலைவிரிகோலத்துடன் கண்ணனிடம் வந்து சரண் புகுந்தனர். அருகிலிருந்த ஒரு சிறு திட்டில் ஏறித் தங்கள் குழந்தைகளுடன் புவி மீது விழுந்து தண்டமிட்டனர். எழுந்து கைகூப்பி வணக்கத்துடன் தங்கள் கணவனுக்கு உயிர்ப்பிச்சை அளிக்க வேண்டுமென்று மன்றாடினர்.

“இக்கொடிய காளியனுக்குத் தேவரீர் அளித்த தண்டனை தகுதியானதே. உங்களுக்கு நண்பனும் ஒன்றே, பகைவனும் ஒன்றே. உமது கையால் தண்டனை பெற்றவருக்கு அப்பொழுதே பாபங்கள் அகன்று விடுகின்றன. எங்கள் கணவன் மீது நீங்கள் கொண்ட சினமே அவருடைய தீமையைத் தீர்த்துவிட்டது. எத்தவம் செய்து இப்பெருமையை அடைந்தனரோ? ஸ்ரீ தேவியும் பிரமனும் பாடுபட்டுத் தேடும் உமது தாள் புழுதி படும்படி என்ன புண்ணியம் இவர் செய்தனரோ? உங்களை அறியாத இப்பாவியின் பிழையை மன்னித்து விடுங்கள்; நாங்கள் சுமங்கலிகளாக வாழத் தயை புரியுங்கள்'' என்றனர்.

காளியனுடைய மனைவியரின் வேண்டுகோளுக்கு இணங்கிக் கண்ணன் அவனை விட்டு விட்டான். காளியன் அறிவிழந்து மடுவில் கிடந்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் அவனுக்கு உணர்வு வந்தது. அவனும் கண்ணனைத் தோத்திரம் செய்தான்.

“நீ இனிமேல் இங்கே இருக்கக் கூடாது. கடலில் சென்று வாழ்வாய். உன் மனைவி மக்களையும் பரிவாரங்களையும் அழைத்துச் செல். யமுனையின் நீர் இன்றுதொட்டு மானிடருக்கும் ஆனினத்துக்கும் பருகுவதற்கு யோக்கியமாய் இருக்கட்டும்'' என்று கண்ணன் காளியனுக்குக் கட்டளையிட்டான். அவ்வாறே காளியனும் கடலை அடைந்தான்; யமுனையின் நீரும் நஞ்சு நீங்கி அமுதென ஆனது.

“காயு நீர்புக்குக் கடம்பேறிகாளியன்
தீய பணத்திற் சிலம்பாக்கப் பாய்ந்தாடி
வேயின் குழலூதித்தகனும் நின்ற’’

கண்ணனுடைய இத்திருவிளையாடலைச் செவியுற்ற பரீக்ஷித்து மன்னவன், “நாகர்களுக்கு இருப்பிடமான ரமணகம் என்ற தலத்தை விட்டுக் காளியன் யமுனையை அடைந்ததற்குக் காரணம் என்ன?” என்று சுகரை வினவினார். அதற்குச் சுகர் பின்வருமாறு பதில் அளித்தார்.

நாகர்களுக்கு அனேகர் பூசை போடுவது வழக்கம். ஒவ்வொரு அமாவாசையன்றும் தங்களுக்கு அகப்படும் பலியை அவர்கள் கருடனுக்குக் கொடுத்து அதன் பயனைக் கருடனிடமிருந்து பயமின்றி வாழ்ந்து வந்தனர். ஒரு சமயம் கருடன் நாகர் மீது சினம் கொண்டு கண்ணில் பட்ட பாம்பையெல்லாம் கபளீகரம் செய்து வந்தான். நாகர் பிரமனிடம் சென்று முறையிடவே, அவர் மேற்கூறிய வாறு நாகர் பலியில் கருடனுக்குப் பங்கு கொடுத்துச் சமாதானம் செய்ததாகப் புராண வரலாறு கூறுகிறது. ஆனால் பெருமை பொங்கிப் பலமும் மிகுந்த காளியன் மட்டும் இவ்வுடன்படிக்கையை நிறைவேற்றாமல் தானே எல்லாப் பலியையும் உண்டு வந்தான். இதை அறிந்த கருடன் காளியன்மீது புயலெனப் பாய்ந்தான். காளியனும் கருடனை எதிர்த்துத் தன் பற்களால் கருடனைக் கடித்தான்.


இப்பொழுது நடைபெறுகிறது......
சென்னை ஸ்ரீ கிருஷ்ணா, பாரகன், உமா
மற்றும் தென்னகமெங்கும்
கண்ணதாசன் புரொடக்ஷன்ஸ்
சிவகெங்கைச் சீமை
கதை, வசனம், பாடல்:
கண்ணதாசன்
டைரக்ஷன்: கே. சங்கர்
K S Ramu

கருடன் காளியனைப் பின்தள்ளித் தன் இடது சிறகால் புடைத்தான் வலி பொறுக்காமல் காளியன் யமுனையின் மடுவில் பதுங்கிக் கொண்டான். அவ்விடத்துக்குக் கருடன் வர முடியவில்லை. ஏனென்றால் ஸௌபரி என்ற முனிவர் கருடன் யமுனை மடுவை அண்டினால் உயிர் போய் விடும் என்று முன்னமேயே சாபம் கொடுத்திருந்தார்.

மடுவில் நின்று கண்ணன் களபம் பூசி, மாலை அணிந்து, பட்டாடை உடுத்து ரத்தினங்கள் பல பூண்டு வெளி வருவதைக் கண்ட கோபர்கள் களித்துக் கண்ணனைத் தழுவினர். நந்தன் யசோதை முதலியோருக்கு அப்பொழுது தான் நினைவு வந்தது. பலராமன் கண்ணனைக் கட்டி அணைத்து நகைத்தான்.

அன்றிரவு அனைவரும் யமுனைக்கரையிலேயே தங்கினர். நள்ளிரவில் சுற்றியிருந்த காடு தீப்பற்றிக் கொண்டது. வீடும் வாயிலும் நெருப்புக்கு இரையாய் விடுமென்று எல்லோரும் பயந்தார்கள். கண்ணனைச் சரண் புகுந்து, தங்களை அனுகி விழுங்க வரும் காட்டுத் தீயின் கொடுமையிலிருந்து காப்பாற்றும்படி வேண்டிக் கொண்டனர். அப்பெருந் தீயைக் கண்ணன் தானே விழுங்கி அனைவரையும் காப்பாற்றினான்.

மறுநாள் எல்லோரும் ஆயர்பாடியை அடைந்தனர். அப்பொழுது மனிதருக்குக் கஷ்டமான கோடைகாலம் ஆரம்பமாயிற்று. ஆனால் கண்ணன் கால்பட்ட பிருந்தாவனத்தில் இளவேனிற் காலமென்றே தோன்றியது. நீர்வாடை கலந்து வீசும் காற்றினால் கதிரவனின் கொடுமை குன்றியிருந்தது. அலை மோதிச் சேரும் நதிக்கரையின் ஈரத்தைச் சூரியன் உலர்த்தவில்லை.

அவ்விடத்தில் கண்ணனும் பலராமனும் மற்றச் சிறுவர்களோடு விளையாடியும், ஆடியும், பாடியும், மல்யுத்தம் செய்தும் காலத்தைக் கழித்தார்கள். ஒரு தருணம் கண்ணன் ஆடுவான்; சிலர் குழலும் கொம்பும் ஊதுவர்; மற்றும் சிலர் ஆட்டத்துக்கு இணையாகக் கை கொட்டி நிற்பர். சிலசமயம் கண்ணனும் பலராமனும் கைகோத்துத் தட்டாமாலை சுற்றுவார்கள். இல்லையேல் மற்றவரை ஆட வைத்துக் கண்ணன் தான் பாடுவான். வில்வப் பழத்தைப் பந்தாக உருட்டுவார்கள். நெல்லிக்கனியைக் கையில் ஏந்தி விளையாடுவார்கள். விலங்கு போல் கத்துவார்கள். அரசரைப்போல் நடிப்பார்கள்.

ஒருநாள் மற்ற சிறுவர்களுடன் கண்ணனும் பலராமனும் மாடு மேய்த்துக் கொண்டிருக்கும்பொழுது, பிரலம்பன் என்ற அரக்கன் தானும் ஒரு கோபாலச் சிறுவன் வேடம் பூண்டு இவர்களோடு கலந்து கொண்டான். கண்ணனையும் பலராமனையும் அபகரித்துச் செல்ல வேண்டுமென்பது அவன் எண்ணம். இந்தத் தந்திரத்தைக் கண்ணன் அறிந்தும் அறியாதுபோல் பாசாங்கு செய்தான். எல்லோரையும் அழைத்து, "நண்பர்களே! நாம் இப்பொழுது இரண்டு கட்சிகளாகப் பிரிந்து விளையாடுவோம்" என்றார். அவ்வாறே அனைவரும் இரண்டு வரிசையாகப் பிரிந்தனர். ஒரு கட்சிக்குக் கண்ணன் தலைவன்; மற்றொரு கட்சிக்குப் பலராமன் தலைவன். ஏதாவது ஒரு பந்தயத்தில் வென்றவன் சவாரி செய்வது, தோல்வி அடைந்தவன் அவனைத் தூக்குவது என்று விளையாடினார்கள். இவ்வாறு விளையாடிக்கொண்டு ஒரு ஆலமரத்தை அடைந்தார்கள்.

ஒரு சமயம் பிரலம்பன் பலராமனைத் தூக்கிச் செல்லவேண்டி வந்தது. இது தான் நல்ல தருணம் என்று கருதி, அரக்கன் பலராமனைச் சுமந்து கொண்டு இறக்க வேண்டிய எல்லையைத் தாண்டி ஓடினான். ஆனால் பலராமனுடைய பாரம் அதிகரித்துக் கொண்டே போயிற்று. அரக்கனால் பாரம் தாங்க முடியவில்லை. தனது உண்மை உருவை எடுத்தான். ஆகாயமளாவி ஓங்கினான். உடனே பலராமன் அவன் தலைமீது ஓங்கிக் குத்தினான். அங்கேயே அரக்கன் மலையெனச் சரிந்து மாண்டான்.

இத் தீரச் செயலை எட்டி நின்று பார்த்துக் கொண்டிருந்த சிறுவர்கள் கை கொட்டிச் சிரித்து ஆமோதித்தார்கள்.

மற்றொரு சமயம் மேய்ந்து கொண்டிருந்த பசுக்கூட்டம் தூரத்தில் பசும் புல் தெரிவதைக் கண்டு ஒரு காட்டில் நுழைந்தது. பின்னர் தாகம் அதிகரிக்கவே, ஆடும், மாடும், எருமையும் கதற ஆரம்பித்தன. நீரைத் தேடி ஒரு நாணல் புதரை அடைந்தன. கண்ணனும் மற்ற கோபரும் பசுக்களைத் தேடியும் கிட்டவில்லை. அடிச்சுவட்டையும் மேய்ந்த புல்லையும் பின்பற்றிக்கொண்டே எல்லோரும் நடந்தனர். நாணல் புதரில் இருந்த பசுக்களை விரட்டி வெளியேற்றினர். கண்ணன் குரலைக் கேட்டதுமே ஆனினம் திரண்டு ஓடி வந்தது.

மாலையில் கண்ணன் குழலூதிக் கொண்டு ஆயர்பாடி சென்றான். சிறுவர்கள் கண்ணனைச் சுற்றிக் கொண்டு அவன் புகழ் பாடினர். எப்போ வருவானோ என்று ஒவ்வொரு கணத்தையும் ஒவ்வொரு யுகமாகக் கருதிக் காத்திருந்த கோபியர் கண்ணனைக் கண்ணுற்றதும் பேரானந்தம் அடைந்தனர்.

அம்மா எப்பொழுதும் ஹமாம் சோப்பையே வாங்குகிறாள்



புதுமுறையான மிருதுத்துவம் அளிக்கும்
இதன் தன்மையினால் மிருதுவான நுரை அளிக்கிறது.

இதை உபயோகித்து குளிக்கும்போது சுத்திகரித்து புத்துணர்ச்சி அளிக்கிறது
ஹமாம் சோப் மிகவும் நேர்த்தியானது நறுமணமுள்ளது.

நீண்ட நாட்கள் நீடித்து நிற்கிறது.
மிகவும் சிக்கனமானது.

ஹமாம்
சோப்பை உபயோகித்து புத்துணர்ச்சியுடனும் நறுமணத்துடனும் விளங்குங்கள்



எங்கள் குடும்பத்தில் யாவரும்
ஹமாம் சோப்பையே விரும்புகிறார்கள்

ஓர் டாடா தயாரிப்பு—எனவே
அது நல்லதென்று உங்களுக்கே தெரியும்.



அவர்களின் முதல் குழந்தை இவன். ஒளியும், சிரிப்பும், மகிழ்ச்சியும் நிரம்பிய புது வாழ்க்கைப் பாதையைத் தொடங்கியிருக்கிறான். அருணோதயத்தின் முதல் பனித் துளி போன்ற இவனுக்கு எதிலுமே மிகச் சிறந்தவை கிடைப்பதில் அதிசயமொன்றுமில்லை. ஆம், அவனுக்கு அவசியமான பராமரிப்பை அவன் பெற்றோர் அளிக்கும் பிராயம் இது.

வளர்ச்சிக்கும், வியாதிகள் வராமல் தடுப்பதற்கும் தகுதியான உணவு குழந்தைகளுக்குத் தேவை. ஆகாரம் பற்றி ஆழமில்லா அறிவு போதாது. உங்கள் குழந்தையின் ஆரோக்கியம், வளர்ச்சி, நல் வாழ்வு யாவுமே— உங்கள் வைத்தியர் ஒருவரால் மட்டுமே நிர்ணயிக்கக்கூடிய சரிசம நிலை உணவைப் பொருத்ததாகும்.

அவருடைய அறிவும், அனுபவமும் உங்கள் குழந்தையின் எதிர்காலத்தைப் பாதுகாக்க உதவட்டும். எப்பொழுதுமே

உங்கள் வைத்தியரைக்
கலந்தாலோசியுங்கள்.

அலெம்பிக் கெமிகல் வொர்க்ஸ் கம்பெனி லிமிடெட், பரோடா – 3

ACW 59-2 A TM EVEREST

கண்கள் உறங்காவோ?

அத்தியாயம் 9

வழித் துணையா? வாழ்க்கைத் துணையா?

"வணக்கம்! வணக்கம்! வாருங்கள்" என்று வீணாவை வரவேற்றான் சுந்தரம். அவன் தன் முகத்தை மகிழ்வோடு வைத்துக் கொள்ளத்தான் முயன்றான். ஆயினும், உள்ளத்துக் குமுறல் இன்னும் அடங்காததால் அது அழுது வழிந்தது.

"தூங்கிக் கொண்டிருந்தீர்களா? ஏன் முகம் ஒரு மாதிரி இருக்கிறது?" என்று சட்டென்று கேட்டாள் வீணா. என்ன இருந்தாலும் அவள் டாக்டருக்குப் படித்தவள் இல்லையா?

"இல்லை, இல்லை. வெளியே போய் வந்தேன். களைப்பாக இருந்தது. மேலே போய்ச் சற்று நேரம் வெறுமனே படுத்திருந்தேன், அவ்வளவுதான்" என்று மழுப்பி வைத்தான் அவன்.

"அவளை உள்ளே கூட்டிக்கிட்டுப் போ, சுந்தரம். அம்மா பார்க்கணுமின்னு" என்று கூறிவிட்டு கடையில் கிடந்த ஒற்றைக் கட்டிலில் உட்கார்ந்தார் புஷ்பவனம்.


"ஆமாம், வீணா! நீங்கள் வந்ததுமுதலே அம்மா உங்களைப் பார்க்க வேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கிறாள்; வாருங்கள்" என்று சுந்தரம் முன்னால் நடந்தான்.

"ஒரு நிமிஷம்!" வீணா அவனை நிறுத்தினாள். "மாமாவுக்கு முன்னால் உங்களை ஒன்று கேட்டுக்கொள்ளப் போகிறேன். தயவுசெய்து எனக்கு இந்த மரியாதையெல்லாம் வேண்டாம். நான் உங்களைவிட வயதில் சிறியவள்."

"இது என்ன வீணா இப்படிப் பேசுகிறீர்கள்? அயலார் வீட்டுப் பெண்களை ஒருமையில் அழைப்பது மரியாதையாகுமா?" என்றான் சுந்தரம்.

"அட சரிதான் தம்பி. அது சொல்லுது. 'நீ—நான்'னுதான் கூப்பிட்டுட்டுப் போயேன்" என்றார் புஷ்பவனம்.

சுந்தரம் 'ஆகட்டும்' என்றும் சொல்லவில்லை; 'முடியாது' என்றும் சொல்லவில்லை. அவன் "அம்மா!" என்று அழைத்தவாறு ரேழிக்கு வந்து அடுக்களையை எட்டிப் பார்த்தான். மரகதத்தம்மாள் அங்கே இல்லை. "காணோமே!" என்று கடைக்குத் திரும்பியபோது அவன் மனம், 'இன்னுமா அம்மா ஆற்றிலிருந்து திரும்பி வரவில்லை?' என்ற கேள்வியை எழுப்பியது. 'ஒருகால் என்னை அனுப்பிவிட்டு மாலாவுக்குச் சூடு கொடுத்துக் கொண்டிருப்பாளோ? கொடுக்கட்டும்;



நன்றாகக் கொடுக்கட்டும். மறுபடியும் என் முகத்தில் விழிக்கவே துணிவு வராதபடி பலமாகக் கொடுக்கட்டும்' என்று அவன் கறுவிக் கொண்டான்.

ஒற்றைக் கட்டிலில் சுருட்டி வைக்கப் பட்டிருந்த படுக்கையில் முதுகைச் சாய்த்து, கைகளைத் தலையின் பின்புறமாகக் கட்டியவாறு முகட்டு வளையைப் பார்த்துக் கொண்டிருந்த புஷ்பவனம், "என்ன சுந்தரம், அம்மா இல்லை?" என்று கேட்டார்.

"தண்ணீர் எடுத்து வரப் போயிருக்கிறாள் போலிருக்கிறது" என்றான் அவன் ஒன்றும் தெரியாதவன் போல்.

"இப்போ வந்துடுவா அம்மா. ஏன் நின்னுக்கிட்டிருக்கே? சுந்தரம்! இவளை மச்சிலுக்குக் கூட்டிக்கிட்டுப் போயேண்டா. அம்மா வரும் வரை புத்தகம் படிச்சிக்கிட்டு இருக்கட்டும்."

சுந்தரம் வீணாவை மாடிக்குக் கூட்டிச் சென்று நாற்காலியை இழுத்துப் போட்டு அமரச் செய்தான்.

"இதுதான் உங்கள் அறையா?" என்று கேட்டாள் வீணா.

"ஆமாம்" என்று பதிலளித்தான்.

அவள் அந்த மாடி அறையைச் சுற்றி நோக்கினாள். அது கீழேயிருந்த கடைஅளவு பெரிதானது. மிகச் சுத்தமாக இருந்தது. தெருவை நோக்கி இரு சன்னல்கள். அவை இப்பொழுது திறந்து கிடந்ததால் மாலைச் சூரியனின் கிரணங்கள் சுவரில் விழுந்து அறைக்குப் பொன்னிறம் அளித்தன. அறையில் 'கச – முசா' என்று சாமான்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கவில்லை. சன்னலுக்கு எதிரே இருந்த சுவரில் சுந்தரம் கல்லூரியில் படித்தபோது எடுக்கப்பட்ட 'குரூப் போட்டோ'க்கள் இரண்டு மூன்றும், இடுப்பளவு மட்டுமுள்ள அவனுடைய பெரிதாக்கப்பட்ட புகைப் படம் ஒன்றும் காணப்பட்டன. சுந்தரம் பட்டம் பெற்றதற்கு 'சர்டிபிகேட்'டும் சட்டம் போட்டு மாட்டப்பட்டிருந்தது. தெற்குப் புறமாக இருந்த சுவரில் ஒரு 'கோட் ஸ்டாண்ட்.' அதில் அவன் காலையில் ஊருக்கு வந்தபோது போட்டிருந்த 'ஷார்க் ஸ்கின்' பாண்டும், நைலான் புஷ்கோட்டும் மாட்டப்பட்டிருந்தன. புஷ்கோட்டின் ஒரே பையில், ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றும், அவனுடைய கார்ச் சாவியும், முகத் திரையிட்ட கோஷாப் பெண்ணைப் போல் மறைந்து காட்சி தந்தன


கோட் ஸ்டாண்டை அடுத்துத் தரையில் நிலைக் கண்ணாடி பொருத்தப்பட்ட அலங்கார மேசை ஒன்று இருந்தது. அக் கண்ணாடியை ஒட்டி, தலைவாரிக் கொள்ளும் பிரஷ், அந்த பிரஷ்ஷில் குத்தி நிறுத்தப்பட்டிருந்த சீப்பு ஒன்று, ஹேர் ஆயில் பாட்டில், ஸ்னோ, பவுடர் போன்ற அலங்காரப் பொருள்களும் அவனுடைய 'ஷேவிங் ஸெட்' பெட்டியும் இருந்தன. தேங்காய்ப் பூ 'டவல்' ஒன்று மேசை மீது சுருட்டிப் போடப்பட்டிருந்தது. சில பத்திரிகைகளும், ஒரு புத்தகமும் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.


மேசையை ஒட்டி ஒரு நாற்காலி. அதில் தான் இப்பொழுது வீணா அமர்ந்திருந்தாள். மேசைக்கு நேர் எதிரே வடக்குச் சுவரை ஒட்டி 'அஸ்மாசுகரி'க் கட்டில் ஒன்று போடப்பட்டிருந்தது. அதில் படுக்கையும் விரித்தபடியே கிடந்தது. தெருவை நோக்கியிருந்த இரு சன்னல்களுக்கும் நடுவே இரண்டு மர அலமாரிகள் இருந்தன. ஒன்று சிறிது; மரக் கதவுடையது. அதுதான் சுந்தரம் துணிமணிகள் வைத்துக் கொள்ளும் அலமாரி. மற்றோர் அலமாரி பெரிது; இரட்டைக் கண்ணாடிக் கதவுகள் உடையது. அது நிறையப் புத்தகங்களும், பத்திரிகைகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

அதைப் பார்த்து விட்டு வீணா, "இவையெல்லாம் உங்கள் கல்லூரிப் புத்தகங்களா?" என்று கேட்டாள்.

"இல்லை; வெறும் கதைப் புத்தகங்களும், பத்திரிகைகளும்."

"இத்தனையுமா?" என்று வியந்தாள் வீணா.





"ஆமாம்; நான் ஒரு புத்தகப் பிரியன்; நீங்கள்?"

விஜு அவன் கேள்விக்கு விடையளிக்கவில்லை. "பார்த்தீர்களா? இன்னும் என்னை 'நீங்கள்' என்றுதானே அழைக்கிறீர்கள்?" என்றான்.

"மன்னித்துக் கொள்ளுங்கள். எனக்கு என்னவோ சட்டென்று ஒருவரை ஒருமையில் அழைக்க வருவதில்லை!"

"நீங்கள் மாலாவுடன் பேசுவதுண்டா?" என்று அவன் கேட்டான்.

"ம்......பேசுவேன்." அவன் அலட்சியமாகப் பதில் அளித்தான். இந்தக் கேள்வி அவன் உள்ளத்தில் எரிந்த நெருப்புக்கு எண்ணெய் வார்த்தது.

"அவளையும் மரியாதைப் பன்மையில்தான் அழைப்பீர்களா?"

"மாட்டேன்."

"ஏன்?"

வேறொரு சமயமாக இருந்தால் சுந்தரம் இக்கேள்விக்கு விடை சொல்லத் தயங்கியிருப்பான். ஆனால் இப்பொழுது அவன் சிறிதும் தயங்கவில்லை. "அவளை என் சகோதரியாகவே கருதி வந்திருக்கிறேன்" என்றான். சொன்னது பொய்யாக இருந்த போதிலும் வார்த்தைகள் உறுதியுடன் வந்தன.

"என்னையும் அப்படியே கருதி ஒருமையில் அழையுங்கள்."

"முயன்று பார்க்கிறேன். ஒருவன் ஒரு ஸ்திரீயை ஒருமையில் அழைப்பதற்கு அவர்களிடையே நெருங்கிய உறவோ, பழக்கமோ இருக்க வேண்டும்."

"ஆகவே என்னை உங்களுடன் நெருங்கிப் பழகும்படி சொல்லுகிறீர்கள்; அப்படித்தானே?" என்று கேட்டாள் வீணா.

அதிகப்பிரசங்கித்தனமாகப் பேசிவிட்டோமே என்று கலங்கிய சுந்தரம், "இல்லை.........அதாவது... ....." என்று தடுமாறினான்.

அவன் தடுமாற்றத்தைப் பார்த்து வீணா சிரித்தாள். "நீங்கள் கூறியது உண்மைதான். ஆண்டவன் அவ்விஷயத்தில் என்னிடம் கருணையுடனே நடந்து கொண்டிருக்கிறார். உங்களைச் சந்தித்த உடனே உங்களோடு நெடும் பிரயாணம் செய்யும் வாய்ப்பை அளித்தது மட்டுமில்லை; தொடர்ந்தும் அதே வாய்ப்பை அருளியிருக்கிறார். மிஸ்டர் சுந்தரம்! நேற்று நீங்கள் கூறிய ஆலோசனை எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது."

"ஓ! அதற்குள் ஆஸ்பத்திரியை ஆரம்பிக்கும் விஷயம் முடிவாகி விட்டதா?"

"ஆமாம்; இத்தனை நேரமாக எங்கள் வீட்டில் அது பற்றிய மகாநாடுதான் நடந்து கொண்டிருந்தது. உங்கள் அப்பாவும் உடன் இருந்து எல்லாவற்றையும் முடிவு செய்தார்."

"என்ன முடிவு செய்தீர்கள்?"

"இவ்வூரில் எல்லா வசதிகளும் கொண்ட ஓர் ஆஸ்பத்திரியும், புங்கனூற்றுக் காலனியில் ஒரு டிஸ்பென்சரியும் நடத்துவதென்று தீர்மானித்திருக்கிறோம். இவ்வூர் ஆஸ்பத்திரிக்கான இடத்தைக்கூடப் பார்த்தாகி விட்டது. உங்கள் அப்பாவும் நானும் அங்கே போய் விட்டுத்தான் இங்கே வந்தோம்."

"பரவாயில்லையே! மெயில் வேகத்தில் காரியத்தைச் சாதித்திருக்கிறீர்களே!"

"மெயில் என்று சொல்லாதீர்கள். அப்பா கேட்டால் நடுங்கிவிடப் போகிறார்!" என்று சிரித்தாள் வீணா.

சுந்தரத்துக்கு விளங்கவில்லை. "அப்படியென்றால்...?" என்று அவன் கேட்டான்.

"ரயில் விபத்து அவரிடம் ஏற்படுத்தி விட்டிருக்கும் கிலி அது!" வீணா இன்னும் பெரிதாகச் சிரித்தாள்.

சுந்தரமும் சிரித்தான். பிறகு, "பாவம், அவர் மனம் என்ன பாடுபட்டதோ, நாம் என்ன கண்டோம்? அதிருக்கட்டும், இவ்வூரில் ஆஸ்பத்திரிக்கு எங்கே இடம் பார்த்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"வடக்குத் தெருவில். சங்குப் பிள்ளை என்று ஒருவர் பினாங்கில் இருக்கிறாராமே, அவருடைய வீடுதான். வீடு பெரிதாகவும் வசதியாகவும் இருக்கிறது. இரண்டொரு நாட்களில் ஆஸ்பத்திரிக்கான சாமான்கள் வந்து விடும். வந்ததும் ஒரு நல்ல நாள் பார்த்துத் தொடங்கிவிட வேண்டியதுதான்."

"ஓ! ஆஸ்பத்திரிச் சாமான்களுக்குக் கூட ஆர்டர் கொடுத்து விட்டுத்தான் வந்திருக்கிறீர்களா?"

"நான் ஆர்டர் கொடுக்கவில்லை. என்னை வளர்த்தவர்களின் அன்பளிப்பு அவை. பெரியப்பாவே என்னைப் பம்பாய்க்குக் கூட்டிச் சென்று, வேண்டிய சாமான்களைத் தேர்ந்தெடுக்கச் செய்து, அவற்றை நேரே இங்கே அனுப்பவும் ஏற்பாடு செய்து விட்டார்."

"பெரியப்பாவா?"

"ஆமாம்; நான் மகாராஜாவைப் பெரியப்பா என்றும், ராணியைப் பெரியம்மா என்றும்தான் அழைப்பேன். எனக்குத் தாய்—தந்தையரைவிட உயர்ந்தவர்கள் இல்லையா அவர்கள்?" என்று வீணா நன்றிப் பெருக்குடன் கூறினாள்.

சுந்தரம் ஒன்றும் பேசவில்லை. அவள் முகத்தில் மிதந்த பரவசத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

வீணா தொடர்ந்து சொன்னாள்: "இவ்வாறு ஆஸ்பத்திரி விஷயம் ஒருவாறாக முடிவாகி விட்டது. டிஸ்பென்சரி விஷயத்துக்கு நாங்கள் உங்களைத்தான் முழுக்க முழுக்க நம்பிக் கொண்டிருக்கிறோம்."

"என்னையா? எதற்கு?"

"காலனியில் ஓர் இடம் பிடித்துத் தருவதற்கு."

"அது என்ன பிரமாதம்? அங்கே வாழும் இரண்டாயிரம் — மூவாயிரம் கூலிகள் வைத்திய வசதி இல்லாமல் தவிக்கிறார்கள். இம்மாதிரி ஒருவர் டிஸ்பென்சரி வைக்கிறேன் என்று வலிய முன் வந்தால் சர்க்காருக்குக் கசக்கவா செய்யும்? ஆகட்டும்; நாளைக்கு வேலையை ஒப்புக் கொண்டதும் பிரதம இன்ஜினீயரிடம் இதுபற்றிப் பேசுகிறேன். அவர் மிகவும் நல்ல மனிதர். இடம் அளிக்க அவருக்கே அதிகாரம் இருக்கிறது."

"நாளைக்கு நானும் அந்த ஸ்தலத்துக்கு வரட்டுமா?"

"வாருங்களேன். காலையில் காரோடு உங்கள் வீட்டுக்கு வருகிறேன்; சேர்ந்து போகலாம்."

"வந்தனம்!" என்று கூறிவிட்டு வீணா கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். "அடடே! மணி ஐந்தரை ஆகிவிட்டதே! அம்மாவை இன்னும் காணோமே!"

இவர்கள் உரையாடலைப் புஷ்பவனம் கேட்டுக் கொண்டிருந்தார் போலும். வீணா இதைக் கூறி முடித்ததும் அவர் குரல் கீழேயிருந்து வந்தது. "ஏண்டா தம்பி, அம்மா தோட்டத்திலே இருக்காளா, பார்த்தியா?"


"ஆ! இல்லையே!" என்று சுந்தரம் விரல்களை உதறினான். பிறகு, "இல்லை, அப்பா; இதோ பார்த்து விட்டு வருகிறேன்" என்று புறப்பட்டான்.

"இருங்கள்; நானும் வருகிறேன்" என்று வீணாவும் கிளம்பினாள்.

கீழே இறங்கியதும் அவள் புஷ்பவனம் பிள்ளையிடம், "கொல்லையிலே என்ன தோட்டம் போட்டிருக்கிறீங்க மாமா?


ஸுலேகா
பிரீப்மென்
இன்றைய
மிகவும்
நம்பகமான
பேனாக்கள்
பலவித ரகங்களிலும் கவர்ச்சியான
தோற்றத்திலும் எங்கும் விற்கப்படும்
Sole Distributors:
PENMEN'S INDUSTRIAL
SERVICES
Kandivli, Bombay (S. D.)


வியக்கத்தக்க
நீளமான
செழிப்பான
கூந்தல்
ரோமா
கூந்தல் வளர்க்கும் டானிக்


இதோ உங்களுடைய
கை கண்ட மருந்து
ஸி.ஏ.க்யூ.
ஜலதோஷம், இன்புளு
யன்ஸா, தலை பாரம்,
ஹே ஜுரம், டெங்கு
ஜுரம் முதலியவை
களுக்கு மிகச் சிறந்த
முறையில் குணம் அளிப்பது
ஸி. ஏ. க்யூ. எப்பொழுதும்
உங்கள் வீட்டில் ஸி.ஏ.க்யூ.வை
வைத்திருங்கள். குயினைன்,
அமோனியா, கொய்னா ஆகியவற்
றைச் சரியான அளவில் சேர்த்து
தயாரிக்கப்பட்டது ஸி. ஏ. க்யூ.
இது தென் இந்தியாவிலேயே
தலைசிறந்த மருந்துகள் தயாரிப்ப
வர்களான ஸ்பென்ஸர் கம்பெனி
யாரின் இணையற்ற தயாரிப்பு.
★
ஸ்பென்ஸர் & கோ., லிட்.
சென்னை - பம்பாய் - கல்கத்தா
டில்லி மற்றும் கிளைகள்



திருச்சி தில்லை நகரில் 14-5-59 அன்று நடைபெற்ற அடியார்கள் பொதுக் கூட்டத்தில் திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் "சிருங்கேரிமடமும் சிவனிஷ்டனுமதமும்" என்னும் பொருள் பற்றிப் பேசினார். பக்திச் சுவையும், எழிலும் ஒருங்கே அமையப்பெற்ற அச்சொற்பொழிவைக் கூட்டத்துக்கு விஜயம் செய்தருளிய ஸ்ரீ சிருங்கேரி சங்கராச்சாரிய சுவாமிகள் பாராட்டித் திருவாசகமணி அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தியதோடு, "சிவபக்த மணி" என்ற சிறப்புப் பட்டத்தையும் வழங்கியருளி வாழ்த்தினார்கள்.

காய்கறித் தோட்டமா?" என்று கேட்டான்.

"ஆமாம், அம்மா! எல்லாம் அவன் ஏற்பாடு. போ! போய்ப் பாரு. அங்கே தான் இருப்பாள். ராப்பகலாத் தோட்டம் தோட்டமின்னு பழியாய்க் கிடப்பாள்."

வீணா சுந்தரத்தைப் பின்பற்றி அவ்வீட்டின் கடைசிக் கட்டான மாட்டுக் கொட்டில் வரையில் வந்தாள். ஆனால் சட்டென்று ஏதோ நினைவுக்கு வரவே அங்கேயே நின்று விட்டாள். "மிஸ்டர் சுந்தரம்! நீங்கள் போய் அம்மா இருக்கிறார்களா, பார்த்து வாருங்கள்; நான் இங்கே நிற்கிறேன்."

"ஏன் வாருங்களேன். அம்மா எவ்வளவு அமைப்பாகத் தோட்டம் போட்டிருக்கிறாள் என்பதை வந்து பாருங்கள்" என்றான் சுந்தரம்.

"வேண்டாம், நான் அங்கே வரலாமோ, என்னவோ?"

"ஏன்? வந்தால் என்ன?" என்று சுந்தரம் திகைப்போடு கேட்டான்.

"பூவும் பிஞ்சுமாக இருக்குமிடத்தில் என் போன்றவர்கள் அடி எடுத்து வைக்கக் கூடாதாம்!"

"என்ன?"

"ஆமாம். உங்களுக்கு என் நிலை தெரியுமென்று நினைக்கிறேன்."

"கேள்விப்பட்டேன்" என்று அவன் விசனத்துடன் சொன்னான். பிறகு அவனுக்கு ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது. "ஆனால் அதற்கும் நீங்கள் காய்கறித் தோட்டத்துக்கு வருவதற்கும் என்ன சம்பந்தம்? யார் வகுத்தது இந்த அர்த்தமற்ற கட்டுப்பாடு?" என்று குமுறினான்.

"கிராமாக்கிரத்தில் அதுதான் வழக்கமாமே! நான் கண்டேனா? பகலில் சாப்பாட்டுக்குப் பிறகு எங்கள் வீட்டுக் கொல்லையில் இருக்கும் கீரைப் பாத்திகளுக்கு மாலா தண்ணீர் ஊற்றப் புறப்பட்டாள். நானும் கூடப் புறப்பட்டேன். அப்பொழுதுதான் அத்தை இதைச் சொன்னாள். வீட்டுக் கொல்லையில் அவள் சில கத்திரிச் செடிகளை கட்டிருக்கிறாளாம்; அவை பூவும் பிஞ்சுமாக இருக்கின்றனவாம். 'நீ அங்கே போக வேண்டாம் வீணா' என்றாள்."

"இது என்ன அநியாயம்? சொந்த வீட்டிலே உங்களுக்குத் தடையா? நல்ல அத்தை அவள்! ஆனால் அவள் மட்டும் அங்கே போய் வரலாமோ? உங்களைப் போன்றவள் தானே அவள்?"

"இல்லை; என்னைப் போன்றவள் இல்லை. அவள் வாழ்ந்து கெட்டவள். நான் வாழாமலேயே..." வீணாவின் தொண்டை அடைத்தது. உமிழ் நீரை விழுங்கிக் கொண்டாள்.

"இது பெரிய அநீதி! கொடிய அக்கிரமம்! பெண் குலத்துக்கே பேரவமானம்" என்று சுந்தரத்தின் குரல் உயர்ந்து ஒலித்தது.

ஆனால் வீணா அமைதியாகவே பேசினாள். "அநீதியும் இல்லை; அவமானமும் இல்லை, சுந்தரம்! வீணாக மனத்தை அலட்டிக் கொள்ளாதீர்கள். நம் பெரியவர்கள் விஷயம் அறிந்துதான் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நியதியை வகுத்திருப்பார்கள்" என்றாள் அவள்.

"நல்ல பெரியவர்கள்! நல்ல நியதி!" என்று கொதித்தான் சுந்தரம். "என்றோ ஏதோ காரணத்துக்காக அவர்கள் ஒன்றை வகுத்தால் நாம் அதைக் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றி விட வேண்டுமா?"

"பின்பற்றத்தான் வேண்டும், அமைதியுடன் வாழ விரும்பினால். நான் இங்கே அமைதியான வாழ்வை நாடித்தான் வந்திருக்கிறேன்; புரட்சி செய்வதற்கல்ல!"

இரண்டே வாக்கியங்களில் வீணா தன் மனத்தை அவனுக்குத் திறந்து காட்டிவிட்டாள். சுந்தரத்தின் வாய் அடைத்துப் போயிற்று. அதோடு எந்தச் சவாலை நிறைவேற்றி மாலாவுக்குப் பாடம் போதிக்க வேண்டுமென்று அவன் சற்று முன் தீர்மானித்தானோ, அது இந்தக் கிராமாக்கிரச் சூழ்நிலையில் அத்தனை எளிதான காரியமில்லை என்பதையும் வீணாவின் இவ்வார்த்தைகள் அவனுக்கு உணர்த்தின. நகரத்தில் பிறந்து, வளர்ந்து, படித்துப் பட்டம் பெற்ற ஒரு பெண்ணின் மனப் போக்கே இப்படி இருந்தால்...?

'நாசமாய்ப் போகட்டும் நம் சமூகம்!' என்று அவன் வெறுப்புடன் சபித்து வீட்டுத் தோட்டத்தில் அம்மா இருக்கிறாளா என்பதைப் பார்ப்பதற்காக ஓர்

அடி எடுத்து வைத்தான். அதற்குள் மரகதத்தம்மாளின் குரல் பின்னால் கேட்டது: "சுந்தரம்!"

வீணாவும் அவனும் ஒருங்கே திரும்பினர். இடுப்புக் குடத்தைக்கூட இறக்காமல் அவள் நேரே அவர்களிடம் வந்தாள். "வா, அம்மா! உன்னை பார்க்கத்தான் வீட்டுக்குப் போயிருந்தேன். சுந்தரத்தின் அப்பா இங்கே கூட்டிக்கிட்டு வந்திட்டதாகத் தைலக்கா சொன்னாங்க. சுகமா இருக்கியா?" என்று முகத்தில் மலர்ச்சியுடன் அவள் வீணாவைத் தலையிலிருந்து கால் வரையில் அளவிடுவதைச் சுந்தரம் கவனித்தான்.

"வீணா வந்து அரை மணி நேரமாக உனக்காகக் காத்திருக்கிறாள், அம்மா!" என்றான் அவன்.

"நீ கூறு கெட்ட பிள்ளைடா தம்பி. வந்த பொண்ணை வீட்டிலே உட்கார்த்தி வைச்சுப் பேசிக்கிட்டு இருக்காம, தோட்டத்துக்குக் கூட்டி வந்திருக்கிறியே!"

"இல்லை, அம்மா! நீ தோட்டத்தில் இருக்கிறாயோ என்று பார்ப்பதற்காகத்தான் வந்தோம்."

"அதுக்கு நீ வந்து பார்க்கிறது. அவளையுமா இழுத்துக்கிட்டு வரணும்? காலேஜிலே என்னதான் படிச்சிங்களோ அப்பா, உலக வளமைகூடத் தெரியாமல்? வாம்மா வீணா, உள்ளே." அவள் வீணாவின் கையைப் பிடித்துக் கொண்டு உள்ளே திரும்பினாள்.

'ஓ! வீணாவைத் தோட்டத்துக்கு அழைத்து வந்ததை இவளும் விரும்பவில்லை போலும்!' என்ற எண்ணந்தான் சட்டென்று சுந்தரத்துக்கு ஏற்பட்டது. விசனத்துடன் அவனும் அவர்களைப் பின்பற்றினான்.

குடத்தை அடுக்களையில் வைத்து விட்டுக் கூடத்துக்கு வந்து, ஒரு பாயை விரித்து, "உட்கார் அம்மா!" என்றாள் மரகதத்தம்மாள். தானும் அமர்ந்தாள். "பத்து வருசமா 'வீணா – வீணா'ன்னு செபம் பண்ணிக்கிட்டிருக்கிறாங்க தைலக்காளும் உங்க அப்பாவும். நீ அவங்க நினைப்பே இல்லாம இருந்திட்டே!"

"அது எப்படி அத்தை அவர்கள் நினைவில்லாமல் நான் இருக்க முடியும்? என்னவோ வளர்த்தவர்கள் பிடிவாதம் பிடித்தார்கள். நான் இங்கே வந்தால் என்னைத் திருப்பி அனுப்ப மாட்டார்கள் என்ற சந்தேகம் அவர்களுக்கு. ஆனால் கன்று எங்கேதான் மேயப் போனாலும் இரவானால் கொட்டிலுக்கு வந்துதானே ஆக வேண்டும்? அதுபோல் நானும் வாழ ஒருவனைத் தேடிக்கொண்டு வந்து விட்டேனே!"

சுந்தரம் அங்கே சுவர் ஓரமாக ஒற்றைக் காலில் தவம் செய்து கொண்டிருந்தான். அவன் கண்கள் வீணாவின் துயர் படிந்த முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தன. பரிதாபமாக விளங்கிய அவளுடைய பாழ் நெற்றி இப்பொழுது அவன் மனத்தை முறுக்கிப் பிழிந்தது.

அருள் வாக்கு

தக்ஷிணாமூர்த்தி நல்ல பால்ய வயது உடையவராக என்றும் இளமை மாறாமல் இருக்கிறார். நாம் கூடக் கிழவர்களாகப் போகாமல் யௌவனமாக வாழ முடியும். அப்படி ஆக வேண்டுமென்றால், ஒன்றையும் நினைக்காமல் சாந்தமாக நித்திய ஆனந்தமாக இருக்க வேண்டும். அப்படி நம்மை ஒரு கணங் கூட இருக்க விடாமல் உள்ளே ஏதோ ஒன்று அரித்துக் கொண்டே இருக்கிறது. கருணைக் கிழங்கைச் சாப்பிட்டால் தொண்டையை அரிக்கிறதே, அது போல். ஓயாமல் கவலை, துக்கம், ஏக்கம், இவைகள் நம் மனத்தை விடாது அரித்து நம்மைக் கூடிய சீக்கிரம் கிழவர்களாக மாற்றி விடுகின்றன. இதுதான் ஈசுவரனது மாயையின் சக்தி.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

"நீ என் தம்பி ஒத்தைக் காலிலே நின்னுக்கிட்டிருக்கிறே இங்கே? போய் உன் சோலியைப் பாரேன். நாங்க பேசிக்கிட்டிருக்கோம்" என்று அவனை அங்கிருந்து விரட்டினாள் மரகதத்தம்மாள்.

'சரிதான்; வீணாவிடம் பழகுவதுகூடச் சிரமமாக இருக்கும் போலிருக்கிறதே!' என்று எண்ணியவாறு அவன் மாடிக்கு வந்து கட்டிலில் படுத்துக் கொண்டான்.

பொழுது சாய்ந்து விட்டது. சன்னல் வழியாக வந்த பொன் வெய்யில் இப்பொழுது இல்லை. கருமையைத் தழுவிக் கொண்டிருந்த மங்கிய வெளிச்சந்தான் அதன் வழியே வந்தது. பகல் போய் விட்டது. இரவு வரப் போகிறது. அதனிடையே உள்ள காலம் இது.

சுந்தரத்துக்குக் காலநிலையோடு தன் வாழ்க்கை நிலையை ஒப்பிட்டுப் பார்க்கத் தோன்றியது. அவன் வாழ்விலும் காலை வந்தது. அதன் இளம் வெய்யிலாக மாலா வந்தாள். நடுப்பகல் வந்தது; பேரொளி தந்தது. அவர்கள் காதல் மலர்ந்தது. மாலை வந்தது; பொன்னொளி வீசியது. தங்கள் காதல் கைகூடும் தருணம் வந்து விட்டதென்று அவன் களித்தான். ஆனால் இப்பொழுது ......? இப்பொழுது ... ...? அந்த ஒளியெல்லாம் ஒரு விநாடியில் மங்கி விட்டதே! கன்னங் கரிய இருள் அல்லவா அவன் வாழ்வைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது!

உலகத்தின் இன்ப ஏட்டை மட்டுமே படித்து வந்த அவன்முன் இன்று ஒரு துன்ப ஏடு விரிந்திருக்கிறது. சமூகத்தின் இழுக்காறு ஒன்றை மாலா அவனுக்குப் பிளந்து காட்டினாள். ஆனால் அவன்

அதை ஆண்கள் பெண்களுக்கு இழைக்கும்' அநீதி என்று குற்றம் சாட்டினான். அதுவே அவனை அத்தனை ஆத்திரம் அடையச் செய்தது. இப்பொழுது அவன் நெஞ்சில் மற்றொரு சவுக்கடி விழுந்திருக்கிறது. பெண்களே பெண்களுக்கு அக்கிரமம் இழைப்பதைக் காண்கிறான்! பெற்ற தாயே தன் மகளுக்குக் கொடுமை புரிவதைக் காண்கிறான்!

"ஐயோ! விதவைகளின் நிலை அத்தனை கேவலமானதா? இனம் இனத்தைச் சாரும் என்பார்கள். இவர்கள் விஷயத்தில் மட்டும் இனம் இனத்தை அழிக்க வல்லவா செய்கிறது!"

திறந்து கிடந்த படிக்கட்டுக் கதவின் வழியாக ஓர் ஒளிக்கீற்று மேலே வந்தது. தொடர்ந்து புஷ்பவனத்தின் குரலும் கேட்டது. "தம்பி! பொழுது இருட்டிப் போச்சே. லாந்தரைக் கொளுத்திட்டுப் போய் வைச்சுக்கிடேன்."

"ஆகட்டும், அப்பா!" என்றான் அவன். ஆனால் கட்டிலை விட்டு எழுந்திருக்கவில்லை. தன்னையும் அந்த அறையையும் சூழ்ந்த இருளை அவன் விளக்கு என்ற போலி ஒளியால் போக்கிக் கொள்ள விரும்பவில்லை. அவன் மனம் நிச ஒளியை-நிரந்தர ஒளியைத்தான் நாடியது. மாலையில் இதே கட்டிலில் படுத்து, மாலாவின் சவாலை ஏற்றுக் கொள்ளுவதென்று முடிவுறுத்தியபோது அவன் மனத்தில் வீம்பு என்ற போலி ஒளிதான் மிதமிஞ்சி இருந்தது. ஆனால் இப்பொழுது விதவைகளின் பரிதாப நிலையை இன்னும் நன்றாகத் தெரிந்துகொண்டபோது, அந்தப் போலி ஒளி எண்ணெயற்ற தீபமாக இருளை வீசி விட்டு மறைந்துவிட்டது. இனி அவன் நிச ஒளியைத்தான் நாட வேண்டும். வீம்புக்காக இல்லை; உண்மையாக, ஆத்மார்த்தமாக, விதவைகளின் வாழ்க்கைக்கு விமோசனம் ஏற்படுத்த வழிகாட்டுவதற்காக, இந்தக் கட்டுப்பட்டிக் கிராமத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்த வேண்டும்.

ஆனால் அந்தப் புரட்சியை அவன் ஒருவன் மட்டும் நடத்த முடியாதே! அதற்கு ஒரு பெண்ணின் துணை வேண்டுமே! யார் துணை செய்வார்கள் அவனுக்கு? யார் இணை சேர்வார்கள் அவனுடன்? இதைச் சிந்தித்தபோது அவன் மனம் சிறிது தளரத்தான் செய்தது. இதோ இந்த வீணை, படித்தவள், பதவி வகிக்கப் போகிறவள், நெடுங்காலத்துக்குப் பிறகு ஊருக்கு வந்தவள், வந்த அன்றே சொந்த வீட்டில் ஓர் இடத்தில் நுழையக் கூடாது என்று தடை செய்யப்பட்டபோது மண் புழுவாக உணர்ச்சியின்றி நெளிகிறாளே! இவளே இப்படி இருந்தால் வேறு யாருக்குத்தான் துணிவு வரப் போகிறது? ஆம், விதவைகள் கொடுமைக்கு ஆளாகிறார்கள்; அழிகிறார்கள் என்றால், அது மாலா கூறியது போல் ஆண்களால் மட்டுமில்லை; அவர்களுடைய கோழைத்தனமும் அதற்கு முக்கிய காரணமாகும். சமூகத்தை எதிர்க்கத் துணிவற்ற அவர்களுடைய குடல் நடுக்கமும் காரணமாகும்.

இன்று அவளைக் காய்கறித் தோட்டத்துக்குப் போகாதே என்றாள் அத்தை. நாளைக்கு, ஆண்களைத் தொட்டுப் பழக வேண்டியிருக்கிறது; வைத்தியத் தொழிலே வேண்டாம் என்பாள். அப்பொழுது என்ன செய்வாள் வீணை? அதற்கும் அடிபணிந்து விடுவாளா? 'நான் நிம்மதியாக வாழ வந்திருக்கிறேன்; புரட்சி செய்ய வரவில்லை' என்று தொழிலையே விட்டு விடுவாளா?

தவிர, அவள் மனம் என்ன கல்லா? இரும்பா? அதிலே ஆசாபாசங்களே ஏற்படாவா? நேற்றுவரை படித்துக்கொண்டிருந்தாள்; தன் தனிமை வாழ்வைப் போக்கிக்கொள்ள ஓர் ஆதாரம் வேண்டுமென்ற லட்சியத்துடன் படித்தாள். ஆகலால் உடலின் தேவைகளை உள்ளம் உணரவில்லை. ஆனால் இனி? தொழில் புரியப் போகிறாள். பலதரப்பட்ட ஆண்-பெண்களோடு பழகப் போகிறாள். உலகத்தின் ஆசாபாசங்கள் எல்லாம், அந்தரங்கங்கள் எல்லாம், வைத்தியம் புரிபவள் என்ற முறையில் அவளுக்கு அம்பலமாக்கப்படும். அவற்றைக் கேட்கும்போது அவள் மனம் சலனமுறாதா? இப்பொழுது இந்த அநீதிகளைப் பொறுத்திருப்பது போல் அதையும் பொறுத்துக்கொள்ளப் போகிறாளா?

முடியாது! மனம் என்று ஒன்று இருந்தால், அது உருகி ஓடத்தான் செய்யும். பாவப் படுகுழியில் அவளைக் கொண்டு தள்ளினாலும் தள்ளிவிடும். அந்நிலை அவளுக்கு ஏற்பட விடக்கூடாது. என் லட்சியம், மாலா விட்ட அந்தச் சவால், இரு நலன்களோடு நிறைவேற வேண்டும். வீணைதான் இனி என் குறிக்கோள்!

"அடேய், தம்பி! வீணை வீட்டுக்குப் புறப்பட்டுட்டாள்டா. கீழே இறங்கி வா" என்று அழைத்தாள் மரகதத்தம்மாள். சுந்தரம் கீழே சென்றான்.

"போய் வருகிறேன். காலையில் ஒன்பது மணிக்குப் புறப்பட்டால் போதுமா?"

"போதும்."

"சரி, வருகிறேன். வணக்கம்!" அவள் கிளம்பினாள்.

"தனியே போகிறீர்களே; நான் வேண்டுமானால் துணை வரட்டுமா?" என்று கேட்டான் சுந்தரம்.

"வேண்டாம்; தெருத்தானே? எனக்கும் தனியே போய் வந்து பழக்கம் ஏற்பட வேண்டாமா? இன்று வேண்டுமானால் நீங்கள் துணை வருவீர்கள்; என்றும் முடியுமா?" வீணை சிரித்து விட்டுத் தெருவின் இருட்டில் மறைந்தாள்.

"சூட்டிகையான பெண்; பிழைச்சுக்கிடும்" என்றாள் மரகதத்தம்மாள்.

"படிச்ச பெண்ணில்லே!" என்றார் புஷ்பவனம்.

ஆனால் சுந்தரத்தின் செவியில் அவர்கள் பேச்சொன்றும் விழவில்லை. "இன்று வேண்டுமானால் துணை வருவீர்கள்; என்றும் முடியுமா?" என்ற வீணையின் கடைசி வார்த்தைகளே அவன் செவியில் ஒலித்துக் கொண்டிருந்தன. (தொடரும்)


'ஆஸ்ப்ரோ'வை நம்புங்கள்
அது அபாயமில்லாமல் வலியைப் போக்குகிறது
ஏனெனில்
'ஆஸ்ப்ரோ' மாத்திரைகளில் உலகத்திலேயே மிகப்பிரசித்திபெற்ற ஆனாலும் அபாயமில்லாத வலி நிவாரண மருந்து முழு அளவில் இருக்கிறது.
நிச்சய நிவாரணம்
'ஆஸ்ப்ரோ' துரிதமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் அளிக்கிறது, ஆனாலும் கொஞ்சங்கூட அபாயமில்லாதது
துரித நிவாரணம்
2 மாத்திரைகள் சாப்பிட்ட சில விநாடிகளிலேயே 'ஆஸ்ப்ரோ' வில்லைகள் வேலைசெய்ய ஆரம்பிக்கின்றன
அபாயமில்லாத நிவாரணம்
'ஆஸ்ப்ரோ' இதர விதமான கெடுதல்களை உண்டாக்குவதில்லை. ஹிருதயத்தையும் கெடுக்காது
சாப்பிடும் அளவு
பெரியவர்கள்................2 வில்லைகள்
சிறுவர்கள் 11/14 வயது ..1½ வில்லைகள்
சிறுவர்கள் 6/10 வயது ..1 வில்லை
குழந்தைகள் 3/5 வயது ..½ வில்லை
மூன்றுவயதுக்குக்கீழுள்ள குழந்தைகள் டாக்டர் கூறுவதுபோல்
'ஆஸ்ப்ரோ'
தலைவலி • ஜுரம்போன்ற உணர்ச்சி
தொண்டைப்புண் • வலிநோவு • பல்வலி
ஜலதோஷம், ப்ளூ முதலியவைகளுக்கு
நிவாரணம் அளிக்கிறது
ASPRO
10
நயே பைஸே
1958
A/C/77 TAM



பிறருடைய உணர்ச்சிகளின் அழகை அவன் கதைகளாக எழுதிக் கொண்டிருந்தான். அவனுடைய சொந்தக் கதையையோ மேலேயிருந்து இன்னொருவன் எழுதிக் கொண்டிருந்தான்......

இரவு மணி பன்னிரண்டுக்கு மேல் இருக்கும். நகரம் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தது. ஆனால் டாக்டர் சோமநாதன் கண் இமைக்கவில்லை. வான வெளியைப் பார்த்தவண்ணம் மாடி வராந்தாவில் உட்கார்ந்திருந்தான். மங்கிய நிலவின் சிறு ஒளியையும் விழுங்க மேகப் படலமொன்று மெல்ல நகர்ந்து வந்தது. எங்கிருந்தோ கேட்ட மெல்லிய விம்மல் அவனது உள்ளத்தில் எஞ்சியிருந்த அமைதியையும் விழுங்கப் போதுமானதாக இருந்தது.

புகழும் பொருளும் தர முடியாத மகிழ்ச்சியைத் தாம்பத்திய வாழ்க்கை தரப் போகிறது என்று மனக்கோட்டை கட்டிய அவனுக்குப் பெருத்த ஏமாற்றம். சரஸ்வதிக்கு என்ன குறை?

எத்தனை சிந்தித்தும் அவனது கேள்விக்கு விடை கிடைக்கவில்லை....

மணமான பிறகு முதன்முறையாகப் பதினைந்து தினங்களுக்கு முன்னர்தான் அவள் கணவன் வீட்டுக்கு வந்தாள். அன்றிலிருந்து அவள் போக்கு புரியாப் புதிராக இருந்தது. அவனிடம் அவள் மகிழ்ச்சியாக ஒரு பேச்சுப் பேசவில்லை. எதையோ பறி கொடுத்தவள் போல் முகத்திலே ஒரு சோகம். அவனைக் கண்டாலே அஞ்சியவள் போல் ஓடி ஒதுங்கினாள். பரிவோடு பணிவிடைகள் செய்து விட்டால் போதுமா? நின்று நாலு வார்த்தைகள் பேசவும் நேரமில்லாதவளைப் போலல்லவா

கதை முடிந்தது

விரைந்து விலகினாள்! 'எங்கே ஓடுகிறாய் சரசு?' என்று அவன் கேட்ட போது அவள் முகத்திலே புன்னகை தோன்றத்தான் செய்தது. ஆனால் மறு விநாடியே கண்கள் பனித்தன.

ஏன்?

அவனும் கேட்கவில்லை; அவளும் கூறவில்லை. அவனது தாய்க்கும் விவரம் தெரியாது. எத்தனை தினங்களுக்குத்தான் இப்படி நாடகமாட முடியும்!

மெதுவாக எழுந்தான். சரசுவின் அறையை நோக்கிச் சப்தமின்றி நடந்து சென்றான்.

அரைகுறையாகச் சாத்தப்பட்டிருந்த ஜன்னல் கதவுகளின் இடைவெளி வழியாக விளக்கொளிக் கதிர்கள் பாய்ந்துவந்தன. சோமநாதன் ஓரமாக நின்று கவனித்தான். வியப்பினால் அவனது விழிகள் விரிந்தன.

அவள் ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள்! ரோஜாக் கன்னங்களில் வழிந்த கண்ணீரை இடக் கரத்திலிருந்த கைக்குட்டையால் துடைத்த வண்ணம் விரைவாக எழுதிக் கொண்டிருந்தாள்! அழுது அழுது சிவந்த கண்களில் துடைக்கத் துடைக்கத் துளித்த கண்ணீர் விளக்கொளி பட்டுப் பளிச்சிட்டது. இடையிடையே நெஞ்சிலிருந்து குமுறிக் கொண்டு வந்த துக்கத்தை அடைக்க முயல்பவள் போலப் புடவைத் தலைப்பினால் தன் பவள வாயைப் பொத்திக் கொண்டாள்.

என்ன எழுதுகிறாள்? அவனது உள்ளம் ஏதேதோ எண்ணியது. சிறிது நேரம் காத்திருந்து பார்த்தான். மீண்டும் ஏதோ தீர்மானித்தவன் போல் மௌனமாக வந்த வழியே திரும்பினான்.

உறக்கம் வரவில்லை. எண்ணங்கள் மூலைக்கு மூலை சிதறி ஓடிக் கொண்டே இருந்தன. தொலைவில்

எங்கோ ஒரு கடிகாரம் நாலுமுறை ஒலித்தது. சரசுவின் அறைப் பக்கமிருந்து கேட்ட சோக ஒலிகள் ஒய்ந்துவிட்டன. அவன் மீண்டும் எழுந்து தன் மனைவியின் அறையை நோக்கிச் சென்றான்.

'நைட் பல்ப்'பின் மங்கிய ஒளியில் படுக்கை மீது துவண்டு கிடந்தாள் அவள். அயர்ந்த நித்திரை. சந்தடியின்றிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான். மேசை மீது மடித்து வைக்கப்பட்டிருந்த காகிதக் கற்றையை அப்படியே எடுத்துக் கொண்டு தன் அறைக்கு வந்தான்.

அவனது வியப்புக்கு அளவில்லை. இரண்டு பகுதிகள் கொண்ட ஒரு நீண்ட கதை. முதற்பகுதியை வேறு யாரோ எப்பொழுதோ எழுதியிருக்க வேண்டும். இரண்டாவது பகுதியிலிருந்த கையெழுத்து சரசுவினுடையது.

முதல் சில வரிகளில் பார்வையைச் செலுத்தினான். வியப்பு அதிகரித்தது. முழுவதும் படித்துவிட முனைந்தான். மருடமற்ற அக் கதையின் முதற் பகுதி சலசலத்தோடும் குளிர்ந்த நீரோடையைப் போல் சரளமாக ஓடியது.



முதற் பகுதி

அவன் பார்வை தொலை தூரத்தில் அந்தி வானத்தின் மீது நிலைத்திருந்தது. அதோ அந்தப் பனை மரக் கூட்டத்தின் முகட்டில் அரை குறையாக அமிழ்ந்து கொண்டிருந்த பரிதியின் செந்நிற வட்டம், ஓவியனின் தூரிகை காணாத வண்ணப் பூச்சு, வரிசை வரிசையாக வான வீதிக்குத் தோரணம் கட்டிக் கொண்டு ஒரே நிலையாகச் சிறகடித்துப் பறந்து வந்த புள்ளினங்களின் கூட்டம் எல்லாமே அவன் தினம் தினம் காணும் காட்சிகள்தாம். ஆனால் இன்று அவற்றில் காண முடிந்த அதீதமான கவர்ச்சி, மயக்கம் தரும் எழில், என்றுமே அவனுக்குக் காணக் கிடைத்ததில்லை.

காரணம் ...?

நாள் தவறாமல் அந்த நேரத்தில் தான் அவன் தண்ணீர்க் குடத்துடன் வருவான். குளக்கரை மரத்தின் நிழலில் உட்கார்ந்து அவன் எழுதிக் கொண்டிருப்பான். படித்துறையில் மெதுவாகப் பூனை போல இறங்கிச் செல்லும் அவளை எதேச்சையாக ஒரு முறை கவனித்து விட்டு அவனது கண்கள் மீண்டும் எழுத்துக்கு மீளும். அவனது கவனத்தைக் கவர்வதற்கே போல் அவள் சாம்பலையும் மண்ணையும் கலந்து அக்குடத்தைக் கரகரவென்று பலத்த ஓசையை எழுப்பித் தேய்ப்பாள். ஆனால் அவன் திரும்பியும் பார்க்க மாட்டான். இடையிடையே இலேசாகத் தடம் புரளும் உள்ளத்தைச் சற்றே தட்டித் திருப்பிப் பேனாவை ஓட்டிக்கொண்டே யிருப்பான். நேரம் போவது தெரியாது. இருந்தாற் போலிருந்து சற்றுத் தொலைவில் அந்த நந்தியாவட்டைச் செடியருகே யிருந்து பெருமூச்சுக் கேட்டுத் திரும்புவான்.

அவள் தலைகுனிந்த வண்ணம் மெது வாகச் சென்று கொண்டிருப்பாள்.

இன்று வந்தவள் வழக்கம் போலத் தண்ணீர்க் குடத்துடன் நந்தியாவட்டைச் செடியருகே போய்ப் பெருமூச்சு விடவில்லை. அவன் எதிரே வந்து நின்றாள். அவளது குரல் மரக்கிளைகளின் சலசலப்போடு இழைந்து பேசியது.

"கதை எழுதுகிறீர்களா ?"

"உங்களுக்கு..."

அவள் கலகலவென்று நகைத்தாள். சிரிப்பொலியின் ஒவ்வொரு அலையும் அவனது மென்மையான இதயத்தைச் சுண்டி எதிரொலியை எழுப்பியது. அவளது எழிலின் பூரிப்பை அன்றுதான் கவனித்தான் அவன்.

"எனக்குத் தெரியும். நீங்கள்தானே தெய்வீகன் !....... பட்டணத்திலிருந்து அத்தை வீட்டுக்கு வந்திருக்கிறீர்கள். இல்லையா ? உங்கள் கதைகளை ஒன்று விடாமல் படித்திருக்கிறேன். படித்திருக்கிறேன் என்று சாதாரணமாகச் சொன்னால் போதாது. படித்து விட்டு ஆனந்தப்பட்டிருக்கிறேன், கண்ணீர் வடித்திருக்கிறேன், மெய்ம்மறந்திருக்கிறேன்....அப்பப்பா, எத்தனை உயர்ந்த எழுத்து ! இன்று உங்களைக் கண்டதில்..."

அவனும்தான் மெய்ம் மறந்தான். அவள் சென்ற பிறகும் மெய்ம்மறந்து தான் உட்கார்ந்திருந்தான்.

பொழுது போக்காகத் தொடங்கிய இலக்கியப் பணி, இன்று அவனது வாழ்க்கையின் இலட்சியமாகவே மாறிவிட்டிருந்தது. இலக்கியமே அவன், அவனே இலக்கியம் என்னும் உச்ச நிலையையும் எட்டியது. அவன் உலாவ விட்ட எத்தனையோ பாத்திரங்கள் ஒன்றையொன்று காதலித்தன. அவற்றின் இன்ப வேதனைகளை, ஆசாபாசங்களை அவன் அவற்றோடு ஒன்றி ஒன்றி வெகு இயற்கையாகச் சித்திரித்திருக்கிறான். கதைகளில் பாத்திரங்களைப் படைத்து அவற்றின் உள்ளங்களில் உணர்ச்சியை ஊட்டியது அவன். அவற்றின் கதையை அவன் எழுதினான். ஆனால் அந்த எழுத்தாளனின் சொந்தக் கதையை இன்னொருவன் மேலிருந்து எழுதிக் கொண்டிருந்தான். அந்த மாபெரும் சிருஷ்டிகர்த்தாவின் இலக்கிய ஏடுகளில் தெய்வீகனைப் பற்றிய இச்சிறு காதற்கதையின் முடிவு எத்தகையதாக இருக்கும் ?

* * *

அன்று அவனுக்குச் சோதனை தினம். அநசூயாவின் பெற்றோர்களிடம் போய் விட்டு வந்த அத்தை ஒன்றும் சரியாகச் சொல்லவில்லை. "பேசாமல் மறந்து விடடா பைத்தியக்காரா !" என்று மட்டும்தான் கூறினாள்.

இரவு பதினொரு மணியிருக்கும். கிராமம் உறங்கி விட்டது. அவனுக்கு உறக்கம் வரவில்லை; இருப்பும் கொள்ளவில்லை. எழுந்து வீதிக்கு வந்து மெதுவாக நடந்தான். இருண்ட வீதியில் சுவளது வீட்டுச் சாளரக் கம்பிகளினூடே வீசிய விளக்கொளி கோலம் போட்டிருந்தது. பேச்சுக் குரல் கேட்டுச் சுவரோரமாக நின்றான். அநசூயாவின் விசும்பல், விம்மல் இரவின் நிசப்தத்தில் விருந்து வெடித்தது. அவளது தந்தை அவளைத் தேற்றிக் கொண்டிருந்தார். நிறையப் படித்தவர், இலக்கிய ரசனை உடையவர் என்றெல்லாம் கேள்விப்பட்டிருந்த அவரது பேச்சுக்களை அந்நிலையில் அவனால் ரசிக்க முடியவில்லைதான்.

"ஒரு எழுத்தாளனது சிருஷ்டிகளை நாம் ரசிப்பதோடு மாத்திரம் நிறுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நமக்கும் ஆனந்தம், அவனுக்கும் நன்மை. இலட்சிய எழுத்தாளன், உயர்ந்த இலட்சியங்களுக்காக ஓயாமல் மூளையைக் குழப்பிக் கொள்வான். ஆனால் அவனது வாழ்க்கைத்தரம் சற்றும் உயராது. எழுதி எழுதித் தள்ளுவான். ஆனால் ஏழைமை அவனை விட்டு விலகாது !"

அவனது தலை சுற்றியது; தடுமாறினான். சாளரத்தருகே புடவையின் சலசலப்புக் கேட்டது. வந்த வழியே திரும்பி வீட்டையடைந்து அவன் படுக்கையில் சாய்ந்தான்.

கதையின் முதற்பகுதி இந்த இடத்திலே நின்றது. இதற்கு மேல் சரசுவின் கையெழுத்திலிருந்த பகுதி ஆரம்பமாயிற்று. சோமநாதன் இரண்டாம் பகுதியையும் தொடர்ந்து படித்தான்.

இரண்டாம் பகுதி

இன்று அநசூயாவின் நிலையே வேறு. அவள் விவாகமானவள். வேறொருவரின் மனைவி. இதோ பூசையறையில் அவள் உட்கார்ந்திருக்கிறாள். எதிரே அம்பிகையின் எழிலுருவப் படம். அருகில் முத்துப் போல் சுடர் விடும் குத்துவிளக்கு. புகைந்து கொண்டிருந்த தூபத்தின் மணம் அவளது வாழ்க்கையில் ஏதோ ஒன்று இல்லை என்பதை நினைவுறுத்திக் கொண்டிருந்தது. பூசையில் நிலையாது அலைந்த உள்ளம் கிராமத்துக் குளக்கரையை நோக்கிப் பாய்ந்தது. தெய்வீகனை அவள் முதன் முதலில் சந்தித்துப் பேசிய பிறகு ஒரு தினம் நிகழ்ந்த சம்பவம் அவளது மனத் திரையில் நிழலிட்டது.

அவன் அம்மரத்தின் தாழ்ந்த கிளையொன்றில் அமர்ந்து எழுதிக் கொண்டிருந்தான். அவள் வந்ததை அவன் கவனிக்கவே யில்லை. விரல்களைக் குடத்து நீரில் அமிழ்த்திச் சில துளிகளை அவன் மீது தெளித்தாள் அவள்.

"ஹோ...ஓ...அநசூயா!"

"என்ன எழுதுகிறீர்கள் அப்படி? அருகில் எத்தனை நேரமாக நிற்கிறேன், தெரியுமா?"

"அநு, நான் சொன்னால் உனக்கு இப்போது புரியாது!.. பைத்தியக்காரத் தனமாகத் தோன்றும்!"

"வேதாந்த விஷயமோ?"

"வேதாந்த மென்பதில் வேதத்துக்கு ஒரு அந்தம் உண்டு என்று பொருள் படுகிறதே! நான் எழுதும் விஷயம் அதைவிட உயர்ந்தது! முடிவற்றது!"

"புதிர் போடாதீர்கள்!"

"எனது காதல் கதையின் கடைசி அத்தியாயத்தை எழுதுகிறேன்...!"

"கடைசி அத்தியாயம்!"

"பைத்தியம், ஏன் துணுக்குறுகிறாய்? நான் எழுதும் கதைக்குத்தான் கடைசி அத்தியாயம். என் காதலுக்கு அல்ல, இதோ பார்!"

அவன் எழுதி யிருந்த கடைசி வரிகளை மட்டும் பார்த்தாள் அவள்.

அந்தச் சில வரிகளில்தான் எத்தனை தீர்க்கதரிசனம் அடங்கி யிருந்தது! உண்மையிலேயே அது அவனது வாழ்க்கையின் கடைசி அத்தியாயமாகத்தான் முடிந்தது.

அன்று அநசூயாவின் தந்தை கூறிய வார்த்தைகளைக் கேட்டதும் வீட்டுக்குச் சென்று படுத்தவன்தான். மனக் கொதிப்பு உடற் கொதிப்பாக மாறி விட்டது. உதயம் ஆவதற்குள் கடுமையான காய்ச்சல். அடுத்த நகரத்தி லிருந்து வந்து பார்த்த டாக்டர் 'டைபாய்டு' என்று சொன்ன பின் அவனது அத்தை பதறினாள். ஐந்தாறு தினங்கள் சென்றன. ஜுரத்தின் வேகம் குறையவில்லை. நினைவு தவறியது. பிதற்றல் கண்டு விட்டது. அநசூயா ஓடிச் சென்று பார்த்தாள். ஆனால் அவன் கண் திறந்தாலல்லவா?

அவனது இந்த நிலைக்குக் காரணம் என்ன என்பதை அவள் அறிவாள். ஒருகால் ஏதேனும் நேர்ந்து விட்டால்! "நேர்ந்துவிட்டால் பிறகு நான் உயிரை வைத்துக் கொண்டிருக்க மாட்டேன், அப்பா!" என்று கதறினாள் அவள். அவளது தந்தையின் மனமும் நெகிழாமல் இல்லை.

பதினேழாம் நாள். அவனது அத்தை ஓடி வந்தாள்.

"எப்படி இருக்கிறது?" என்று கேட்டார் அவளது தந்தை.

"கண்ணைத் திறந்திருக்கிறான். காய்ச்சலும் வெகுவாகக் குறைந்திருக்கிறது. அநசூயாவைப் பார்க்க வேண்டு மென்கிறான்" என்றாள் அவள்.

அவரது கண்களில் நீர் நிறைந்தது. "அழைத்துக் கொண்டு போங்கள். அவன் பிழைத்தெழுந்தால்......அவள் இஷ்டப்படியே..." என்று மேலே கூற மாட்டாமல் திணறினார் அவர்.

உள்ளத்தில் அபிலாஷைகளை மூட்டை கட்டி எடுத்துக் கொண்டு ஓடினாள் அநசூயா. ஆனால் அவள் கண்டது அணைந்து கொண்டிருக்கும் விளக்கை.

"அநு!"

அவள் அவனருகே மண்டி யிட்டாள். அவன் தன் முகத்தைச் சிரமப்பட்டு உயர்த்தினான்.

"ஐயோ! தலையைத் தூக்காதீர்கள்!"

"அநு, நீ எனக்கே உரிமையானவள்!"

மறு கணம் தலை சரிந்து விட்டது. இலக்கியக் கனவு கண்டுகொண்டிருந்த அந்த இலட்சிய எழுத்தாளனின் ஆன்மா இன்பக் கனவோடு கலந்து விட்டது.

பொதுமக்களுக்கு வேண்டுகோள்

நாகை வெளிப்பாளையம் கடகாவனத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ வல்லப விநாயகர் கோவில் பல அன்பர்கள் பொருள் உதவியைக் கொண்டு திருப்பணி இயற்றி, கும்பாபிஷேகம் நடைபெற்று 42 ஆண்டுகள் ஆகின்றன. இப்பொழுது மீண்டும் அன்பர்களின் பொருள் உதவியைக் கொண்டே திருப்பணியும், கும்பாபிஷேகமும் செய்விக்க எண்ணி யிருப்பதால், அன்பர்கள் அனைவரும் தங்களால் இயன்ற பொருள் உதவி செய்து, ஸ்ரீ வல்லப விநாயகரின் திருவருளைப் பெற்றுய்ய வேணுமாய் வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

நாகை, வெளிப்பாளையம்
23—4—59

ஆர். எம். கோவிந்தராஜுலு பிள்ளை (தலைவர்)
என். வீராசாமி (காரியதரிசி)

மனித வாழ்க்கையில் தூய காதல் ஒரு முறைதான் உதிக்க முடியும். ஒருவர் மீதுதான் ஏற்பட முடியும். அநசூயாவின் காதலன் இன்று இல்லை. அவனோடு அவளது வாழ்க்கையின் ஒளி மறைந்து விட்டது. அவனையே 'கணவன்' என்று உள்ளத்தில் பிரதிஷ்டை செய்து விட்ட பின் இன்னொருவரை அந்த உள்ளத்தால் தீண்ட முடியவில்லை. நிச்சயமாக அவர்களுடைய காதல் இன்று நேற்று ஏற்பட்டதாக இருக்க முடியாது. இதற்கு முன்னும் எத்தனையோ ஜன்மங்களில் அவர்களுக்குள் தூய்மையான தொந்தம் இருந்திருக்க வேண்டும். அந்த விட்ட குறையின் தொடர்ச்சிதான் இந்தப் பிறப்பில் நேர்ந்திருக்க வேண்டும் என்று அவளது உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து ஒரு மெல்லிய குரல் எழுந்து வலுப்பெற்றது.

காலப்போக்கு எதையும் துடைக்க வல்லது என்று எண்ணி அவளது தந்தை அவளுக்கு மறுமணம்—ஆம், மறுமணம் என்றுதான் கூற வேண்டும் — செய்து வைத்தார். ஆனால் அவளது இதய வேதனையை அவர் எப்படி அறிவார்? தெய்விகனின் ஸ்தானத்தில் இன்னொருவனை நினைத்துப் பார்க்கக் கூட அவளது ஆன்மா கூசியது.

அநசூயாவின் வாழ்க்கையில் புகுந்தவர் மிக நல்லவர். பிறர் மனம் நோகச் சகியாத உத்தமர். அவரது வாழ்க்கையைப் பாழாக்கி அவருக்குப் பாரமாகி விட்டோமே என்று அவளது மனம் அல்லும் பகலும் வேதனையுற்றது. அவர் மட்டும் மறுமணம் செய்து கொள்ள இசைந்து விட்டால்..அப்படி மட்டும் நடக்குமானால்......கிராமக் குளக்கரையிலே அந்த அரச மரத்தின் நிழலிலேயே அமர்ந்து வாழ்நாள் முழுவதையும் தெய்விகன் விட்டுச் சென்ற இலக்கியப் பணியைத் தொடர்ந்து செய்யும் வாய்ப்பு மட்டும் அவளுக்குக் கிடைக்குமானால்...அவள் தன் பிறப்பைப் பயனுற்றதாகக் கருதுவாள். அவளது கனவு நிறைவேறுமா....?

• • •

கதையின் இரண்டாம் பகுதியும் முற்றுப் பெற்றது. சோமநாதன் தன்னை மறந்தான். அவனது இமைகள் இலேசாக மூடின. இதயத்திலிருந்து ஒரு நெட்டுயிர்ப்பு வெளிப்பட்டது. "இன்னும் முற்றுப் பெறவில்லை..." என்று முணுமுணுத்தன அவனது உதடுகள்.

உள்ளத்திலே சூறாவளி உருவெடுத்தது. தெய்விகன் கற்பனைப் பாத்திரம் அல்ல என்று அவனுக்குத் தெரியும். அந்த அமர எழுத்தாளனே அவன் அறிவான். அவனது காதலி அநசூயா! அவர்களது தெய்விகக் காதல்! அவனது உடல் சிலிர்த்தது. அவனுக்குப் புரிந்து விட்டது—அநசூயா அவனது சரசுவைத் தவிர வேறு யாருமில்லை என்று!

அவனது விழிக் கோணங்களிலே கண்ணீர் கசிந்தது. உணர்ச்சி அவனது கரங்களை உந்தியது. காகிதத்தையும் பேனாவையும் எடுத்தான். அந்தக் காதற்கதையின் மூன்றாம் பகுதியை எழுதிக் கதையை முடித்தான்.

மூன்றாம் பகுதி

தன் வாழ்வில் புகுந்தவனை உத்தமன் என்று அநசூயா கருதியது முக்காலும் உண்மை. பிறர் மனம் நோகச் சகியாதவன்தான் அவன். தன் சுயநலத்துக்காகப் புனித உணர்ச்சிகளைப் பறித்துக் கொள்ள அவனது உள்ளம் ஒருநாளும் இசையாது. அநசூயாவின் களங்கமற்ற உள்ளத்தில் சுடர்விட்டு ஒளிரும் அமர தீபத்தை அணைக்க அவன் விரும்பவில்லை. அந்த இலட்சிய எழுத்தாளனின் நினைவைப் போற்றி அவள் இயற்ற விழையும் தூய வேள்விக்குத் துணை புரிவதில் அவன் மகிழ்ச்சியைக் காண்பான் என்பது நிச்சயம். மறுமணத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியமே இல்லை. வாழ்க்கையின் இன்பத்தைச் சேவையில் காண முடியும் என்ற நம்பிக்கை அவனுக்கு உண்டு. அநசூயாவின் கிராமத்திலே தெய்விகனின் பெயரால் ஒரு மருத்துவ சாலையைத் திறப்பதென்று அவன் நிச்சயித்து விட்டான். அவளது அபிலாஷை இப்போது பூரணமாக நிறைவேறுமென்பதில் ஐயமில்லை.

• • •

அதே கிராமம். அதே மரநிழல். ஒளியும் இருளும் ஒன்று கலக்கும் மாலை நேரம். தொடுவானத்தைக் கண் இமையாது பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தாள் சரசு. சாந்தம் நிலவிய வதனத்திலே திருப்தியின் சாயை படிந்திருந்தது. அந்தரத்தில் எதையோ கண்டாள் அவள்.

"அவர் தெய்வம் போன்றவர்தான்! எனது கடமையும் எனக்குத் தெரியாமல் இல்லை. ஆனால் ... உங்கள் நினைவை அழித்துவிடச் சொல்லாதீர்கள்! அது இல்லையேல் நான் இல்லை!" என்று முணுமுணுத்தது அவளது செவ்வாய்.

பின்னால் செடி மறைவிலிருந்து கேட்ட நெடுமூச்சை அவளது செவிப்புலன் உணரவில்லை. அங்கிருந்து மெல்லத் திரும்பிச் சென்ற அந்தத் 'தெய்வம் போன்றவரையும்' அவள் கவனிக்கவில்லை.

இந்தக் கதையில் வரும் ஒரு காட்சியையே இவ்வார அட்டைப்படமாக வரைந்திருக்கிறார் ஓவியர் லதா


அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை
COLGATE
COLGATE
DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்


மிக அழகிய...
அடர்ந்த நீண்ட ஒளியுள்ள கூந்தல்!
பிரதிதினமும் கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் தடவி வந்தால், கூந்தலானது அடர்த்தியாகவும், நீளமாகவும் வளருவதுடன் இளமையின் ஒளியுடனும், அற்புத ஜ்வலிப்புடன் விளங்குவதைக் கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள். அது உங்கள் கூந்தலின் இயற்கை அழகை எடுத்துக்காட்டி எல்லோரையும் பிரமிக்கச்செய்யும்.
மகிழ்ச்சியூட்டும் நறுமணம்—
உங்கள் குடும்பம்
முழுவதும் விரும்புவது!
COLGATE
HAIR OIL
கால்கேட்
பெர்பியூம்டு
காஸ்டர்
ஹேர் ஆயில்
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்!

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

105. சூலை [2]

இதைத்தான் 'இன்டஸ்டைனல் காலிக்' என்று மேல்நாட்டு வைத்தியத்தில் அழைப்பர். சாப்பிட்ட சிறிது நேரத்துக்கெல்லாம் ஏற்படுவதும், அப்படி ஏற்படும் வலி அலை அலையாக உண்டாவதும் இதன் முக்கியமான குறிகள். நிமிர்ந்து நின்று வயிற்றை முழு அளவும் பரப்புவதோ—மல்லாந்து கிடப்பதோ இதில் சாத்தியப்படாது. அரிவாளைப்போல் உடலை முன்புறம் வளைத்தபடிதான் சிறிது நிற்க முடியும். படுத்துக் கிடப்பதானாலும் அவ்விதமே தான் படுத்திருக்க முடியும்.

இதற்கும் முன் கட்டுரையில் சொன்னது போன்ற ஒத்தடங்கள் நல்லதுதான்.

ஆமணக்கெண்ணெயை வயிற்றின் மேலே தடவி ஒத்தடங்களைக் கொடுப்பது மேலும் நல்லது.

நவித்த ஆமணக்கெண்ணெயையோ அல்லது முன்னொரு கட்டுரையில் விளக்கிய ஹிங்குதிரிகுண தைலத்தையோ 10-15 துளிகள் சிறிது வெந்நீரில் விட்டு 3-4 மணி நேரத்துக்கு ஒருதரமாகச் சாப்பிட்டு வருவதும் நல்லது. படிப்படியாக வலியின் அலைகளின் வேகம் குறையும். ஒரு அலைக்கும் மற்றொரு அலைக்குமுள்ள இடைவேளையும் அதிகரிக்கும்.

வலி முழுதும் குணமானதற்கு அறிகுறி நன்றாக நிமிர்ந்து நின்றாலும் வலி ஏற்படாமல் இருத்தலே யாகும். நன்றாக ஏப்பம் வரும். காற்றும் பிரியும். ஒன்றிரண்டு முறை மலமும் போகும்.

இந்நிலை வந்த பிறகு, பசியும் தாகமும் தோன்றத் தொடங்கும். அப்போது ஆகாரம் கொடுக்கலாம். சோறு வெந்ததும் அதிகப்படி ஜலத்தை வடிக்கிறோமே! அதை வடிகஞ்சி என்றல்லவா சொல்வது! வடித்த உடனே இந்த வடிகஞ்சியில் கொஞ்சம் வெந்நீரைச் சேர்த்து நீர்க்கப் பார்த்த கஞ்சியில் சிறிது சிறிதாகக் குடிக்கக் கொடுப்பது நல்லது.

மறுபடியும் மறுபடியும் இந்தச் சூலை வராமல் இருக்க, முன் ஜாக்கிரதையாகச் செய்யவேண்டிய முயற்சியும் ஒன்றுண்டு.

இரண்டு ஸ்பூன் பொறுக்கி எடுத்த ஜீரகத்தைச் சட்டியில் இட்டு வறுக்கவும், படபடவென்று வெடிக்கும் போது அதில் ஒரு 'தம்ளர்' (8-10 அவுன்ஸ்) ஜலத்தை விட்டுக் காய்ச்சவும். சற்றுக் கஷாயமாகக் கண்டி நீர் ரத்தச் சிவப்பான நிலையில் இறக்கி வைக்கவும். இக்கஷாயத்தில் இரண்டு அவுன்ஸ் எடுத்து அதில் இரண்டு தான்வந்தர குடிகையைக் கரைத்துத் தினம் இரண்டு வேளை குடிக்கக் கொடுக்கவும். அல்லது ஜீரகம், சிற்றாமுட்டிவேர் இரண்டையும் சேர்த்துத் தயாரித்த கஷாயத்தையும் மேற் சொன்னபடி தான்வந்தர குடிகைக்கு அனுபானமாகக் கூட்டிச் சாப்பிடலாம்.

இன்னதென்று இனந் தெரிந்த, தெரியாத எந்தவித சூலமானாலும் சரி—அலை அலை போல் ஓய்வறத் தொடர்ந்து ஒன்றாக வரும் சூலத்திலானாலுஞ் சரி-சூலம், அதிலுள்ள பேதங்கள், அவற்றிற்கான காரணங்கள் என்பதையெல்லாம் மறந்து எல்லாவித சூலங்களிலும் கொடுக்கக் கூடிய மருந்து ஒன்று இருக்கிறது. அதுதான் 'ஹர்மால்' என்னும் சீமை அழுவானவிரை.

முக்கோண கன வடிவத்திலுள்ள இவ்விதை ஏறத் தாழ ஏலரிசியின் அளவுள்ளதாயிருக்கும். நிறமும் அதுவே தான். சுவைத்துப் பார்த்தால் கசப்பு; கடும் கசப்பு.

'' உமிக்குழியிலிட்ட தீ '' என்று கேட்டிருப்பீர்களே! மிக நிதானமாகப் பிடித்துப் பெருகும் இது......பனையோலையிலிட்ட தீயைப் போல் மடமடவென்று வானைமுட்ட எரிந்து ஒரே நிமிஷத்தில் தணிந்து விடாது. மிகமிக மெதுவாகத்தான் தீப்பிடிக்கும். மிகமிக மெதுவாகத்தான் வலுக்கும். நெடு நேரத்தில் அதிகரிப்பதாயினும் போகப் போக அதிகரித்துக் கொண்டே போகும். இதைப் போலத்தான் இந்த 'ஹர்மா'லிலுள்ள கசப்பும் சுவைக்கும் போது அவ்வளவாகத் தெரியாது. ஆனால் நேரம் செல்லச் செல்லக் கசப்பு அதிகரித்துக் கொண்டே போகும். கடைசியில் தாளவே முடியாத கசப்பு - துப்பித் துப்பி - வாயைக் கொப்பளித்த பிறகும் எங்கோ ஒளிந்து கொண்டே இருக்கும் அந்தக் கசப்பு.

இவ்விதையில் ஒரு எண்ணெய் இருக்கிறது. அந்த எண்ணெயினால்தான் இவ்விதை இவ்விதச் செயல் புரியும் திறன் பெற்றிருக்கிறது.

இவ்விதையைச் சூர்ணமாகப் பொடித்து நுண் பொடியாகச் சலித்து இரண்டு

மூன்று சிட்டிகையளவை வாயிலிட்டுச் சிறிது வெந்நீர் குடிக்கவும். ஐந்து அல்லது பத்தே நிமிஷங்களுக்குள் வலி நின்று விடும். சூர்ணமாக இவ் விதையை இடித்துச் சலித்து வைத்திருந் தால் காலக் கிரமத்தில் சிறிது சிறிதாக இதிலுள்ள எண்ணெய்ப் பசை போய் விடும். அந்நிலையில் இப்பொடி குணம் தராது. ஆகவே இவ்விதையைச் சம்பா தித்து வைத்திருப்பது, அவசியம் ஏற் படும்போது பொடித்துக் கொள்வது என்ற வகையில் உபயோகிப்பது நல்லது.

வயிற்றுவலி என்பது மட்டுமல்ல; காமாலை, பித்தப் பையில் கற்கள் உண் டாகி அதனால் ஏற்படும் வயிற்றுவலி, ஆஸ்த்மாவின் கடுமையான நிலையில் உண்டாகும் சுவாச முட்டல் என்று இப்படிப் பல நோய்களில் உடனே சமன மளிக்கும் சக்தியுள்ளது இந்த ஹர்மால்.

ஸ்திரீகளுக்கு மாதாமாதம் ஏற்படும் வயிற்றுவலி ஒன்று உண்டல்லவா? நல்ல வேளையாக இது ஒரு சிலருக்குத்தான் ஏற்படுகிறது. ஒவ்வொருவருக்கும் ஏற் படுவதா யிருந்தால் இந்த உலகமே நரகம் என்றாகி விடும். இது ஏற்படும் ஒரு சிலருக்கோ....! வலியாவது வலி! அழுதுவிடும் அளவுக்கு வயிற்றுவலி. அத்துடன் சிலருக்கு வாந்தி, சிலருக்குப் பேதி வேறு சிலருக்கு இரண்டுமே என்ற வேறு உபாதைகளும் சேர்ந்து கொள்ளுவதுண்டு. ஒரு வாய் ஜலம் கூடக் குடிக்க மனமிராது. குடித்தாலும் உடனே ஒன்றுக்கு நாலாக வாந்தியாகி விடும்; வயிற்றுவலியும் அதிகரித்துவிடும். அங்கப் பிரதக்ஷிணம் செய்பவரைப் போல், வலி தாளாமல் கிடந்து புரளு வர். இந் நிலையிலிருப்பவருக்கு இந்த ஹர்மால் மிகவும் நல்ல பலனை அளிக் கிறது. அவசியமானால் வயிற்றுவலி தீரும் வரையில் மூனு நாலுமணி நேரத்துக் கொருதரம் இதைக் கொடுத்து வரலாம்.

வயிறு, இடுப்புப் பக்கங்கள், ஆஸனம் முதலிய இடங்களில் ஏற்படும் சகலவித வலி வீக்கங்களுக்கும் ஆமணக்கு மிகவும் சிறந்த மருந்து. ஆமணக்கின் எண் ணெயை உள்ளுக்குக் கொடுக்கலாம். மேலுக்கும் தடவலாம். ஆமணக்கின் இலையின்மேல் ஆமணக்கின் எண்ணெ யையே தடவிச் சிறிது சூடாக்கி வலி யுள்ள [வீக்கமும் உள்ள] இடங்களின் மேலிட்டு வைக்கலாம். ஆமணக்கின் இலைகளை இடித்து, ஆமணக்கின் எண் ணெய் விட்டு இருப்புச் சட்டியில் வதக் கிப் பொறுக்கும் சூடுள்ள நிலையில் வலி யுள்ள இடத்தில் ஒத்தடம் கொடுக்க லாம். வீக்கமுள்ள இடங்களின் மேல்



வைத்துக் கட்டிச் சில மணி நேர மானதும் அவிழ்த்துக் களையவும் செய்யலாம்.

ஆகாரத்துக்கான நேரம் கடந்து, பசி மிஞ்சிவிடுமானால் வயிற்றில் ஒரு சூலம் ஏற்படும். 'கொம்பாகக் கொக்கியிட்டு இழுத்துப் பிடித்ததுபோல் வலிக்கிறது' என்று சொல்வார்கள்.

ஒன்றிரண்டு அவுன்ஸ் வெந்நீர் அல்லது கொதி நீரில் ஒரு சில துளி நெய்யையும் சிறிது சீனி கற்கண்டையும் இட்டுக் குடித்தால் இவ்வலி உடனே தீர்கும். பிறகு லகுவான ஆகாரத்தை அரை, முக்கால் வயிறு வரை சாப்பிட்டுவிட்டு ஓய்வெடுக்கவும். அடுத்த வேளையிலிருந்து கிரமமாகச் சாப்பிடலாம்.

இவ்வித வயிற்றுவலியிலும் ஹர்மாலைக் கொடுக்கலாம். இந்த ஹர்மாலைப்பற்றித் தமது குணபாடப் புத்தகத்தில் எழுதி வரும்போது டாக்டர் மோஹிதின் ஷெரிப் என்பவர், இந்த ஹர்மால் இல்லாத நிலையம் ஆஸ்பத்திரியே ஆகாது என்று சொல்கிறார்.

பைலட் பேனாவின் அற்புத மதிப்பிற்கு இதோ ஒரு அத்தாட்சி

"என்னுடைய பி.ஏ. பரீட்சை வெற்றிக்கு பைலட் தான் காரணம்" என்கிறார் விஸ்வரஞ்சன் சக்கரவர்த்தி

"நான் எடுத்துச் சென்ற விலை உயர்ந்த பேனா எனக்குக் கொடுக்கப்பட்ட மட்ட ரகமான காகிதத்தில் எழுத மறுத்து விட்டது. ஆனால் அதிர்ஷ்டவசமாக கூடவே பைலட் பேனா ஒன்றையும் எடுத்துச் சென்றிருந்தேன். ஒருதரம் கூட மீண்டும் மை போடாமல், பக்கத்திற்கு மேல் பக்கமாய் எவ்வளவு சுலபமாகவும் சுகமாகவும் எழுத முடிந்தது தெரியுமா! நான் இப்பொழுது உபயோகிப்பதெல்லாம் பைலட் பேனாவேதான்"





அநேகமாக மட்ட ரக காகிதத்தை உபயோகித்தே எழுத்து வேலை நடக்கிறது. குறைந்த விலையானாலும் பைலட் பேனா எந்தவிதமான காகிதம் மீதும்-உப்புத்தாள் உள்பட-எழுத வல்லது. அதன் உறுதியான நிப்பு, இறகு பேனா போல் மிருதுவாக எழுதுகிறது.

பைலட்

TRADE MARK

ஆயுட்காலம் முழுவதற்கும் தொந்தரவற்ற உழைப்பிற்கு பைலட் வாங்குங்கள்

நிர்வாக ஆபீஸ்:
பைலட் பென் கம்பெனி (இந்தியா)
பிரைவேட் லிமிடெட்
கத்தோலிக் சென்டர்
அரமனைக்காரன் தெரு, மதராஸ்-1.

தொழிற்சாலை மற்றும் ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:
கதிர்வேடு கிராமம், போலால்,
புழலேரி, செங்கற்பட்டு ஜில்லா.

PP 237a

ஷோ ரூம்: விற்பனை மற்றும் சர்வீஸ் வசதி உள்ளது
1, ஜெனரல் ஆஸ்பத்திரி சாலை (மூர் மார்க்கெட் எதிரில்) சென்னை-3

கைப் பிடித்தவள்

ராஜம் கிருஷ்ணன்

காவல் மரங்களை இழந்த காவகத்தைத் கட்டாந்தரை யாக்கிவரும் கர்வத்தில் மிதப்பவன் போல் கதிரவன் அம்மலைப் பிராந்தியத்தில் என்றுமில்லாத படி வெம்மையைப் பரப்பிக் கொண்டிருந்தான். கதிரவனின் பெருமைக்குப் புகழ் பாடுவதைப் போல் காற்று உய்யென்று ஒலிக்கச் சுழன்று மூலை முடுக்குகள், மேடு பள்ளங்கள் எங்கும் புழுதிப் புகையை எழுப்பிச் சென்றது.

அப்பிராந்தியத்தில் உருவாகிக் கொண்டிருக்கும் அணைக்கட்டுப் பக்கமிருந்து காற்றோடு வரும் கற்பொடியும் சிமிட்டியும் கலந்த புழுதி கால்களிலும் வேட்டி சட்டையிலும் படிய, கந்தசாமி முதுகில் சாக்குச் சுமையுடன் ஏறி இறங்கிப் பிழைப்பை நடத்திக் கொண்டிருந்தான். அணைக்கட்டில் பணி புரிபவர்களுக்காகப் புதிதாக முளைத்த புது ஊர் அது. கொலுப் படிகளில் அடுக்காக அமைத்தாற் போன்று மேடுகளிலும் சரிவுகளிலும் பள்ளங்களிலும் வரிசை வரிசையாக, இயந்திர யுகத்தின் சின்னங்கள் போல் அமைந்திருக்கும் வீடுகள்.

"பேப்பர் இருக்கா பேப்பர்......பழைய பேப்பர்!......" கூவிக் கொண்டே நடந்த கந்தசாமி, 'அம்மாமார்'களில்லாத ஒண்டிக் குடித்தனக்காரர்களின் வீட்டு வரிசையைப் பார்க்கப் பள்ளத்துக்குச் செல்லும் படிகளில் இறங்கினான்.

பிககல், சல்லிய மில்லாதவியாபாரம். அங்கே தான் நடத்த முடியும். ஆனால், அந்த 'ஐயா மார்'களின் வீடுகளில் காண்பதுதான் அரிதான செயல். ஞாயிற்றுக்கிழமைகளில் தான் பகல் வேளையில் அங்கு கலகலப்பு இருக்கும். இன்று ஞாயிற்றுக்கிழமை இல்லை. ஆனாலும் விடுமுறை நாள். கந்தசாமி நம்பிக்கையுடன் படியிறங்கி வந்தான்.

"பேப்பர் இருக்கா, பழைய பேப்பர்! சார்! பேப்பர்..பழைய பேப்பர்க்காரன், சார்!"

முதல் வீடு திறந்திருப்பதைக் கண்டு வாயிலில் நின்று உட்பக்கம் பார்த்துக் கந்தசாமி குரல் கொடுத்தான்.

"என்ன வெய்யில், மண்டை வெடிக்குது? கீழ்த் தேசம் போல்..."

வீட்டின் உட்புறம் கருத்தைச் செலுத்தியிருந்த கந்தசாமியின் கவனத்தை அந்தக் குரல் சட்டென்று திரும்பிப் பார்க்கச் செய்தது.

பார்த்தவனுக்குக் கண்கள் நிலைத்து விட்டன.

செல்வி !... செல்வியேதான்!

அவனை அங்கு அக்கோலத்தில் கண்ட அவள் ஒருகணம் பிரமித்தாலும், தலையைத் திருப்பிக் கொண்டு, வீட்டைச் சுற்றிச் சென்ற குறுகிய வழியில் வீட்டுப் பின்புறம் சென்று விட்டாள்.

கந்தசாமி ஏதோ குடைராட்டினத்தில் சுற்றிவிட்டு இறங்கியவனைப் போல் நின்றான்.

செல்வி இங்கு இருக்கிறாளா ?

அணைக்கட்டில் வேலையோ, அல்லது வேறு ஏதேனும் சில்லறைக் கூலி வேலையோ ?

இந்த வீட்டுப் பக்கம் வந்தாளே ?

ஆறு மாசங்களாக அவன் அங்கு வியாபாரம் செய்ய வருகிறான். அவள் கண்களில் பட்டிருக்கவில்லை...இங்கு..இங்கு..

நெஞ்சு அவனுக்கு உலர்ந்து போயிற்று. கூட்டி விழுங்கக் கூட எச்சில் இல்லை.

ஆறு ஆண்டுகளாக இழந்து போன வாழ்க்கையை அரை விநாடியில் மீட்டுக் கொடுத்தாள் செல்வி. இணையற்ற அந்த விநாடியைக் கந்தசாமி போற்றினான்

" என்னப்பா? பேப்பர் எடுக்கிறாயா?"

வீட்டுக்குரியவர் அவன் முன் ஏதோ குப்பை கூளத்தை அள்ளிக் கொண்டு வந்து போடுவதைப் போல் பழைய பத்திரிகைத் தாள்களை யெல்லாம் அள்ளி வந்து போட்டார்.

கந்தசாமி சுயநினைவுக்கு வந்தவனாக, வராந்தாவில் ஏறி உட்கார்ந்து அலங்கோலமாக இருந்த தாள்களை அழகாக மடிக்கலானான். 'அம்மாமார்களி'ல்லாத வாழ்க்கையை இந்தத் தாள்களே காட்டுகின்றன. அந்த வரிசை வீடுகளில் ஒழுங்காக, மடித்தது மடித்தபடி, எடை போடக் கச்சிதமாக இருக்கும்....வாழ்க்கையை வரம்போடு இழைந்து அழகாக ஓட்ட அந்தத் துணையின் அவசியத்தை மனம் எண்ணத் தொடங்கியதும், செல்வியின் நினைவே திரும்பி அவனைச் சங்கடத்துக்கும் வேதனைக்கும் உள்ளாக்கியது.

வீட்டுக்காரர் இன்னும் மூலை முடுக்கிலிருந்தெல்லாம் பத்திரிகைக் குப்பை

களைப் பொறுக்கி வந்து போட்டார். கந்தசாமி எல்லாவற்றையும் ஒழுங்காக மடித்துத் தராசில் தூக்கி நிறுத்தான். வீட்டுக்காரர் அவன் மடித்துக் கொண்டிருந்த நேரத்தில் வெளியே ஸெம்பச் சித்தமாக மாற்றுடை யுடுத்துக் கொண்டு வந்திருந்தார்.

சில்லறைப் பையைத் திறந்து, ''மூனு ரூபாய் பதிநாலணாவுக்கு இருக்குதுங்க, ஸார்...!'' என்று பணத்தை அவரிடம் எண்ணி வைத்தான்.

அவர் வெளியே போகும் அவசரத்தில் பணத்தை அப்படியே வாங்கிப் பைக்குள் போட்டுக் கொண்டார்.

சுமைகளைச் சாக்குப் பைக்குள் போட்ட வண்ணம், பூட்டும் கையுமாக நின்ற அவரிடம், ''சார்!'' என்றான் கந்தசாமி.

''என்ன?''

''ஏதேனும் கிழிந்த 'ஷு', செருப்பு இருந்தா எடுத்துக்கிடறேன் சார்...''

''இன்னொரு நாள் ஆகட்டும். இப்ப போய்யா...''


கந்தசாமி தலையைச் சொறிந்தான். ''கொஞ்சம் பாருங்க, சார்...!'' என்று இழுத்தான்

''அட போய்யான்னா. இன்னொரு நாள் வா...'' என்று அவர் கதவைப் பூட்டி விட்டார்.

கிடைத்தது லாபம் என்று அவன் சுமையுடன் வெளியில் இறங்கியவண்ணம் சுற்றுமுற்றும் பார்த்தான்

ஒவ்வொரு வீடாகப் பார்த்தவண்ணமே, ''பேப்பர் சார், பேப்பர்...!'' என்று கூவிக் கொண்டு நடந்தான்

எந்த வீட்டிலும் அவனை எவரும் தடுத்து அழைக்கவில்லை. அவனுக்கு ஒரு பரபரப்பு,



ஆவல், வேதனை. வாயிலில் பழி கிடந்து வியாபாரம் செய்யும் தெம்பு அவனுக்கு இல்லை. மறுகோடி வரையிலும் போய்த் திரும்பிய அவன் வந்த வழியே படிகள் ஏறினான்.

அதோ, செல்விதான். பேப்பர் போட்ட வீட்டுக்காரரிடம் அவள் என்ன பேசுகிறாள்? அவரைப் பார்க்கத்தான் அங்கு வந்தாள் போலும்! அவளுக்கு அவருடன் என்ன பேச்சிருக்கும்? மிஞ்சினால் கூலி வேலை செய்யும் பெண்ணாகத் தானே இருப்பாள்·

அவள் எதை வேண்டுமானாலும் பேசட்டுமே? அவனுக்கு ஏன் பதற்றம் உண்டாக வேண்டும்?

என்ன கேட்டாளோ, அவர் ஏதோ மொழிந்து விட்டு விரைந்து சென்று விட்டார். அவள் பிரிந்து விட்டாள்.

அவள் பின் செல்லவே கந்தசாமிக்குக் கால்கள் இழுத்தன.

சுமை தோளை அழுத்தியது. மடக்கடைப் பக்கம் சென்று முதலில் சுடலை நினைத்துக் கொள்ள வேண்டும்.

கந்தசாமி ''பேப்பர், பழைய புட்டி, டப்பா...'' என்று கூவவே மறந்தவனாகப் பார்த்துக் கொண்டே வளைந்த பாதையில் இறங்கினான். இது போல் ஒரு வீட்டில் அவனும் செல்வியுமாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கலாம். பாழாய்ப் போன ஆசை, அவனை நன்றியற்றவனாக நடக்கச் செய்து விட்டதே?

இடுப்பொடியச் செய்யும் கூலி வேலையைக் காட்டிலும் வியாபாரம் சுகமாகக் காசைக் குவிக்கும் வழி என்றல்லவா நினைத்தான்? செல்விக்கு இஷ்டமேயில்லை, அந்தக் குறுக்கு வழியில் செல்ல. பலன்...

ஆறு மாசம் 'கரும் புரும்' என்ற வாழ்க்கை. ஒருவர் மீதொருவர் குற்றம் சாட்டிக் கொண்டு சிடுசிடுப்பும் சண்டையுமாகச் சில நாட்களைத் தள்ளினார்கள். முடிவில் அவள் பக்கத்து வீட்டுக்காரனிடம் சகஜமாகச் சிரித்துப் பேசியதைச் சாக்காகக் கொண்டு, அவளிடம் எந்தக் கௌரவமான மனிதனும் பேசத் துணியாத சொற்களை உமிழ்ந்து பழி சுமத்திவிட்டு, அந்த நாற்பது ரூபாயுடன் அவன் பிரிந்து விட்டான்.

பழ வியாபாரம், பழைய துணி பாத்திர வியாபாரமென்று நாடு நகரமெல்லாம் பல்வேறு பொருள்களைச் சுமந்து கூவிப் பழகி விட்டான். ஆறு ஆண்டுகள் இன்று எப்படியோ, இன்று எப்படியோ, என்ற நிலையில்லாத வாழ்க்கை.

மடக்கடையில் சுமையை இறக்கி விட்டுத் திரும்பிய அவன் திடுக்கிட்டான்.

செல்வி...அங்கே!

முன்பெல்லாம் அவன் ஒருநாள்கூட டீக்கடைப் பக்கம் வர மாட்டானே?

இரண்டு போண்டாவும், ஒரு 'கிளாஸ்' டீயும் வாங்கிக் கொண்டு அவன் ஒரு பெஞ்சியில் உட்கார்ந்தவண்ணம் செல்வியையே பார்த்தான். இடையில் பூப் போட்ட வாயில் சேலை, தலையில் ஒரு சிலும்பல்கூட எழும்பாத கொண்டை. கொண்டையிலும் சவ்வந்திப்பூ. இயல்பாகவே மலர்ந்த முகம். கடைக்காரரிடம் இரண்டணாவுக்குப் போண்டா வாங்கிக் கையிலுள்ள பையில் வைத்துக் கொண்டவள், அடுத்து நின்ற கிழவியிடம் பேசினாள்.

''காலு ஊணவே முடியாம வலிக்குது ஆத்தா, வேலைக்குப் போகாம மூணு நாளா கூலி போவுது...'' என்றவள் ஜாடையாகக் கந்தசாமியையும் ஓரக் கண்ணால் பார்த்தாள்.

அவனுக்கு நெஞ்சு சிலிர்த்தது: தொண்டைக்குள் போண்டா இறங்கவில்லை. இனந்தெரியாத தவிப்பு.

காலை விந்தி விந்தித்தான் நடந்து சென்றாள் அவள்.

மூன்று நாட்களாய் வேலை இல்லை; கூலியும் இல்லை.

அவளுக்கு உதவுபவர் யாருண்டு?

உதவவேண்டிய அவன்...நன்றியற்றுப் போய் விட்டானே?

கண்கள் பசைத்து, வறண்டு புழுதி படிந்த முகத்திலே ஈரத்தை உணர்ந்தியது. அவனும் தனிக்கட்டை, அவளும் தனியானவள்.

திக்கற்ற மரக்கலங்கள் இரண்டு அலைகடலில் சந்தித்தாற்போல் அவர்கள் கூடினார்கள்.

அந்தச் சந்திப்பு ..!

வெம்மையிலே அவன் வாடித் தளர்ந்து வருகிறான். ஒரு மரம், பசுமை துலுங்க நிற்கிறது. மரத்தடியில் பசித்தவனுக்கு ஆவலை எழுப்பும் காட்சி வரிசை....

சிறியதும் பெரியதுமாக, அலுமினியமும் பித்தளையுமாக ஐம்பதுக்குக் குறையாத சாப்பாட்டுத் தூக்குப் பாத்திரங்கள்...அத்தனையும் அவன் வயிற்றுத் தீயை அவிக்கக் கூடிய அமுதமென்ன உணவைக் கொண்டவை.

மூன்று நாட்களாய் அவன் வேலை தேடி அங்கு வந்திருக்கிறான். வேலை கிடைக்கவில்லை. முற்பகல் பதினொரு மணி சுமாருக்கு அந்த உணவுப் பாத்திரங்களின் உரிமையாளர்கள் சற்று எட்டிச் சாலை போடும் பணியில் இருப்பார்கள். அவன் இருட்டு விழியுடன் மரத்தடியில் ஒண்டி மறைந்திருந்து, கைநீட்டி அகப்பட்ட பாத்திரத்து அடக்கத்தை வேட்டி மடியில் வைத்திருக்கும் காகிதத்தில் லபக்கென்று கொட்டிக் கொண்டு வேகமாக அப்பால் போய் விடுவான்.

திருடுவதற்கு மனச்சான்றுக்குச் சமாதானம் சொல்பவனாக, இரண்டு நாள் பசியைத் தீர்த்துக் கொண்டு விட்டான். மூன்றும் நாள் அவன் பாத்திரத்தைத் திறந்து கவிழ்க்குமுன் 'டக்'கென்று ஒரு கை அவன் கையைப் பிடித்தது.

வளையல்கள் குலுங்கிய கை தன்னைத் தீண்டியதென்று அறிந்ததும் வெலவெலப்புடன் நிமிர்ந்த அவனுக்கு அந்தக் கண்களைச் சந்திக்கவே 'ஒரு மாதிரி'யாக இருந்தது.

அதுபோன்ற 'ஒரு மாதிரியா'ன நிலைமை அவளுக்கும் ஏற்பட்டிருக்க வேண்டும். சீற்றத்தை உமிழ ஒளிர்ந்த கண்கள், அவனுடைய பரிதாபம் தேங்கிய கண்களைச் சந்தித்ததும் சீற்றத்தை விழுங்கிக் கொண்டன.

அவன் ஒன்றும் சொல்லத் தெரியாமல் விழித்தான்

''நேத்து என் சோறு போச்சு. இன்னைக்கு இந்தத் திருட்டு ஆளைக் கண்டு பிடிக்க வேணுமின்னே முழிச்சிட்டிருந்தேன். ஏய்யா, உனக்கு வேறே பிழைப்பில்லே? இந்த ஈனத் தொழில் செய்ய வெக்கமாயில்லே?''

''வேலை தேடித்தான் வந்தேனாத்தா, அஞ்சாறு நாள் கழிச்சு முதத்தேதி வாக்கிலே வான்னாக. வேறு வழியில்லாம ... பசி .... பசியாத்தா...''

கந்தசாமிக்குத் தொண்டை தழுதழுத்தது. கண்ணீர் அவனை நெகிழவைத்துவிட்டது.

''கேட்டுன்னாலும் வாங்கிக் கொள்ளலாம். திருட்டு ஆகாதய்யா!'' என்ற



வன் அவன் திறந்த பாத்திரத்தை மூடி விட்டுத் தன் பாத்திரத்தைத் திறந்து அவனிடம் நீட்டினான்.

கூனிக் குழைந்து போன அவன், "தெரியாம செஞ்சிட்டேனுத்தா, அத்தினியும் வேணும்" என்றான்.

புன்னகை மொட்டவிழ்த்தாற் போல அவள் இதழ்களில் மலர்ந்தது.

"ஒரு ஆள் சாப்பாடுதானே இருக்குது இதிலே?" என்று சொன்னான்.

"உ...உனக்கு வேணுமா ?"

"நான் வீட்டுக்குப் போய்க்கிடறேன்" என்றாள் அவள்.

முழுச் சோறும் அவனுக்கு இறங்கவில்லை. அவளுக்குப் பங்கு வைத்துத் தான் உண்டான்.

பிறகு அவனுக்கு வேலை கிடைக்கும் வரை அவள் அவனுக்கு ஒரு வேளைச் சோறிட்டாள். வேலை கிடைத்தபின், ஆளுக்கொருபங்கு என்றுவாழ்க்கையைப் பகிர்ந்து அநுபவிக்க இணைந்தார்கள்.

எல்லாம் கனவாகி விட்டது...!

நெடுமூச்சுடன் எழுந்த கந்தசாமி சாக்குச் சுமையுடன் மக்கடையை விட்டு வெளியே வந்தான்.

மாலை மங்கி, அந்தி சிவந்து இருள் மூடிக் கீழ்வானில் முன்னிலவும் பூத்து விட்டது. அவன் வளைந்த பாதையில் வீடுகளைப் பார்த்தவண்ணம் நடக்கையில், மேலே வளைந்த சாலையில் விளக்கொளியில் ஒரு பெண் நடந்து சென்றது தெரிந்தது. தலையில் குளிருக்காக மூடிக் கொண்டிருந்தாள். தனியாக அவள் சென்றபோது, அந்த நடை செல்லிக்குரியதென்று அவன் மனத்தில் உறைத்தது.

ஆவலோடு குறுக்கு வழியில் ஏறி,மேற் சாலையை அடைந்தான்.

சந்தேகமில்லை. செல்லிதான். சாலை விளக்கு அவள் பகலில் உடுத்தியிருந்த சேலையைக் காண்பித்து விட்டது.

நடக்கமுடியாதவள், இந்நேரம் அந்தப் பக்கம் எங்கே செல்கிறாள்?

மணி எட்டு இருக்கும். மேலே உள்ள ஒட்டு வில்லை வரிசை வீடுகளில் ஒன்றும் அவளுக்குச் சொந்தமாக இருக்க முடியாதே ?...

எங்கே? எதற்காக?

ஏதேதோ சந்தேகங்கள் அவனுள் அலைமோதின. அவன் அவளைப் பின் தொடர்ந்தான்.

அவள் பகலில் அவன் வியாபாரம் செய்த அந்த வீட்டு வரிசைக்குச் செல்லும் படிக்கட்டில் இறங்குகிறாள் ! முதல் வீட்டு வாசலில் நிற்கிறாள்; பகலில் கண்டு பேசினானே அந்த வீட்டுக்காரரின் வீட்டுப் படி ஏறுகிறாள். வீட்டுச் சன்னலில் விளக்கெரிகிறது. அவன் நெஞ்சம் கட்டுக்குள் அகப்படவில்லை.

சுவர் மறைவில் ஒண்டி எட்டிப் பார்க்கிறான். தெரு விளக்கொளி அந்த வராந்தாவில் விழுகிறது.

அவள் வராந்தாவில் ஏறி நிற்கிறாள்; கதவைத் தட்டுகிறாள்.

"சாமி !"

கதவு திறக்கப்படும் ஓசை கேட்கிறது; கந்தசாமி எட்டிப் பார்க்கிறான்.

"ஓ, நீயா?"

வீட்டுக்காரர் மின்னல்போல் தோன்றி விட்டு உள்ளே செல்கிறார்.

அவள் வராந்தாவிலேயே நிற்கிறாள்.

தொப்பென்ற சத்தத்துடன் ஏதோ வராந்தாவிலே வந்து விழுகிறது.

அவள் விழிகள் பி[illegible]ங்கப் பார்க்கிறாள்.

வீட்டுக்குடையவர் மறுபடியும் தடாலென்று கதவைச் சாத்திக் கொள்கையில், செல்லி கீழே வந்து விழுந்த அந்தப் பழைய ஜோடுகளைக் கண்கள் ஒளிரப் பரிசோதிக்கி[illegible]றாள்.

கந்தசாமிக்கு ஏதோ ஒன்று நெஞ்சை அடைக்கிறது. கண்களில் பொங்கிய நீர் துளும்புகிறது.

"செல்லி !" என்ற சொல் தழுதழுப்பில் கரைகிறது.

அவள் திடுக்கிட்டுப் பார்க்கிறாள்.

"என்னை மன்னிச்சிடு செல்லி, நன்றி கெட்ட மிருகமா நடந்திட்டேன்."

"கையை விடுங்க. இங்கேவந்து......"

அவள் ஜோடுகளைச் சேலைத் தலைப்பில் மறைத்துக் கொண்டு இறங்குகிறாள்.

"இங்கே எங்கே உளவு பார்க்க வந்தீர்களா? வியாபாரம் எப்படி இருக்குது? பணம் எம்புட்டுச் சேந்திருக்குது?"

கிண்டலும் கேலியும் தெறிக்க அவள் அவனைப் பார்த்தாள்.


"நீ என்ன சொன்னாலும் கேட்டுக்கிடறேன், செல்லி! என்னை....என்னை...காங்கிரிட்டுக் கலவை சுமந்து காலு சிமிட்டியரிச்சு நொந்து போச்சு. ஒரு பழைய ஜோட்டுக்காக இங்கே வந்து நிக்கிறேன்னு நினைக்கப் பொறுமையில்லாதவனாகப் போயிட்டேன். எம் புத்தியை ஜோட்டால் அடிச்சுக்கிடலாம். செல்லி, நீ....

"அட, போதுங்கறேன், நடுத் தெருவிலே கையைக் காலைப் புடிக்க வாணும். வீட்டுக்கு வாங்க, பேசிக்கிறேன்."

செல்லி மிடுக்குடன் முன்னே படி ஏறினாள்.

கந்தசாமி ஆறு வருஷங்களாக இருந்திராத ஆனந்தத்துடன் அவளைப் பின் தொடர்ந்தான்.

அவள் எவ்வளவு அழகாயிருக்கிறாள்...
அவள் உபயோகிப்பது பாண்ட்ஸ்



நீங்களும் சருமத்தை மிருதுவாகவும், வழவழப்பாகவும், அழகாகவும் வைத்துக் கொள்ள பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகியுங்கள்

இலேசானதும் பனிக்கட்டிபோல் மென்மையானதுமான பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள் சருமத்தின் மென்மையான அழகைப் பாதுகாத்து, அதை எழிலுடனும், பொலிவுடனும் இருக்கச்செய்யும். எண்ணெய்ப் பசையில்லாத இந்த க்ரீம் தேய்த்துக்கொண்ட மறு விநாடியிலேயே மறைந்து விடுகிறது. பவுடர் போட்டுக் கொள்வதற்குமுன் இந்த க்ரீமைத் தடவிக்கொண்டால் பவுடர் மணிக்கணக்கில் படிந்திருக்கும்.



சருமத்தை சுத்திகரிக்கும் சிறந்த க்ரீம்
தினமும் இரவில் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமை முகத்தில் தடவுங்கள். அது உங்கள் மிருதுவான சருமத்தை சுத்தம்செய்து முக அழகைப் பாதுகாக்கும்.

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பரேட்டட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது)

விஸ்டம் பல் வைத்தியரின்
புத்திமதியைக் கேளுங்கள்

உங்கள் பற்களை

பாதுகாத்துக் கொள்ள

Wisdom REGD.



உங்கள் பற்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளுங்கள்— 'விஸ்டம்' பிரஷ் கொண்டு காலையிலும் இரவிலும் பல் துலக்கவும்— முடியுமானால் சாப்பாட்டிற்குப் பிறகும் அவ்வாறே துலக்கவும்.

உறுதியுடன் நீண்டகால உழைப்பிற்காகவே ஆக்கப்பட்ட 'விஸ்டம்' பிரஷ் பற்களை முற்றிலும் சரிவர சுத்தம் செய்வதற்காக அமைந்துள்ளது. வளைவான கைப்பிடி லாகவமாகப் பிரஷைக் கையாள ஏற்றது. குறுகலான பிரஷ் நுனிகள் பல் வரிசைகளில் எந்த வளைவுகளிலும் பதியும்படி அமைந்துள்ளது. கம்பியினால் கட்டப்பட்ட மிருதுவான நைலான் ரோமங்கள் பல் இடுக்குகளில் சுத்தம் செய்யக் கூடியவை. அருகாமையிலுள்ள கடையில் 'விஸ்டம்' பிரஷ் வாங்கிக் கொள்ளுங்கள்.

நீடித்து உழைக்கும் டூத் பிரஷ்

107



அத்தியாயம் 16

"வாகைசூடி வருக"

விழிஞத்து அரச மாளிகையில் உட்கார்ந்திருந்த அந்த நேரத்தில் கடல் கடந்து பயணம் செய்தபோது தனக்கும், சேந்தனுக்கும் ஏற்பட்ட அனுபவங்களையெல்லாம் மகாராணிக்குச் சொல்லிக்கொண்டிருந்தாள் குழல்மொழி. பகவதி மாறுவேடத்தில் உடன் வந்தது, கப்பலிலிருந்து தப்பியோடி இலங்கைக் காட்டில் மாண்டது - ஆகிய சம்பவங்களை மட்டும் சொல்லாமல் தவிர்த்து விட்டாள் அவள். செம்பவழத்தீவைப் பற்றிச் சொன்னாள். ஆனால் மதிவதனியைப்பற்றிச் சொல்லவில்லை.

"பெண்ணே! இவ்வளவு அரும்பாடு பட்டுக் கடல் கடந்து சென்று என் குமாரனை அழைத்து வந்ததற்காக உனக்கும் சேந்தனுக்கும் நான் எவ்வளவோ நன்றி செலுத்தவேண்டும். எனக்குத் தெரிந்த பெண்களுக்குள் தளபதி வல்லாளதேவனின் தங்கை பகவதி ஒருத்தி தான் துணிவும், சாமர்த்தியமும், கொண்டு காரியங்களைச் சாதிக்கும் திறமை உள்ளவள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இப்போது பார்த்தால் நீ அதைவிடக் கெட்டிக்காரி என்று தெரிகிறது." எனக் குழல்மொழியைப் பாராட்டினார் மகாராணி. அவருடைய பாராட்டுரையில் பகவதியைப் பற்றிய பேச்சு வந்தபோது குழல்மொழியின் முகம் பயத்தால் வெளிறியது. உடல் மெல்ல நடுங்கியது. சிரமப்பட்டுத் தன்னை அடக்கிக் கொண்டாள் அவள்.

"தேவி! பகவதியை எங்கே காணவில்லை? நானும் என் தந்தையும் அரண்மனையிலிருந்து காந்தளூர் சென்றபின் அவளைச் சந்திக்கவேயில்லை. இப்போது அவள் எங்கே இருக்கிறாள்? நான் பார்த்து வெகுநாள் ஆயிற்று. பார்க்க வேண்டும்போல் ஆவலாயிருக்கிறது!" என்று அப்போது உடனிருந்த விலாசினி மகாராணியைக் கேட்கவே, குழல்மொழி தன் உணர்வின் பதற்றத்தை அடக்க இயலாமல் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டாள்.

"விலாசினி! நீங்களெல்லாம் ஊருக்குப் போன மறுநாள் காலையே அந்தப் பெண் பகவதியும் ஊருக்குப் புறப்பட்டுப் போய் விட்டாள் போலிருக்கிறது. மறுநாள் காலையிலிருந்து நான் அரண்மனையில் அவளைக் காணவில்லை. அவளுக்கு என்னிடம் என்ன கோபமோ, தெரியவில்லை. போகும்போது சொல்லிக் கொள்ளாமலே போய் விட்டாள். கோட்டாற்றுப் படை மாளிகைக்குத் தன் தமையனோடு போய் இருப்பாளென்று நினைத்துக் கொண்டேன். மறுபடியும் தளபதியைச் சந்திக்கிறபோது அந்தப் பெண்ணை வரச் சொல்லியனுப்ப நினைத்திருந்தேன். சந்தர்ப்பமே வாய்க்கவில்லை" என்று விலாசினிக்கு மறுமொழி கூறினார் மகாராணி.



''பகவதி உடனிருந்தால் பொழுது போவதேதெரியாது, தேவி! கலகலப்பான பெண்'' என்று மேலும் கூறினள் விலாசினி.

''ஆமாம்! நீங்கள் இரண்டு பேரும் என்னைத் தனியாக விட்டுப் போய் விட்டீர்கள். எனக்குத் தனியாக இருக்கவே பிடிக்கவில்லை. புவனமோகினியும் இல்லாமற் போயிருந்தால் எனக்குப் பைத்தியமே பிடித்திருக்கும்'' என்று மகாராணிக்கும், விலாசினிக்கும் பேச்சு வளர்ந்தது. ஒரு உண்மையைத் தெரிந்து வைத்துக் கொண்டே தெரியாததுபோல் நடிப்பது எவ்வளவு கடினமான காரியமென்பதை அப்போது தான் குழல்மொழி உணர்ந்தாள்.

''குழல்மொழி! உன்னையும் பகவதியையும் போல் பெரிய சாமர்த்தியமெல்லாம் இதோ என்னருகில் உட்கார்ந்திருக்கும் இந்தப் பெண் விலாசினிக்குக் கிடையாது. மிகவும் அடக்கமான பெண் இவள். காந்தளூர் மணியம்பலத்தில் எத்தனை கலைகள் சொல்லிக் கொடுக்கிறார்களோ அவ்வளவிலும் தேர்ந்தவள். நன்றாக காட்டியமாடுவாள்'' என்று விலாசினியைப் பற்றிப் புகழ்ந்து கூறினார் மகாராணி. தங்கள் பேச்சில் கவனம் செலுத்தாமல் எங்கோ முகத்தைத் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்த குழல்மொழியின் கவனத்தை மீட்கவே மகாராணி இப்படிக் கூறினார். ''தேவி! இடையாற்றுமங்கலத்து நங்கைக்கு முன் என்னை இப்படியெல்லாம் புகழாதீர்கள். எனக்கு வெட்கமாக இருக்கிறது'' என்று விலாசினி கூறிய சொற்கள் இயல்பானவையா, தன்னைக் கேலி செய்யும் தொனியுடையவையா என்று குழல்மொழிக்கே சந்தேகமாக இருந்தது. அவர்கள் ஒன்றாக அமர்ந்து இவ்வாறு பேசிக் கொண்டிருந்தபோது மகாமண்டலேசுவரரும் சேந்தனும் அங்கே வந்தார்கள். மகாமண்டலேசுவரரைக் கண்டதும் மகாராணி உள்பட மூவரும் எழுந்து நின்றனர். மாளிகையின் மற்றோரிடத்தில் அதங்கோட்டாசிரியர், பவழக்கனிவாயரோடு உரையாடிக் கொண்டிருந்த குமாரபாண்டியனும் அவர்களோடு மரியாதையாக மகாமண்டலேசுவரருக்கு அருகில் வந்து நின்றான்.

மகாமண்டலேசுவரானின் வாயிலிருந்து என்ன வார்த்தைகள் வரப போகின்றன என்பதை எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டு நின்றார்கள். ''பொழுதுவிடிந்து விட்டது. நீங்கள் எல்லோரும் அரண்மனைக்குப் புறப்பட்டுச் செல்லுங்கள். குமாரபாண்டியரையும் உங்களோடு அழைத்துச் செல்லுங்கள். நானும், சேந்தனும் இடையாற்றுமங்கலம் வரை போய் விட்டு அப்புறம் அரண்மனைக்கு வருகிறோம். நான் அரண்மனைக்கு வந்த பின் குமாரபாண்டியரைப் போர்க்களத்துக்கு அனுப்புகிறேன். அதற்குள் இலங்கையிலிருந்து வரவேண்டிய படைகளும் வந்து விடலாம்!'' என்று கூறிக் கொண்டே வந்த மகாமண்டலேசுவரர் மாளிகை வாசலில் குதிரைகள் வந்து நிற்கிற ஒலியைச் செவியுற்றுப் பேச்சை நிறுத்தினார். அவர் கண்களும், ஏனையோர் கண்களும் வாயிற்பக்கமாகத் திரும்பின.

போர்க்களத்திலிருந்து செய்தி கொண்டுவரும் தென்பாண்டி நாட்டுப் படை வீரர் இருவர் அவசரமாகக் குதிரைகளிலிருந்து இறங்கி உள்ளே வந்தனர். அவர்கள் முகங்களில் பரபரப்புத் தென்பட்டது. அவர்களில் ஒருவன் முன்னால் நடந்து வந்து மகாமண்டலேசுவரரைத் தலைதாழ்த்தி வணங்கிவிட்டு ஒரு திருமுக ஓலைச் சுருளை அவரிடம் அளித்தான். எல்லோருடைய முகத்திலும் ஆர்வம் படர்ந்து நிற்க அவர் அதைப் பிரித்துப் பார்த்தார்.

''மதிப்புக்குரிய மகாமண்டலேசுவரருக்குக் கரவந்தபுரத்துக் குறுநிலவேள் பெரும்பெயர்ச் சாத்தன் போர்க்களத்துப் பாசறையிலிருந்து கொண்டு எழுதும் அவசர ஓலை! தாங்கள் கோட்டாற்றுத் தளத்திலிருந்து அனுப்பிவைத்த ஐந்நூறு பத்திப் படை வீரர்களும் இங்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால் என்ன காரணமோ தளபதி வல்லாள தேவனை மட்டும் தாங்கள் அனுப்பவில்லை. நம்மிடம் படைவீரர்கள் நிறைய இருந்தும் தலைமை தாங்கி நடத்த ஏற்ற தளபதிகள் இல்லை. நானும், சேரநாட்டிலிருந்து வந்திருக்கும் தளபதியும், ஆக இரண்டுபேரே இருக்கிறோம். நம்மை எதிர்க்கும் வடதிசைப் பெரும் படையிலோ, ஐந்து திறமை வாய்ந்த படைத் தலைவர்கள் இருக்கிறார்கள். சோழ மன்னனும், கொடும்பாளூராளும், கண்டன் அமுதனும், அரசூருடையானும், பராந்தருடையானும்.—எவ்வளவு பெரிய படைத்தலைவர்கள் என்பது தங்களுக்குத் தெரியாததன்று. நம் கை சிறிது தளர்ந்தாலும் பகைவர்கள் வென்றுரைப் பிடித்துக் கொண்டு தெற்கே முன்னேறி விடுவார்கள்.



நேற்று நடந்த போரில் சேர நாட்டிலிருந்து வந்துள்ள படைத் தலைவன் ஏராளமான விழுப் புண்கள் பெற்றுத் தளர்ந்து போயிருக்கிறான். இன்னும் ஐந்தாறு நாட்களுக்கு அவன் போர்க் களத்தில் நிற்க முடியாதபடி பலவீனனாக இருக்கிறான். எனவே இந்தத் தகவல் கண்டதும் தளபதி வல்லாள தேவனைக் களத்துக்கு அனுப்பி வைக்கவும். அவன் வந்து விட்டால் நம் படைகளுக்கும் புதிய ஊக்கம் பிறக்கும். நம் வீரர்கள் குமார பாண்டியருடைய வரவையும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தளபதியை அவசரமாக அனுப்பவும்.''

இங்ஙனம்

தங்கள் கட்டளை மேற்கொண்டு நடக்கும்–

பெரும் பெயர்ச் சாத்தன்.

—படித்து முடித்ததும் ஓலைச் சுருளைப் பத்திரமாகத் தம் கையில் சுருட்டி வைத்துக் கொண்டார் அவர். மகாராணியை நோக்கிக் கூறலானார்:

''தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். வந்ததும் வராததுமாகத் தங்கள் புதல்வரை இங்கிருந்தே போர்க் களத்துக்குப் போகச் சொல்ல வேண்டிய அவசரம் இப்போது எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அரண்மனைக்குச் சென்று தங்கி நீண்ட நாள் பிரிவால் மனங் கலங்கியிருக்கும் தங்களை ஆற்றுவித்துப் பின்பு களத்துக்குப் புறப்படச் செய்யலாம் என்று நான் சற்றுமுன் கூறினேன். இப்போது அந்த ஏற்பாட்டை மாற்றி இங்கிருந்தே இளவரசரை அனுப்பப் போகிறேன். நம் படைகள் உற்சாகமின்றி இருக்கின்றனவாம். குமாரபாண்டியரைக் கண்டால் ஊக்கமும், உற்சாகமும் ஏற்படுமென்று கரவந்தபுரத்துப் பெரும் பெயர்ச் சாத்தன் எழுதியிருக்கிறான்.''

''மகா மண்டலேசுவரரே! இதில் மன்னிப்பதற்கு என்ன குற்றமிருக்கிறது! போர் செய்வதற்கும், தன் நாட்டைக் காப்பாற்றி முடிசூடிக் கொள்வதற்கும்தானே இவ்வளவு அரிய முயற்சிசெய்து இராசசிம்மனை இலங்கையிலிருந்து அழைத்துவரச் செய்திருக்கிறீர்கள். மகனைக் கண் குளிரப் பார்த்து விட்டேன். நெடு நாட்களாக என் நெஞ்சை வாட்டிப் பிழிந்து கொண்டிருந்த தாய்மைத் தாகத்தைத் தீர்த்துக் கொண்டேன். இனி அவன் போரை முடித்துக்



கொண்டு வெற்றி வாகை சூடித் திரும்புகிற வரை எவ்வளவு காலமானாலும் காத்திருப்பேன். தயவு செய்து அது வரை உங்கள் பெண்ணையும், ஆசிரியர் மகள் விலாசினியையும் என்னோடு அரண்மனையில் வைத்துக்கொள்ள இருவரும் இணங்க வேண்டும். சிறு வயதுப் பெண்கள் இருவர் உடனிருந்தால் எனக்கு என் கவலைகளை மறந்துவிட முடிகிறது" என்று மகாராணி முகத்தில் மலர்ச்சியோடு கூறினார்.

"மகாராணி! கரும்பு தின்னக் கூலி கேட்பார்களா யாராவது? என் மகள் விலாசினியும், மகாமண்டலேசுவரரின் பெண் குழல்மொழியும் தங்களோடு அரண்மனையில் இருப்பதைப் பெரும் பாக்கியமாக ஒப்புக் கொள்வார்களென்பதில் ஐயமில்லை" என்றார் அதங்கோட்டாசிரியர்.

குமார பாண்டியன் தாயின் அருகிற் சென்றான். குழல்மொழியும், விலாசினியும் விலகி நின்று கொண்டார்கள். மகாராணிக்குக் கண்கள் கலங்கின. "அம்மா! எனக்கு ஆசி கூறி விடையளியுங்கள். நான் வெற்றியோடு திரும்பி வருவேன். என்னுடைய எதிர்காலத்தைப் பற்றி உங்கள் மனத்தில் நிறைந்திருக்கும் எண்ணற்ற ஆசைகளை நிறைவேற்றுவேன். வெற்றியோடு திரும்பியவுடன் இலங்கையிலிருந்து நம்முடைய சுந்தர முடியையும், பொற் சிம்மாசனத்தையும், வீர வாளையும், காசிபமன்னர் கொடுத்தனுப்பி விடுவார். பின்பு எப்போதும்போல் இந்தத் தென்பாண்டி மரபு வளர்ந்தோங்கச் செய்யும் பொறுப்பை மேற்கொள்வேன். மகாமண்டலேசுவரரும் நீங்களும் அவ்வப்போது எனக்குப் பயன்படும் அறிவுரைகளையெல்லாம் போர்க்களத்துக்குச் சொல்லி அனுப்ப வேண்டும். சிறிதும் தயக்கமில்லாத நிறைமனத்தோடு கண் கலங்காமல் என்னை அனுப்புங்கள், அம்மா!" அன்னையின் காலடியில் மண்டியிட்டு வணங்கினான் அவன்.

"போய் வா. வெறும் இராசசிம்மனைத் திரும்பி வராதே! வெற்றி வீரன் இராசசிம்மனாக வாகை சூடி வா. பல்லூழிக் காலமாக இந்தத் தென்பாண்டி நாட்டைக் காத்துக் கொண்டு கடல் மருங்கே நின்று தவம் செய்யும் குமரித் தாய் உன்னைக் காத்து உனக்குத் துணை நின்று அருள் புரிவாள்." — கண்களில் நீர் பனிக்கத் தொண்டை கரகரத்துக் குரல் ஒலி மழுங்க இந்தச் சொற்கள் மகாராணியின் வாயிலிருந்து வெளி வந்தன. இந்த வார்த்தை செவியில் விழுந்த அதே சமயத்தில் அவன் பிடரியில் அன்னையின் கண்ணீர் முத்துக்கள் சில உதிர்ந்து சிதறின. இராசசிம்மன் எழுந்து மகாமண்டலேசுவரருக்கு அருகில் சென்றான்.

"சுவாமி! ஈழ நாட்டுச் சேனை சக்கசேனாபதியின் தலைமையில் வந்து சேர்ந்தால் அதை வெள்ளூர்ப் போர்க்களத்துக்கு அனுப்பி வையுங்கள். நான் இப்போதே புறப்படுகிறேன்" என்று கூறி முடிக்கு முன்பே, "அதெல்லாம் நான் கவனித்துக் கொள்கிறேன். நீ தாமதம் செய்யாமல் புறப்படு. இதோ இந்த வீரர்கள் உன்னை அழைத்துப் போகக் காத்திருக்கிறார்கள். நான் போர்க்களத்தில் இருக்கும் உனக்கு மிக முக்கியமான செய்தி ஏதாவது சொல்லி அனுப்ப வேண்டியிருந்தால் சேந்தனை அனுப்புவேன்! போய் வா......தோல்வியோடு திரும்பாமல் இருக்கத் தெய்வம் துணை புரியட்டும்" என்று அவசரத்தோடு இடைமறித்துச் சொன்னார் மகா மண்டலேசுவரர். அவன் அதிகம் பேசிக் கொண்டிருப்பதை விரும்பாத மாதிரி அவசரப்படுத்தினார் அவர்.

ஆசிரியரையும், பவழக்கனிவாயரையும் வணங்கினான் அவன்.

"வெற்றியோடு திரும்பி வந்து தங்கள் தந்தை பராந்தக பாண்டியர் போல் பெரும் புகழ் பெற்று வாழுங்கள்" என்று வாழ்த்தினார்கள் அவர்கள்.


"சேந்தா! இளவரசர் புறப்படுவதற்கு நல்ல குதிரை ஒன்று கொண்டுவா. இங்கே அரச மாளிகையில் யவனத்திலிருந்து வந்த உயர்தரமான குதிரைகள் நிறைய இருக்கும்!" என்று தம் ஒற்றனைத் துரத்தினார் மகாமண்டலேசுவரர். அதே மாளிகையின் பின்புறமிருந்த பரிமாளிகைக்கு ஓடிப்போய் ஒரு குதிரையை அவிழ்த்துக் கொண்டு வந்து நிறுத்தினான் சேந்தன்.

கடைசியாகப் புறப்படுவதற்கு முன், "இதோ ஒரு விநாடியில் வந்துவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டுத் தான் மட்டும் தனியாக அந்த மாளிகையின் பின்புறத்துக் கதவைத் திறந்து கொண்டு சென்றான் இராசசிம்மன். அங்கே குதிரைகளை மேற்பார்த்துக் கொள்ளும் கிழவன் ஒருவன் இருந்தான்.

"பெரியவரே! நான் மறுபடியும் வந்து கேட்கிறவரை இந்தப் பொருளைப் பாதுகாப்பாக வைத்திருங்கள்" என்று தன் வலம்புரிச் சங்கை அவரிடம் கொடுத்துவிட்டுச் சென்றான் இராசசிம்மன்.

குதிரைகள் புறப்பட்டன. எல்லோரும் மாளிகை வாயில் வரை வந்து நின்று இளவரசரை வழியனுப்பி வைத்தார்கள். அவர்கள் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் மகாராணியும், மற்றவர்களும் அங்கிருந்து பல்லக்குகளில் அரண்மனைக்குக் கிளம்பி விட்டனர். சேந்தனும், மகாமண்டலேசுவரரும் மட்டுமே விழிஞத்து அரசமாளிகையில் எஞ்சி யிருந்தனர். மகாமண்டலேசுவரர் சேந்தனை அனுப்பி விழிஞத்துக் கடல்துறை அதிகாரிகளை வரவழைத்தார். அவர்கள் வந்தனர்.

"அதிகாரிகளே! உங்களிடம் ஒரு பொறுப்பான காரியத்தை இப்போது ஒப்படைக்கப் போகிறேன். நாளை அல்லது நாளன்றைக்குள்ளாக ஈழநாட்டுப் படைக் கப்பல்கள் சக்கசேனாபதியின் தலைமையில் இத்துறைக்கு வந்து சேரும்,


ஐயோ இருமல் கொல்கிறதே
EPHRILIME
எப்ரிலேம்
அவரது ஆஸ்த்மா உபாதைகளை குணப்படுத்த எப்ரிலேம் மிகச் சிறந்தது. ஒரு பாட்டில் மருந்தை உபயோகித்தால் அதன் பூரண பலன்களைக் காண்பார்.
நீண்டகாலப்பட்டதும், மிக்க உபாதை தரக் கூடியதுமான மார்ச்சளி, ஆஸ்த்மா முதலிய ரோகங்களுக்கு ஓர் சிறந்த ஹானியற்ற மருந்து
யூனியன் டிரக் கம்பெனி, லிட்.
மதராஸ் டிப்போ: 2, ஜோன்ஸ்லேன், மதராஸ்-1


LINIT
No Cooking
கஞ்சிக்குச் சிறந்த
லினிட்
ஸ்டார்ச் உபயோகித்து
சலவையை பூரணமாக்குங்கள்
துணிகளில் ஊடுருவிச் செல்லும் தன்மை யுள்ளது. பாகம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. வெந்நீரில் கலந்தால் போதும்
இந்தியாவிற்கான ஏஜண்டுகள்:
பாரி அன்டு கோ. லிமிடெட்.


வாஸ்மால்
கருமையை வளர்க்கும்
கூந்தல் தைலம்
Vasmol
HAIR DARKENER
நரை மயிரைக் கருமை யாக்கிப் பளபளப்பையும் ஊட்டுகிறது.
கேசவளர்ச்சியை ஊக்குகிறது.
மென்மையான நறுமணம் கொண்டது.
கூந்தல் வளர்ச்சிக்கு உகந்த தைலம்.
தைலமாகவும் போமே டாகவும் மோசடி செய்ய முடியாதமூடியுடைய பாட்டில்களில் எல் லாக் கடைகளிலும் கிடைக்கும்.
ஹைஜினிக் ரிஸர்ச் இன்ஸ்டிடியூட்
தபால் பெட்டி என் 1192, பம்பாய்-1


வெற்றிக்கான "கோலை" நான் அடித்தேன்
போர்ன்-விடாவுக்கு எனது நன்றி
நான் மிக்க பலஹீனத்துடன் இருந்ததினால் பள்ளியில்
மாணவர்கள் என்னைப் பரிகாசம் செய்து வந்தனர். அதுசமயம்
தினமும் போர்ன்-விடா அருந்தும்படி எங்கள் டாக்டர் சொன்னார்.
அப்படியே செய்ய இழந்த சக்தி பூராவையும் நான்
திரும்பப் பெற்றேன். என் பள்ளியில் கால்பந்து
விளையாட்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டு இப்போது அதற்கு
தலைவனாக இருக்கிறேன். எல்லா விளையாட்டுப் போட்டிகளிலும்
நாங்கள் வெற்றி பெற்றிருக்கிறோம். எங்கள் குடும்பத்தில்
எல்லோரும் போர்ன்-விடாவை தினந்தோறும்
அருந்துகிறோம். அதிக சக்திக்கும், வலிமைக்கும்
தினமும் போர்ன்-விடா அருந்துங்கள்.
Cadbury's
BOURN-VITA
THE IDEAL
FOOD DRINK
MADE BY CADBURYS
SPECIALISTS IN FOOD
DRINKS FOR 100 YEARS
For Strength and Vigour
BOURN-VITA
MADE BY
Cadbury's

அப்போது நீங்கள் சக்க சேனாபதியைச் சந்தித்து, இராசசிம்மன், படைகளை இறக்கிக் கொண்டு உங்களை வெள்ளூர்ப் போர்க்களத்துக்கு நேரே வரச்சொல்லியிருக்கிறார் என்று தெரிவித்துவிட வேண்டும். இது முக்கியமான பொறுப்பு" என்று மகாமண்டலேசுவரர் கூறிய போது அந்த அதிகாரிகள் தலை வணங்கி ஒப்புக் கொண்டனர். அவர்களை அனுப்பியபின் அவர் சேந்தன் பக்கம் திரும்பினார். "சுவாமீ! இதுவரை மற்றவர்கள் உடனிருந்ததற்காகப் பொறுத்துக் கொண்டிருந்தேன். இனி என்னால் ஒரு கணம் கூட என் ஆத்திரத்தைத் தவிர்க்க முடியாது. நேற்றிரவு இளவரசருக்கு முன் தங்கள் முடியில் கல்லெறிந்து தங்களை அவமானப்படுத்தியவன் யார் என்று கண்டுபிடித்து அந்த முட்டாளின் மண்டையை உடைத்தால்தான் என் ஆத்திரம் தீரும். அப்போதே ஓடிப் போய்த் தடுத்துப் பிடித்திருப்பேன். நீங்கள் கூடாதென்று நிறுத்தி விட்டீர்கள்!" என்று ஆத்திரத்தோடு கூறினான் சேந்தன். மகாமண்டலேசுவரர் சிரித்தார்.

"சேந்தா, பொறு! எனக்கு அவர்கள் யாரென்பது தெரியும். இன்னும் சில நாட்கள் கழித்துப் பார். இப்படி இருட்டில் மறைந்து எறியாமல் நேரடியாகவே வந்து என்மேல் கல் எறிவார்கள் அவர்கள்" என்றார் அவர்.

அந்த வார்த்தைகளைச் சொல்லும் போது அவருடைய குரல் தொய்ந்து நைந்து ஒலிப்பதை நாராயணன் சேந்தன் உணர்ந்தான்.

"சுவாமீ! எதற்கும் வருத்தப்படாத உங்களையும் வருந்தச் செய்துவிட்டார்களே? அவர்கள் யாரென்று மட்டும் சொல்லுங்கள். இப்போதே போய்க் கழுத்தைத் திருகிக் கொண்டுவருகிறேன்" என்று துடிப்போடு சொன்னான் அவன்.

"கோபத்தை அடக்கிக் கொள்! என்னோடு புறப்படு. என்னுடைய அனுமானம் சரியாயிருந்தால் வாழ்க்கையிலேயே மகத்தான காரியம் ஒன்றை நாளைக்கு நான் செய்ய வேண்டியிருக்கும். எல்லாவற்றையும் நடக்க நடக்கப் பார்த்துக் கொண்டிரு! ஒன்றையும் கேட்காதே" என்று கூறிவிட்டுச் சேந்தனையும் உடன் அழைத்துக் கொண்டு விழிஞத்திலிருந்து புறப்பட்டார் அவர். அன்று இரவு நெடுநேரத்துக்குப் பின் அவர்கள் இருவரும் கோட்டாற்றுப் படைத்தளத்தை அடைந்தனர்.

அங்கே தூங்கி வழிந்து கொண்டிருந்த யவனக் காவல் வீரர்கள் எழுந்து வந்து தளபதி வல்லாளதேவன் தப்பிப் போய் விட்டானென்ற செய்தியை நடுங்கிக் கொண்டே சொன்னார்கள்.

"என் ஓலையோடு ஆபத்துதவிகள் தலைவன் குழைக்காதன் இங்கு வந்தானா?" என்று கேட்டார் அவர். "வரவில்லை" என்ற பதில் அவர்களிடமிருந்து கிடைத்தது. "சேந்தா! இன்னுமா உனக்குச் சந்தேகம்? என்மேல் கல்லெறிந்துவிட்டு ஓடியவர்கள் யார் என்று இப்போது கூடவா உனக்குத் தெரியவில்லை?" என்று சேந்தனிடம் காதருகில் மெல்லக் கேட்டார் மகாமண்டலேசுவரர்.

"புரிகிறது, சுவாமீ! கல்லெறிந்த கைகளை முறிக்க ஒரு சூழ்ச்சி செய்ய வேண்டும்."

மகாமண்டலேசுவரர் நகைத்தார். "அப்பனே! சூழ்ச்சிகளைக் கடந்த நிலையில் இப்போது நான் நிற்கின்றேன். வா. இடையாற்று மங்கலத்துக்குப் போகலாம். நீ எந்தநேரமும் எனக்கு அந்தரங்கமானவனல்லவா? புறப்படு" என்றார்.

அத்தியாயம் 17

குமுறும் உணர்ச்சிகள்

பிறரிடம் சேர்க்க வேண்டிய செல்வங்களை அபகரித்து ஒளித்து வைத்துக் கொண்டு வாழ்கிறவன்கூட நிம்மதியாக இருந்துவிட முடியும். ஆனால் பிறரிடம் சொல்லவேண்டிய உண்மையை மறைத்து வைத்துக் கொண்டு அப்படி நிம்மதியாக இருந்துவிட முடியுமா? உண்மை என்பது நெருப்பைப்போல் பரிசுத்தமானது. தான் ஒளித்து வைக்கப்பட்ட இடத்தைச் சுட்டுக் கொண்டே இருக்கும் அது!

பகவதியின் மரணம் என்ற எதிர்பாராத உண்மைதான் மறைத்து வைக்கப்பட்ட உள்ளங்களைச் சுட்டுக்கொண்டே இருக்கது. குமார பாண்டியனுக்கு எப்பொழுதுமே அவனுடைய அன்னையைப்போல் நெகிழ்ந்து இளகிவிடும் மனம் வாய்த்திருந்தது. இந்த நெகிழ்ச்சியே அரசியல் வாழ்க்கையில் அவனுடைய பலவீனங்களுக்குக் காரணமாக இருக்கலாம். அரசியல் நூல்கள் அரசனின் இலக்கணமாகக் கூறும் ஆண்மையின் கடுமையும் தன் கீழ்நிலையை எண்ணித் தனது பகைமையை அழித்து உயரக் கருதும் வைரம் பாய்ந்த கொதிப்பும் ஆரம்பமுதல் அவனுக்கு இல்லாமலே போயிற்று. தோற்றச் சாயலில் தந்தையைக் கொண்டிருந்த அவன், பண்பில் தாயைக் கொண்டு பிறந்திருந்தான். எதையும் மறைக்கத் தெரியாதவனாக யாரையும் கெடுக்க நினைக்காதவனாக இருந்தான் அவன். விரைவில் உணர்ச்சிகளுக்கு இலக்காகி அதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளும் தன்மை அவனிடம் இருந்தது.

தங்கள் கப்பல் விழிஞத்தை அடைந்து கரையில் இறங்கிய சிறிது நேரத்துக்குள்ளேயே பகவதியின் மரணத்தைப் பற்றிச் சொல்லித் தன் உணர்ச்சிகளின் துயரத்தை எல்லோரோடும் கலந்து

கல்கி

சந்தா விகிதம்

	ஒரு வருடம் ரூ. ந.பை	ஆறு மாதம் ரூ. ந.பை
இந்தியா இலங்கை	15—00	7—50
பர்மா, மலேயா வெளி நாடுகள்	18—00	9—00

தனிப் பிரதி விலை 30 நயா பைசா

சந்தா தொகை முன்னதாக அனுப்பப்பட வேண்டும். வி.பி.பி. கிடையாது. இலங்கை நேயர்கள் மட்டும் வி. பி. பி. மூலம் சந்தா தொகையைச் செலுத்தலாம்.

மானேஜர்: கல்கி காரியாலயம், சென்னை-10

கொண்டுவிட வேண்டுமென்று துடித்தான் அவன். அவனோடு வந்த குழல்மொழியோ, சேந்தனோ, அந்த உண்மை தெரிந்திருந்தும் அவனைப்போல் அதை வெளியிடுவதற்குத் துடிக்கவில்லை. அதை அப்போது வெளியிடக் கூடாதென்றே நினைத்தனர் அவர்கள் இருவரும். மகாராணி முதலியவர்களிடம் பகவதியின் மரணத்தைப் பற்றிச் சொல்லிவிடுவதற்குக் குமாரபாண்டியனின் வாய் துடிப்போடு முனைந்ததைக் கவனித்து விட்டாள் குழல்மொழி. அதைச் சொல்லிவிடாமல் தடுக்க வேண்டும் என்ற குறிப்பைத் தன் கண் பார்வையாலேயே சேந்தனுக்குத் தெரிவித்தாள் அவள். சேந்தன் உடனே மகா மண்டலேசுவரருக்கு அந்தக் குறிப்பைத் தெரிவித்தான். மகா மண்டலேசுவரர் உடனே குமார பாண்டியனைச் சிறிது தொலைவு விலக்கி அழைத்துக் கொண்டு போய், 'பகவதியின் மரணத்தைப் பற்றிய செய்தியைத் தாம் சொல்லு முன் வெளியிடக் கூடாதென்று' வாக்குறுதி பெற்றுக்கொண்டு விட்டார். அந்த ஒரு வாக்குறுதி மட்டுமன்று, தளபதி வல்லாளதேவனைக் கோட்டாற்றுப் படைக் கோட்டத்திலேயே தாம் சிறை வைத்துவிட்ட திடுக்கிடும் செய்தியையும் அவனிடம் தெரிவித்து அதையும் வெளியிடக் கூடாதென்று மற்றொரு வாக்குறுதியும் பெற்றுக் கொண்டார். மகாமண்டலேசுவரரைத் தவிர வேறு எவராக இருந்தாலும், அத்தகைய நெருக்கடியான சமயத்தில் குமார பாண்டியனிடமிருந்து அந்த இரண்டு வாக்குறுதிகளையும் பெற்றுவிட முடியாது.

ஆனால் மழுங்காத கூர்மை பெற்ற அந்த அறிவின் செல்வர் எந்தெந்த விளைவுகளைத் தடுப்பதற்காகக் குமார பாண்டியனிடம் அந்த வாக்குறுதிகளைப் பெற்றாரோ, அந்த விளைவுகள் அப்போதே அங்கேயே அவருக்கருகில் நின்றன என்பது பின்புதான் அவருடைய அறிவுக்கே எட்டியது. தாமும், குமாரபாண்டியனும் எந்தப் பாறையருகில் நின்று பேச நேர்ந்ததோ, அதன் மறைவில் இருளில் தளபதியும், குழைக்காதனும் நின்றிருப்பார்கள் என்று அவர் எதிர்பார்த்திருக்கமாட்டார். திடீரென்று தமது மகுடத்தில் வந்து விழுந்து கீழே தள்ளிய கல் அவரை அப்படி எதிர்பார்த்துச் சிந்திக்க வைத்தது. அந்த இடத்திலேயே அந்தக் கணத்திலேயே அப்படி எறிந்து விட்டு ஓடும் எதிரிகள் யார் என்று பிடித்துக் கொணர்ந்து பார்த்துத் தம்முடைய அவமானத்தைப் பெருக்கிக் கொள்ள விரும்பவில்லை அவர். அதனால்தான் பிடிப்பதற்காக ஓடிய சேந்தனையும், குமார பாண்டியனையும் கட்டாயமாகத் தடுத்து நிறுத்தினார் அவர். ஊழி பெயரினும் தாம் பெயராத சான்றாண்மையோடு சிரித்துக் கொண்டே கீழே விழுந்த மகுடத்தை எடுத்துக் கொள்ள அவரால்தான் முடியும் – முடிந்தது. வெளியில் உணர்ச்சிகளைக் காட்டாமல் நடந்து கொண்டாலும் இதயத்துக்கும் இதயமான நுண்ணுணர்வின் பிறப்பிடத்தில் அந்தக் கல் விழுந்த நினைவு உரசியபோது ஒரு கனற்பொறி எழுந்தது. உள்ளே குமுறலும் வெளியே பரம சாந்தமுமாக நடந்து கொண்டார்.

"இத்தனை காலமாகக் கண் பார்வையையும், பேச்சையுங்கொண்டு ஒரு தேசத்தையே ஆட்டி வைத்த என் அறிவின் கௌரவம் இந்தக் கல்லினால் விழுந்து விட்டதா? ஏன் இப்படி என் மனம் கலங்குகிறது? எத்தனைதான் மேதையாக இருந்தபோதிலும் கல்வினைப் பயன் தீர்கிற காலம் வரும்போது ஒரு மனிதனுடைய அறிவு பயனற்றுப் போகும் என்கிறமாதிரி நிலையில் வந்து விட்டேனா நான்?" என அவருடைய மனத்தில் உணர்ச்சிகள் குமுறின அப்போது. இருளில் விளக்கு அணைந்ததும் பயந்து அழுகிற குழந்தையைப்போல் முதல் முதலாக அவருடைய மனம் தன்னையும் தன் வினைகளின் பயனையும் எண்ணி உள்முகமாகத் திரும்பிப் பார்த்தது. ஒரு தேசத்தையே மலைக்கச் செய்த அந்த அறிவு தனக்காகவும் சிறிது மலைத்தது. ஆனால் அதன் ஒரு சிறு சாயைகூட வெளியில் தெரிந்து கொள்ளுமாறு காட்டப்படவில்லை. இது வரை பிறருடைய உணர்ச்சிகளைக் கலக்கி ஆழம் பார்த்த மனம் இப்போது உணர்ச்சிகளால் கலங்கியது.

குமார பாண்டியனுடைய கப்பல் வந்த பின் நேர்ந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொரு உள்ளத்திலும் ஒவ்வொருவிதமான உணர்ச்சிகளைக் குமுறச் செய்திருந்தன. தெய்வத்துக்கும் மேலாக மதித்துத்தான் பக்தி செலுத்திப் பணிபுரிந்து வந்த மகா மண்டலேசுவரரின் மேல் கல்லெறிந்து விட்டு ஓடியவர்களைப் பிடித்துக் கட்டி வைத்து உதைக்க முடியாமல் போய் விட்டதே என்று சேந்தன் கொதித்தான். சேந்தன் வீர வணக்கம் செய்யும் பிடி

வாதக் குணமுடையவன். தன்னை முழுதும் ஒரே ஒரு மனிதருக்கு மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் அடிமையாக்கிக் கொண்டிருந்தான் அவன். காலஞ்சென்ற தன் தந்தைக்கும், முன்சிறையில் அறக்கோட்ட மணியகாரனாக இருக்கும் தன் தமையனுக்கும் கூட இவ்வளவு அடங்கி ஒடுங்கிப் பணிவிடை புரிந்ததில்லை அவன். மகாராணி, குமாரபாண்டியன் ஆகியவர்களிடம் அவனுக்கு அன்பும், மரியாதையும் மட்டும்தான் இருந்தன. மகாமண்டலேசுவரர் என்ற ஒரே ஒரு மேதையிடம்தான் வசப்பட்டு மெய்யடிமையாகிக் கலந்திருந்தான். எவராலும் மாற்ற முடியாதபடி இந்த வீர வணக்கப் பண்பு அவனிடம் பதிந்துவிட்டது. உலகம் முழுவதுமே மகாமண்டலேசுவரருக்கு எதிராகத் திரண்டு வந்தாலும் மூன்றரை முழ உயரமுள்ள அந்தக் குள்ளன் அவர் அருகில் மெய்க்காவலனாக நின்று கொண்டிருப்பான். மகாமண்டலேசுவரருடைய செல்வப் பெண் குழல்மொழிக்குக் கூட அவர் முகத்தை மட்டும்தான் பார்க்கத் தெரியும். ஆனால் சேந்தன் அவருடைய அகத்தையும் நெருங்கி உணர முடிந்தவன்.

அதனால்தான் மகாமண்டலேசுவரர் அவமானப்பட நேர்ந்ததைக் கண்டு அவன் உள்ளம் அவ்வளவு அதிகமாகக் குமுறியது. குமாரபாண்டியனும் அதைக் கண்டு மனம் கொதித்தானென்றாலும் அந்தக் கொதிப்பு எவ்வளவு வேகமாக உண்டாயிற்றோ, அவ்வளவு வேகமாகத் தணிந்து மறந்து மறைக்கப்பட்டு விட்டது அவன் மனத்தில். அதற்குக் காரணம் நினைப்பதற்கும், குமுறிக் கொதிப்பதற்கும் வேறு நிகழ்ச்சிகளும் இருந்தன, அவன் மனத்தில். பகவதியின் மரணம் என்ற உண்மையை வெளியிட முடியாத நிலை ஏற்பட்டு விட்டதால் அத்துன்பமே போர்க்களத்துக்குப் போகிற வழியெல்லாம் அவன் மனத்தைச் சுட்டுக் கொண்டிருந்தது. இன்னொரு செய்தியும் அவன் மனத்தை உறுத்தியது. 'ஒருவருக்கும் தெரியாமல் தளபதியை மகா மண்டலேசுவரர் ஏன் சிறைப்படுத்தி வைத்திருக்கிறார்?' என்று குழம்பும் நிலையும் குமாரபாண்டியனுக்கு இருந்தது. அவசரமாக விழிஞத்திலிருந்தே போர்க்களத்துக்குப் புறப்பட்டபோது இத்தனை மன உணர்ச்சிகளையும் எண்ணச் சுமைகளாகச் சுமந்து கொண்டுதான் புறப்பட்டான் அவன். ஆனால் போருக்குப் போகிறோம் என்ற உணர்வு பெரிதாகப் பெரிதாக இவை மங்கிவிட்டன.

மகாராணி வானவன்மா தேவியுடன் அரண்மனைக்குப் புறப்பட்ட குழல்மொழியின் மனத்திலும் உணர்ச்சிகள் குமுறின. மகாராணியும், விலாசினியும், பகவதியைப் பற்றிப் பேசிக் கொள்ளத் தொடங்கினால் அவளுக்கு உடனிருக்கவே முடியாதுபோல் ஒரு வேதனை ஏற்பட்டது. தெரிந்த உண்மையை வெளியிட முடியாமல் தவித்தாள். மகாராணியுடன்

✩ அருள் வாக்கு ✩

நாம் அழுக்கு உடையவர்களாக இருக்கிறோம்; சஞ்சலம் உடையவர்களாக ஆகி விட்டோம். மனதை ஒரு நிமிஷம் கூட அடக்க முடியாமல் இருக்கிறோம். எப்போதும் சுத்தமானவரும் நிரம்பிய ஞானம் உடையவரும், அசைவு இல்லாத சித்தம் உடையவராய் நமக்கு தெய்வ அநுக்ரஹத்தால் ஒரு குரு கிடைத்து விட்டால் சுவாமி கூட வேண்டாம். அவரையே தெய்வமாக நம்பி வழிபட்டால் அந்த உண்மையான நம்பிக்கையும், அவரிடம் நாம் செலுத்தும் அன்பும், பக்தியும், நம்மை இந்தப் பாப ஜென்மாவிலிருந்து விடுவித்து விடும் என்பதில் ஐயமில்லை.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

அரண்மனைக்கு வராமல் தந்தையோடு இடையாற்றுமங்கலம் போகலாமென்று நினைத்திருந்த அவளை மகாராணிதான் வற்புறுத்திக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டாரே! இன்னொரு வருத்தமும் அவளுக்கு இருந்தது. கப்பலில் வரும்போது அவளிடம் கோபித்துக் கொண்டு பேசாமலிருந்த இளவரசர் விழிஞம் வந்த பின்னும் போருக்குப் புறப்பட்டுப் போகிற வரை ஒரு வார்த்தை கூடச் சுமுகமாகப் பேசவில்லை! போர்க்களத்துக்குப் புறப்படுகிறபோது கண்குறிப்பாலாவது விடைபெற்றுக் கொள்வதுபோலத் தன்னைப் பார்ப்பாரென்று அவள் எதிர்பார்த்தாள். அதுவும் இல்லை. இளவரசரின் இந்தப் புறக்கணிப்பு அவள் மனத்தைப் புண்ணாக்கியிருந்தது. அரண்மனையில் மகாராணி, விலாசினி, புவனமோகினி என்று கலகலப்பாகப் பலருக்கு நடுவிலிருந்தாலும் குழல்மொழியின் மனம் எங்கோ இருந்தது. அரண்மனையில் தங்கியிருந்தபோது ஒரு நாள் பேச்சுப் போக்கில் மகாராணி, "புவனமோகினி! கோட்டாற்றுக்கு யாரையாவது அனுப்பித் தளபதியின் மாளிகையில் பகவதி இருக்கிறாளா என்று விசாரித்து அழைத்து வரச் சொல்லேன்" என்று கூறியபோது உடனிருந்த குழல்மொழி துணுக்குற்றாள். தன் உணர்ச்சியை அடக்கிக் கொள்ள மிகவும் சிரமப்பட்டாள். இராசசிம்மனைப் பற்றியும், அவன் போரில் வெற்றி பெற்றுத் திரும்பப் போவதைப் பற்றியும், வெற்றியோடு வரும்போது அரண்மனையை எப்படி அலங்கரித்து, அவனை எவ்வாறு வரவேற்பது என்பதைப் பற்றியும் குதூகலமாக அவர்களோடு பேசினார் மகாராணி. அந்த மாதிரிப் பேச்சுக்களிலெல்லாம் குழல்மொழியும் மகிழ்ச்சியோடு கலந்து கொண்டாள்.

குழல்மொழியைப் பொறுத்த வரையில் 'விலாசினி' என்ற பெண் புதிராக இருந்தாள். அவ்வளவாக மனம் விட்டுப் பழகவில்லை. மகாராணி விலாசினியையும், புவனமோகினியையும், தன்னுடன் சமமாக வைத்துப் பழகவிடுவதும், பேசுவதும், குழல்மொழிக்குப் பிடிக்கவில்லை. அவள் இடையாற்று மங்கலம் நம்பியின் பெண். அன்பைக் கூடத் தனக்கென்று தனி மரியாதையோடு எதிர்பார்த்தாள். இடையாற்று மங்கலம் என்ற அழகின் கனவில் இளவரசிபோல் அறிவின் கர்வத்தோடு சுற்றித் திரிந்தவளுக்கு எல்லோருக்கும் சம உரிமை கொடுக்கும் மகாராணியோடு அரண்மனையில் தானும் ஒருத்தியாக இருப்பது என்னவோ போலிருந்தது.

புவனமோகினியே மகாராணிக்காகப் பகவதியைப் பற்றி விசாரித்துக் கொண்டு வரக் கோட்டாற்றுக்குப் புறப்பட்ட போது குழல்மொழியின் பயம் அதிகமாயிற்று. எந்த வகையிலாவது மகாராணிக்கு உண்மை தெரிந்து விட்டால் என்ன செய்வது என்று மனம் புழுங்கினாள் அவள்.

"என் மனம் இந்த உண்மையை மறைப்பதற்காக ஏன் இப்படிப் பயப்படுகிறது? நான் அந்தப் பெண்ணைக் கொலையா செய்தேன்? திமிர்பிடித்தவள் தானாக ஓடிப்போய் இறந்தால் அதற்கு நான் என்ன செய்வேன்?" என்று நினைத்துத் தன் மனத்தைச் சமாதானப்படுத்திக் கொள்ள முயன்றாள் அவள். ஆனாலும் ஏதோ பெரிய பெரிய கேடுகளெல்லாம் அந்த மறைக்கப்பட்ட உண்மை மூலம் வர இருப்பது போல உண்டாகும் பீதி அவளை மீறி வளர்ந்தது. யாரிடமும் சொல்லாமல் அரண்மனையை விட்டு இடையாற்று மங்கலத்திற்கு ஓடிப்போய் விடலாம் போலிருந்தது. ஒரு சமயம் மகாராணியே அவளைக் கேட்டார்: "என்னோடு இருப்பதில் உனக்கு ஒரு கவலையும் இருக்கக் கூடாதம்மா! இந்த அரண்மனையை உங்கள் இடையாற்று மங்கலம் மாளிகையைப் போல நினைத்துக் கொள். என்னை உன் தாய்மாதிரி எண்ணிக் கொள். வந்தது முதல் நீ இமேர் இமை ரென்று எதையோ நினைத்துக் கொண்டு கவலைப்படுகிறாய் போலிருக்கிறது. உன் தந்தையைப் பிரிந்து என்னோடு இங்கு வந்து விட்டதால் வருத்தப்படுகிறாயா? இதற்கே இப்படி வருந்துகிற நீ அவ்வளவு காடகள் தந்தையைப் பிரிந்து இலங்கை வரை எப்படித்தான் போய் வந்தாயோ?"


மகாராணி இப்படிக் கேட்டபோது தன் உணர்ச்சிகள் அவருக்குத் தெரியுமாறு நடந்து கொண்டோமே என்று வெட்கப்பட்டாள் குழல்மொழி.

சிவிகையில் புறப்பட்டுத் தளபதியின் தங்கையைப் பற்றி விசாரித்துவருவதற்குக் கோட்டாறு சென்ற புவனமோகினி கன்னிரவாயியும் அரண்மனை திரும்பவில்லை. மகாராணி என்னவோ, ஏதோ, என நினைத்து மனங்கலங்கினார். மறுநாள் பொழுது விடிகிற நேரத்தில் பரபரப்பான நிலையில் அரண்மனைக்கு ஓடிவந்த புவனமோகினியைக் கண்டு எல்லோரும் திடுக்கிட்டார்கள். (தொடரும்)

கொச்சைத் தமிழ்

"காது குத்துதல்"

கொச்சைத் தமிழில் பலவேறு தொழில்களுக்கும் உரிய சொற்கள் கலந்திருக்கும். சேலைத் துணிகளுக்குச் சாயம் ஏற்றுதல் தமிழ் நாட்டுப் பழைமையான தொழில். சாயம் ஏற்றுபவனுக்குச் சாயக்காரன் என்பது பெயர். சாயத்தில் கெட்டியானதும் உண்டு; மட்டமானதும் உண்டு. கெட்டிச் சாயம் சலவைக்கு நிற்கும். மட்டச் சாயம் ஒரு சலவையில் கரைந்து போகும். இதிலிருந்து 'சாயம் வெளுத்துப் போச்சு' என்ற வசனம் எழுந்தது. ஒருவனுடைய போலித்தன்மை நீங்கி உண்மை துலங்கும்போது 'அவன் சாயம் வெளுத்துப் போச்சு' என்பார்கள். இதைப் போலவே கொச்சைத் தமிழில் வழங்கும் மற்றொரு வாசகம் 'காது குத்துதல்' என்பது. காது குத்துதல் தட்டார் தொழில். காதிலே கடுக்கன், தோடு முதலிய நகைகளை அணிவதற்காக இளமையிலே காது குத்தும்வழக்கம் இந்நாட்டில் உண்டு. காது நகையில் எவ்வளவுதான் ஆசை இருப்பினும் காதைக் குத்தும்போது நோகத்தானே செய்யும்? கூர்மையுள்ள கருவியைக் கையிலே தாங்கி 'காது குத்தப்போகிறேன்' என்று சொல்லிக் கொண்டு தட்டார் வருவாராயின், குழந்தைகள் காதைப் பொத்திக் கொண்டு அழத் தொடங்கி விடும். இதற்காகக் காதுகுத்த வரும் தட்டார்கள் கைக்குள்ளே கருவியை மறைத்து வைத்துக் கொண்டு காதைப் பார்ப்பவர்கள் போல நெருங்கி வந்து வெடுக்கென்று குத்திவிடுவார்கள். இதிலிருந்து காது குத்துதல் என்ற பதத்துக்கே ஏமாற்றுதல், அல்லது வஞ்சித்தல் என்ற பொருள் வந்து விட்டது. இப்படியே 'காக்காய் பிடித்தல், குல்லாய் போடுதல், கம்பி நீட்டுதல்' முதலிய சொற்களும் கொச்சைத் தமிழில் வழங்கக் காணலாம். — டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை



நகரத்தில் அல்லது கிராமத்தில், மனோகரமான மாலைப் பொழுதில் தும்பைப்பூப் போன்ற வெள்ளை வஸ்திரங்கள், வியன் வெளியில் உலர்வதற்காக விரிந்து படபடக்கும் காட்சியை சர்வ சாதாரணமாகக் காணலாம். இந்த வெள்ளை வஸ்திரங்கள் மேட்டூர் மல்கள் அல்லது லாங்கிளாத்களாகத் தான் இருக்கும். ஏனென்றால் பாரம்பரியமாக தென்னிந்தியர்களின் அங்கீகாரம் பெற்று அவர்களது உபயோகத்தி லிருப்பவை அவை.

உங்களது நண்பரான, மேட்டூர் துணிரகங்களை விற்கும் வியாபாரி, எமது அடையாளச் சின்னங்களைக் காட்சிக்கு வைத்து மேட்டூர் மல்களையும், லாங்கிளாத்களையும், நிர்ணயிக்கப் பட்ட சிக்கனமான விலைகளில் விற்பனை செய்கிறார்.

மனோகர மாலைப் பொழுதில்
வியன் வெளியில் விரிந்து
நீந்தும் வெள்ளை வஸ்திரம்.

METTUR INDUSTRIES LTD
METTUR MULL

மேட்டூர் மல்கள் & லாங்கிளாத்

தயாரிப்பவர்கள்:
மேட்டூர் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
மேட்டூர் அணை R. S.—சேலம் ஜில்லா

மானேஜிங் ஏஜெண்டுகள்
W. A. பியர்ட்ஸெல் & கம்பெனி
(பிரைவேட்) லிமிடெட், மதராஸ்-1

EP


மேலும் மலிவானது!

குடும்பம் முழுவதற்கும் ஒரே டால்க்



ப்ரோடெக்ஸ்
சர்வ பிரயோக டாய்லட் பவுடர்

ஜயண்ட் சைஸ் அழகிய டப்புடன் கிடைக்கும்!



குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் நல்லது

கிருமி நாசினியான வேப்ப எண்ணெயிலிருந்து தயாரிக்கப்பட்டதும், மனோகரமான மணம் தருவதுமான மார்கோ மிக மெல்லிய சருமமுடையவர்களுக்கும் உத்தமமானது. மார்கோ சோப்பின் இளகும் சத்து நிறைந்த நுரை சரீரத்தின் துவாரங்களில் ஆழமாகப் புகுந்து சென்று, சருமத்திலுள்ள எல்லா அழுக்குகளையும் போக்கி சுத்தப்படுத்துகிறது. இதன் தயாரிப்பின் ஒவ்வொரு கட்டத்திலும் சோதிக்கப்பட்டுள்ள மார்கோ சோப் உங்களுக்கு அதிக சுகத்தையும், நாள்முழுதும் அதிகத் தூய்மை உணர்ச்சியையும் அளிக்கிறது.



மார்கோ சோப்

குடும்பத்துக்கு உத்தமமான சோப்

தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிட்., கல்கத்தா-29

தென் இந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை - 1

தமிழ் கூறும் நல்லுலகம்

கல்கத்தா தென்னிந்திய பஜனை சமாஜத்தில் மே மாதம் 8-ந் தேதியிலிருந்து 12-ந் தேதி வரை சங்கர ஜயந்தியைச் சிறப்பாகக் கொண்டாடினர். 12-4-59 அன்று மஹன்யாச ருத்திராபிஷேகமும் "சங்கர விஜயம்" உபன்யாசமும் நடைபெற்றன. கல்கத்தாவில் தற்சமயம் தங்கியிருக்கும் பூரி சங்கராச்சாரிய சுவாமிகள் அனைவருக்கும் ஆசி அனுப்பி அருளினார்கள்.

★

ஆயிரம் மைல்களுக்கப்பால் சென்று வாழ்ந்தாலும் தமிழர்கள் தங்கள் தமிழ்ப் பண்பையும், பழக்க வழக்கத்தையும் வழிபாடுகளையும் கை விடாமல் மேற்கொண்டிருக்கும் முறையைக் கண்டு தமிழகம் மிகவும் மகிழ்கிறது. பூனாவில் ராஸ்தாபேட் பகுதியில் வாழும் 5000 தென்னிந்தியர்கள் ஒன்றாக இணைந்து அவ்வப்போது நடத்தும் ஸ்ரீராமநவமி, ருக்மிணி கல்யாணம், கந்தர் சஷ்டி முதலிய விழாக்களையும் நாதசுரத்துடன் குதூகலமாக நிகழும் ஊர்வலங்களையும் கண்டவர்கள் "இது பூனாவைச் சேர்ந்த பகுதி தானா அல்லது தென்னகம் நிலைபெயர்ந்து வந்துவிட்டதோ?" என ஐயுறுவர்.

சென்றவாரம் ஸ்ரீ ஹரிஹர பஜனை சமாஜத்தின் ஆதரவில் நடந்த சங்கர ஜயந்தி மஹோத்சவமும் ஸ்ரீராமானுஜ ஜயந்தி ஜனனவிழாவும் இத்தன்மையதே. தக்காணக் கல்லூரி, பக்தர்க்கர் கழகம் ஆகிய ஸ்தாபனத்தைச் சேர்ந்த பண்டிதர்களைக் கொண்டு உபந்யாசங்களும், ருத்ராபிஷேகமும் முறைப்படி நடந்து கடைசி தினமாகிய 14-ந் தேதியன்று ஆதி சங்கரருடைய படம் அலங்கரிக்கப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. ஒரு வார காலம் தொடர்ந்து நடந்த இந்த வைபவத்தில் முக்கிய அம்சமாக ஆதி சங்கரர் அருளிய கனகதாரா ஸ்தோத்ரமும் அன்ன பூர்ணாஷ்டகமும் தனியாக அச்சிடப்பட்டு பக்தர்களுக்கு வழங்கப்பட்டதைத் தனியாகக் குறிப்பிட வேண்டும். அதுமட்டுமின்றி இத்துடன். இவ்விழாவுக்கென ஒரு தனி மலரும் வெளியிட்டு அதில் ஆதி சங்கரருடைய படத்தையும் குருஸ்துதியாகிய தக்ஷிணாமூர்த்தி அஷ்டகத்தையும் சேர்த்து அளித்த திரு டி. எஸ். ராமஸ்வாமி அய்யரின் அருமையான தொண்டையும் ஆஸ்திகர்கள் அனைவரும் போற்றிமகிழ்வர்.

நாசிக்ரோட் தேவலாலியில் சங்கர ஜயந்தி மே மாதம் 13-ந் தேதி அதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

காலையில் ருத்ராபிஷேகம் உபநிஷத பாராயணம் ஸ்தோத்திர பாடங்கள் நடைபெற்றன.


ஸ்ரீமதி ஹா. கி. வாலம் அவர்கள் சங்கர பகவத் பாதாள் அவர்களின் திவ்ய சரித்திரத்தை இனிய எளிய தமிழ் மொழியில் சொற்பொழிவாற்றினார்கள்.

★

கண்டரமாணிக்கத்தில், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் ஆணையும் அருளும் பெற்று 13-ந் தேதி செவ்வாய்க்கிழமை முதல் ஐந்து நாட்கள் 'சங்கர ஜயந்தி' சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. ஸ்ரீ தண்டாயுதபாணி உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் உயர்திரு எம். ஆர். சந்திரன் அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கினார்கள். எல்லா நாட்களிலும், சொற்பொழிவுகளும், பூசை வழிபாடுகளும், இறுதி நாளில் ஆதி சங்கரர் படத் திருவுலாவும், நூற்றுக்கணக்கான ஏழை மக்களுக்கு அன்ன தானமும் நடந்தன. பொதுமக்கள் எல்லா நிகழ்ச்சிகளிலும் பெருமளவில் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

★

ரூர்கேலா தக்ஷிண பாரத சமாஜத்தினர் மே மாதம் 12-ந் தேதி சங்கர ஜயந்தியைக் கொண்டாடினர். ருத்ராபிஷேகம், பூஜை, பஜனை முதலியவை பக்தர்களின் மனத்தைக் கவரும்



சரித்திரப் பிரஸித்தி பெற்ற புராதன க்ஷேத்திரமாகிய குறுக்கை சம்ஹார மூர்த்தி ஸ்ரீ வீரட்டேசுவர சுவாமி ஆலயம் தருமபுர ஆதீனத்தின் பெருமுயற்சியால் திருப்பணி பூர்த்தி செய்யப் பெற்று, மகா கும்பாபிஷேகம் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் தரிசிக்க ஏப்ரல் 29ந் தேதி நடைபெற்றது.

படி நடந்தேறின. ரூர்கேலா உருக்குத் தொழிற்சாலையின் ரெஸிடெண்ட் டைரக்டர் திரு எம். கணபதி இவ் வைபவத்தில் கலந்துகொண்டார்.

★

கல்கத்தா தென்னிந்திய பஜனை சமாஜத்தில் ஏப்ரல் 17ந் தேதியிலிருந்து 27-ந் தேதிவரை ராமநவமி உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. வெகு நேர்த்தியாக அலங்கரிக்கப் பட்ட பந்தலிலே தினசரி காலை மாலை பூஜை, லக்ஷார்ச்சனை, ஸ்ரீராமாயணம், வேத பாராயணம் முதலியவை நடந்தன. சங்கீத வித்வான் மன்னார்குடி சாம்பசிவ அய்யர் அவர்கள் ஹரிகதா காலக்ஷேபம் செய்தார்கள். ஸ்ரீமங்களம் மணி, ஸ்ரீமதி இந்துமதி கிருஷ்ண மூர்த்தி, குமாரி காமாக்ஷி முதலியவர்களும் சங்கீதக் கச்சேரி செய்து எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்றனர்.

ஏப்ரல் 26-ந் தேதி இரவு கோயம்புத்தூர் சிந்தாமணி சகோதரர்களின் நாதஸ்வரத்துடன் ஸ்ரீராமர்படம் ரதத்தில் ஊர்வலம் வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. கடைசி தினமாகிய 27-4-59 அன்று ஆஞ்சநேய உற்சவத்துடன் விழா முடிந்தது.

★

கல்கத்தா நாஷனல் ஹைஸ்கூலில் முடிகொண்டான் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து மே 3-ந் தேதிவரை ராமாயண உபன்யாசம் செய்து பக்தர்களை மகிழ்வித்தார். மே 10-ந் தேதியிலிருந்து 12-ந்தேதி வரை பஜனை சமாஜத்தின் ஆதரவில் சங்கர ஜயந்தி விழாவும் விமரிசையாக நடந்தது.



எம். வி. டி. பள்ளி ஆண்டு விழாவில் நடந்த கதம்ப நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டு பாராட்டு தலைப்பெற்ற சிறுமி ராதா.

சங்கரஜயந்தி உத்ஸவத்தில் சங்கரமகிமையைப்பற்றி ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி சாஸ்திரிகள் எடுத்துரைத்தார்கள்.

★

ஜபல்பூரை அடுத்த கமாரியாவில் வாழும் தென்னிந்தியர்கள் ஏப்ரல் மாதம் 17ம் தேதியன்று துவங்கி 22ம் தேதிவரைஸ்ரீராமநவமி உற்சவத்தை மிகவும் விமரிசையாகக் கொண்டாடினார்கள்.

விழாவை யொட்டி மதுரை ஸ்ரீ வெங்கடேசன் அவர்களது இன்னிசை விருந்தும் சௌ. உமா, மகேச்வரி ஆகியவரது நடனவிருந்தும் நடைபெற்றன.

★

சென்னை மயிலாப்பூர் 40, புதுத்தெருவில் வருடந் தோறும் நடந்து வரும் "ஸ்ரீராமநவமி" உத்ஸவம் இவ்வருடமும் மயிலை ஸத்சங்கத்தாரால் ஏப்ரல் 17-ந்தேதி முதல் 25ந் தேதி முடிய அதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.


நீடாமங்கலம் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி பாகவதரின் ராமாயண உபந்யாசத்தை பக்தர்கள் கேட்டு மகிழ்ந்தார்கள்.

★

"தமிழ்மொழி பெற்ற பெருஞ் செல்வம் குறளாகும். ஒவ்வொருவரும் சொல், செயல், சிந்தனை மூன்றிலும் சிறந்து விளங்குவதற்குத் துணையாக நிற்பது குறள். எனவே திருக்குறளைக் கற்று அதன்படி நடப்பதால் வாழ்வு வளமடையும்" என்று 26-4-58 ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெற்ற கல்கத்தா தமிழ் மாணவர் மன்ற நிறுவன நாள் விழாவில் 'முத்தமிழ்க் காவலர்' திரு கி. ஆ. பெ. விசுவநாதம் தமது உரையில் குறிப்பிட்டார்.

கல்கத்தா தென்னிந்திய பஜனை சமாஜத்தில் ராமநவமி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.





இணையற்றது...

உண்மை எழில்...

நீங்கள் பாராட்டுவது

மர்பி மாடல் 0322


'அழகு' என்ற சொல்லை மக்கள் உபயோகிப்பது மர்பி மாடல் 0322 யைப் பற்றிப் பேசும் போதுதான். எழில்மிகுந்த தோற்றத்துக்கும், அதி உன்னத உழைப்புக்கும் பல்லாண்டுகள், பாராட்டப்பட வேண்டுமென்றே மர்பி ரேடியோ தயாரிக்கப் பட்டிருக்கிறது!

6 வால்வு • ஆல் வேவ் • 3 பாண்ட் • நிகர விலை ரூ. 375/-

உள்ளூர் வரிகள் தனி

சிறந்த—

...தோற்றம்!




கிரேட்	லிட்டில்
லிப்கோ டிக்ஷனரி	**லிப்கோ டிக்ஷனரி**
(இங்கிலீஷ்-இங்கிலீஷ்-தமிழ்)	(இங்கிலீஷ்-இங்கிலீஷ்-தமிழ்)
● 4-ஆம் பதிப்பு: 1500 பக்கங்கள்	● 5-ஆம் பதிப்பு: 582 பக்கங்கள்
● ரூ. 7.25; தபால் மூலம் ரூ. 8.90	● ரூ. 2.75; தபால் மூலம் ரூ. 3.75

லிப்கோ, சென்னை-17; தாமோதரம் கம்பனி, அப்பா பில்டிங், சென்னை-1; ஹிக்கின்பாதம்ஸ், சென்னை-2, ரயில்வே ஸ்டால்கள்; கிருஷ்ணஸ்வாமி கம்பனி, தெப்பக்குளம், திருச்சி-2; C. R. நடராஜன், கோயமுத்தூர்; கவிகுயில் பதிப்பகம், ராஜ வீதி, கோயமுத்தூர்; சந்திரையர் செட்டியார், கோட்டை, சேலம்-1; நடனசுந்தரம், புதுமண்டபம், மதுரை; S. M. ஜெகநாதம், நாகர்கோயில்; மற்றும் அநேக (இலங்கை, சிங்கப்பூர் உள்பட) புத்தகக் கடைகள்.

புத்தக உலகில் LIFCO பெரும் புகழ்

B·I



S. S. ரஜூலா

சென்னை - நாகப்பட்டினம் - பினங்கு - சிங்கப்பூர்

மேற்படி கப்பல் கீழ்க்கண்ட தேதிவாக்கில் புறப்படும்

சென்னையிலிருந்து	நாகப்பட்டினத்திலிருந்து
1959 ஜூன் 19	**1959 ஜூன் 20**

பிரயாணத்திற்குரிய தஸ்தாவேஜுகளைக் காண்பித்து வேண்டிய அளவு பங்க் வசதியுள்ள டிக்கட்டுகளையும், பர்த் வசதியற்ற டிக்கட்டுகளையும் (சாப்பாட்டுடனோ அல்லது சாப்பாடின்றியோ) எங்கள் கம்பெனியின் ஏஜண்டிடமிருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.

பினங், போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி பாங்காக்கிற்கும், நியூஜிலாந்த் துறைமுகங்களுக்கு அனுப்பவும் சரக்குகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்


பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட்	மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1	முதல் லேன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ஏஜண்டுகள்: பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்



மீனவப் பறவை

சில பறவைகள் தங்கள் உணவைத் தேடிப் பல ஆயிரம் மைல்கள் பிரயாணம் செய்கின்றன என்றால் நீ நம்பமாட்டாய். துருவத்துக்குத் துருவம் பிரயாணம் செய்யும் விந்தைப் பறவைகள் இருக்கின்றன. மீன்களை உணவாகக் கொள்ளும் பறவை இனங்கள் தங்கள் இரையை அடையப் பல்வேறு முறைகளைக் கையாளுகின்றன. 'கோர்மோராண்ட்' என்று ஒரு பறவை. வாத்தைப் போலிருக்கும். ஆனால் வாத்து இல்லை. பெலிகன் என்ற பறவை இனத்தைச் சேர்ந்தது. இந்தப் பறவைகள் நீருக்குள் மூக்குளித்துப் பாய்ந்து சென்று மீன்களைப் பிடிப்பதில் நிகரற்றவை. உலகின் எல்லாப் பாகங்களிலும் அநேகமாக இந்தப் பறவை காணப்படுகிறது. சில வகைகள் கடலோரங்களிலும் மற்றும் சில இனங்கள் நதி, ஏரிகள், சதுப்பு நிலம் இவைகளின் கரைகளிலும் காணப் படுகின்றன. எல்லா வகை 'கோர்மோராண்ட்ஸ்'களுக்கும் உடலின் மேல் பாகம் பார்வைக்குக் கறுப்பாக இருக்கும். ஆனால் உண்மையில் இதன் இறகுகளின் நிறம் பளபளப்பான கருப் பச்சையோ கருநீலமோதான்.



இவைகளில் சிலவகை 30 அங்குல நீளமுடையவை. இவைகளின் அலகு நீளமாகவும் நுனியில் சற்று வளைந்துமிருக்கும். இதன் இறக்கைகள் மிக்க உறுதியானவை. வால் இறகு பாதி பிரித்த விசிறியைப்போலிருக்கும். இந்தப் பறவை வினோதமான உடலமைப்பைக் கொண்டது. பாட்டிலைப் போன்ற உடல், மெல்லிய நீண்ட கழுத்து. பறக்கும்போது தன் கழுத்தை நன்றாக முன்னால் நீட்டிக் கொண்டிருக்கும். மற்றக் கடல் பறவைகளைப் போலவே இதுவும் கடல் பூண்டுகள் குச்சிகள் இவைகளால் கூடு கட்டிக் கொண்டு வாழ்கின்றன. குஞ்சுகள் முழு மீனைத் தானாகப் பிடித்து விழுங்கும் பருவம் அடையும் வரை அவைகளுக்குத் தான் விழுங்கிய மீனை மறுபடியும் வாய்க்குக் கொண்டுவந்து கொடுக்கிறது.

தன் இறக்கைகள் உடலோடு சேர அம்புபோல நீருள் பாய்ந்து மீனைத் துரத்திச் சென்று பிடிக்கும். அப்போது இதன் சதை மூடிய கால்கள் துடுப்புக்களைப் போல வேலை செய்யும். மீன் குத்திகளைப் போல் மேலிருந்து நீரில் குதித்தும் தன் இரையைத் துரத்திச் சென்று பற்றிக் கொள்ளும். கோர்மோராண்ட் நீருக்குள் வெகுநேரம் இருக்கும் சக்தி பெற்றது. நீருள் வேகமாக நீந்திச் செல்லவும் இதனால் முடியும்.

பிற ஜீவராசிகளின் ஆற்றல்களை எல்லாம் தனக்குப் பயன்படுத்திக் கொள்ளுவதில் மனிதன் பலே கெட்டிக்காரனில்லையா? கோர்மோராண்ட்ஸ்களின் திறமையான மீன் பிடிக்கும் சக்தியையும் மனிதன் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளத் தவறவில்லை. ஜப்பானியர்களும் சீனர்களும் மீன் பிடிக்க இந்தப் பறவைகளை உபயோகிக்கிறார்கள்.

இந்தப்பறவைகளைப் பழக்கி இதன் கழுத்தில் ஒரு வளையத்தையும் நுழைத்துக் கட்டிவிடுகிறார்கள். ஏன் தெரியுமா? பிடித்த மீன்களை இவைகள் விழுங்கி விடாதிருக்கத்தான். கழுத்தில் உள்ளவளையம் விழுங்கும் மீனை உள்ளே போக விடாது. ஒவ்வொரு படகிலும் பத்துப் பன்னிரண்டு பறவைகள் இருக்கும். வலையை வீசுவதுபோல் இந்தப் பறவைகளை நீருக்குள் மூழ்கச் செய்வார்கள். ஒவ்வொரு பறவையின் கழுத்து வளையத்துடனும் நீண்ட கயிறு இணைக்கப்பட்டிருக்கும். வலையை இழுத்துப் படகில் போடுவதுபோல் நீந்திக் கொண்டிருக்கும் இந்தப் பறவைகளைப் படகுக்குள் இழுத்து அவைகளின் தொண்டைக்குள் சேமித்து வைத்திருக்கும் மீன்களைக் கக்கும்படி நிர்ப்பந்தப்பார்கள். கஷ்டப்பட்டுப் பிடித்த மீன்களை மனிதனுக்குக் காணிக்கையாகக் கக்கிவிட்டு நிற்கும் இப்பறவைகள். ஆனால் தன் உழைப்பு பறிக்கப் பட்டதை எண்ணிச் சோர்வோ, அசிரத்தையோ அடைவதில்லை இவை. மறுபடியும் நீருக்குள் பாய்ந்து தன் மீன் வேட்டையைத் தொடர்ந்து நடத்துகிறது. இப்படித் தூண்டிலாகப் பயன்படும் இந்தப் பறவைகளை ஏன் நாம் மீனவப் பறவை என்று அழைக்கக் கூடாது?

சீனர்களும் ஜப்பானியரும் இந்தப் பறவைகளின் உதவியால் மீன் பிடிக்கும் தொழிலை இரவு வேளைகளில் கூட நடத்துகிறார்கள். படகுகளில் பிரகாசமான தீப் பந்தங்களைச் செருகி வைத்திருப்பார்கள். இந்த ஒளியினால் கவரப்பட்டு மீன்கள் ஏராளமாக மேல் பரப்புக்கு வருமாம்.

4. பாவம், குழந்தைகள்!

சந்திரன் மல்லிகாவின் காதோடு காதாகச் சொல்லிய ரகசியம் என்ன தெரியுமா? எந்தச் சொல்லைக் கேட்டு விட்டு மல்லிகா அப்படிப் பயந்து நடுங்கினாள் தெரியுமா?

"நான் ஏழையாகப் போகிறேன்!" என்றான் சந்திரன்.

இதைக் கேட்டபோது தான் மல்லிகாவின் தேகமே நடுங்கியது. அரண்மனையில் வளர்ந்த ராஜகுமாரன் ஏழையாகப் போவதா! ஏழைகள் படும் எத்தனையோ அவதிகளை மல்லிகாவும் கண்கூடாகப் பார்த்து வந்தவளாயிற்றே!

வேண்டாம் என்று அவள் தன் அண்ணனைத் தடுத்துப் பார்த்தாள். அவன் கேட்க வில்லை. பிறகு, "எப்படி நீ ஏழையாகப் போவாய்? எதற்காக நீ ஏழையாகப் போக வேண்டும்?" என்று கேட்டாள்.

"ஏழைகளின் கஷ்டத்தைத் தெரிந்து கொள்ளப் போகிறேன்" என்று பதிலளித்தான் சந்திரன்.

தங்க நகரம்

அகிலன்

"நாம்தான் ஒரே நாளில் பார்த்துத் தெரிந்து கொண்டோமே" என்றாள்.

"பார்த்துத் தெரிந்து கொண்டால் போதாது மல்லிகா! அந்த நொண்டிப் பிச்சைக்காரன் பேசியதை நீ கேட்டாயா? பார்த்தால் போதாது; அனுபவித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். ஏழையாக மாறினால்தான் ஏழையின் துன்பம் தெரியுமாம்!"

"அப்படியானால் நானும் உன்னோடு ஏழையாக மாறுவேன்" என்று பிடிவாதம் பிடித்தாள் மல்லிகா.

"ஊஹூம்; வேண்டாம்; நீ என்னைவிடச் சிறியவள். அதிலும் பெண்" என்றான்.

"அதெல்லாம் முடியாது; பெண்ணென்றால் என்ன? நானும் உன் கூடவே எப்போதும் இருப்பேன். பெண்களும் ஏழைகளாய் இருக்கிறார்களல்லவா? அந்தப் பிச்சைக்காரக் கிழவியை என்னால் மறக்கவே முடியவில்லை."

சந்திரனால் அவன் தங்கையின் பேச்சைத் தட்ட முடிய வில்லை. அதனால் மெதுவாக அவளிடம் தன் ரகசியத் திட்டத்தை விளக்கிக் கூறினான். அந்த ரகசியம் அப்படி ஒன்றும் பிரமாதமானதில்லை.

இதுதான் அவன் திட்டம்: அரண்மனையை விட்டு ஒரு நாள் காலை மெதுவாக வெளியே போய் விடுவது. வெளியே போன பிறகு, பிச்சைக்காரன் மாதிரி வேஷம் போட்டுக் கொள்வது. அந்த ஒரு நாள் முழுவதும் பிச்சை எடுப்பது; கஷ்டத்தைத் தெரிந்து கொள்வது. பிறகு சாயங்காலம் உடுப்பை மாற்றிக் கொண்டு அரண்மனைக்கு வந்து விடுவது.

இதைக் கேட்ட மல்லிகாவுக்குப் பயமெல்லாம் பறந்து போய் விட்டது.

"நீ பிச்சைக்கார அண்ணா! நான் பிச்சைக்காரத் தங்கை! சரிதானே?" என்று தன் கழுத்தை வளைத்துக் கொண்டு கேட்டாள் மல்லிகா.

"தாராளமாய் நீயும் வந்து கஷ்டப்படு!" என்று சிரித்தான் சந்திரன். மல்லிகா அளவு கடந்த மகிழ்ச்சியால் அப்படியே தன் அண்ணனைக் கட்டிக் கொண்டாள்.

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நிறைய வேலை இருக்கும் ஒரு நாளில் இருவரும் புறப்படத் தீர்மானித்தார்கள். தோட்டத்தில் இருப்பதாகப் போக்குக் காட்டிப் பிறகு போய் விட வேண்டுமென்பது திட்டம். அதற்கான பழந் துணிகளையும் சேகரித்து விட்டான் சந்திரன். பிச்சையெடுப்பதற்கு இரண்டு பழைய தகரக் குவளைகளையும் எங்கிருந்தோ கொண்டு வந்தான்.

ஒரு நாள் அதிகாலை இரண்டு குழந்தைகளும் மெதுவாக அரண்மனையை விட்டு நழுவினார்கள். காவல்காரன் எங்கோ பராக்குப் பார்த்துக் கொண்டிருந்தான். அதுதான் சமயம் என்று சந்தடி செய்யாமல் வெளியே வந்தார்கள் இருவரும். வெளியே வந்த பிறகு இருவருடைய நெஞ்சுகளும் 'படக்படக்'கென்று அடித்துக் கொண்டன. காரணமில்லாத பயம் இவர்களைப் பிடித்துக் கொண்டது. மெதுவாக ஒரு மறைவான இடத்துக்கு வந்தார்கள். தங்களுடைய உடுப்புகளைக் கழற்றினார்கள். பழம் துணிகளைக் கட்டிக் கொண்டார்கள். ஒரு அழுக்குத் துணியில் இருவர்களுடைய உடுப்புகளையும், நகைகளையும் மூட்டையாகக் கட்டினார்கள். அந்த மூட்டையையும் தகரக் குவளையையும் எடுத்துக் கொண்டு தெருப் பக்கம் கிளம்பினார்கள்.

"அது சரி, நமக்குப் பிச்சை எடுக்கத் தெரியாதே! என்ன சொல்லிப் பிச்சை கேட்பது?" என்றாள் மல்லிகா.

சந்திரனுக்கும் அப்போதுதான் அந்தக் கஷ்டம் இருப்பது தெரிந்தது.

"கொஞ்ச நேரம் இந்தத் தெருவில் இருந்து மற்றப் பிச்சைக்காரர்களைப் பார்ப்

போம். அவர்கள் கேட்பது போல் நாமும் கேட்டால் போகிறது " என்றான் சந்திரன்.

பிச்சைக்காரர்கள் வந்தார்கள் : வீடு வீடாய்ப் பிச்சை கேட்டுப் போனார்கள். அநேகமாக அதிகம் பேர் விபூதியையாவது நாமத்தையாவது உடம்பில் பூசிக் கொண்டிருந்தார்கள். சந்திரனுக்குக் கொஞ்சம் விபூதி கிடைத்தது. அதை இரண்டு பேரும் பட்டை பட்டையாகப் பூசிக் கொண்டார்கள்.



சந்திரன் மல்லிகாவுக்குச் சொல்லிக் கொடுத்தான்; சந்திரன் சொல்லச் சொல்ல மல்லிகாவும் பின்னால் சொன்னாள்.

சந்திரன் : அம்மா, தாயே !
மல்லிகா : அம்மா, தாயே !

சந்திரன் : பிச்சை போடுங்கோ!
மல்லிகா : பிச்சை போடுங்கோ !

சந்திரன் : உங்களுக்கு ரொம்பப் புண்ணியமாப் போகும்; ஏழை முகம் பாருங்க; சாப்பிட்டு ரெண்டு நாளாச்சு; அம்மா தாயே,......அன்னலட்சுமி !


மல்லிகாவும் அப்படியே சொல்லி விட்டுச் சிரித்தாள். " ' சாப்பிட்டு ரெண்டு நாளாச்சு ' என்று பொய் சொல்லலாமா அண்ணா ?" என்று கேட்டாள்.

"சிரிக்கக்கூடாது மல்லிகா ! சிரித்தால் யார் நமக்குப் பிச்சை போடுவார்கள் ?

ஏழைகளெல்லாம் இப்படிச் சிரிக்க மாட்டார்கள் தெரியுமா? "நாம் பொய் சொல்லவில்லை; நடிக்கிறோம்" என்றான் சந்திரன்.


பிறகு இரண்டு பேரும் வீடு வீடாய் அலைந்தார்கள். சந்திரன் முதலில் தன்னுடைய "அம்மா, தாயே!" என்னும் பாடத்தை ஆரம்பித்தான். மல்லிகா அதை முடித்தாள். இரண்டு மூன்று தெருக்கள் அலைந்த பிறகும் யாரும் பிச்சை போடவில்லை. இருவருக்கும் கோபமும், அழுகையும், ஆத்திரமும் வந்தன; என்றாலும் அடக்கிக் கொண்டார்கள். கடைசியாக ஒரு வீட்டில் "என்ன வாங்குறே? அரிசியா? பழைய சோறா?" என்று ஒரு பெண் கேட்டாள். அப்போதுதான் என்னத்தை வாங்குவது என்று சந்திரன் நினைக்க ஆரம்பித்தான். அதற்குள் அந்த வீட்டுக்காரி ஒரு கிண்ணத்தில் பழைய சோற்றை எடுத்து வந்து மடமடவென்று மல்லிகாவின் குவளையில் கொட்டிச் சென்றாள். பழைய சோற்றை இதற்கு முன்பு அவர்கள் கண்ணால்கூடக் கண்டதில்லை! சரியாக அதை வாங்கத் தெரியாமல் கீழே கொஞ்சம் கொட்டி விட்டாள் மல்லிகா. அதைக் கண்டதும் அந்த வீட்டுக்காரிக்குக் கடும் கோபம் வந்தது. அதற்காக அவளைத் திட்டிக்கொண்டே உள்ளே சென்றாள்.

உச்சிப் பொழுதாகி விட்டது. அவர்களுக்கு அந்தச் சோற்றைத் தவிர வேறு எதுவும் கிடைக்கவே இல்லை. கால்கள் வலி எடுக்க ஆரம்பித்தன. வெயிலால் உடம்பெங்கும் எரிந்தது. மயக்கம் வரும் போல் இருந்தது. (தொடரும்)




செய்து பாருங்கள் (வெட்டுப் படங்கள்)

பன்னிரண்டு அங்குல நீளம் இரண்டு அல்லது இரண்டரை அங்குல அகலமுள்ள காகிதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். வர்ணக் காகிதமாக இருந்தால் பார்வைக்கு அழகாக இருக்கும். பத்திரிகைக் காகிதத்திலும் இதைச் செய்யலாம். இந்தக் காகிதத்தை முக்கால் அங்குல அகலத்துக்கு அடுக்கடுக்காக மாற்றி மாற்றி அதாவது விசிறி மடிப்புப் போல் மடித்துக் கொள்ளுங்கள்.



இனி இப்படி மடித்த காகிதத்தின் மீது அருகில் காட்டியுள்ளபடி மரத்தையோ சிப்பாய் உருவத்தையோ அல்லது உங்களுக்குத் தோன்றும் ஏதாவது ஒரு உருவத்தை வரைந்து கொள்ளுங்கள். (உருவத்தின் பாதியை வரைந்தால்தான் பிரிக்கும்போது முற்றுப் பெற்றதாக வரும்) இனி கூர்மையான கத்திரிக்கோலை எடுத்து, வரை கோட்டின் மேலாகக் கத்திரியுங்கள். நட்சத்திரக் குறி காட்டியுள்ள பகுதியைக் கத்திரித்து விடாமல் மற்றப் பகுதிகளை மட்டும் கவனமாக வெட்டி எடுக்க வேண்டும். குறி போட்ட பகுதியைத் தவறிப் போய்க் கத்திரித்து விட்டீர்களோ எல்லாம் பாழாகிவிடும். சரி பாதி மரத்தையும் பாதி சிப்பாயையும் வெட்டினீர்களா? இப்போது அந்தக் காகிதத்தைப் பிரித்துப் பாருங்கள். சிப்பாய்கள் வரிசையாகக் கை கோத்துக் கொண்டு நிற்பார்கள். மரங்கள் சாரிசாரியாக நிற்கின்றனவா? இதேபோல அசோக ஸ்தூபியின் சிங்கம், அண்டரண்ட பட்சி, பூக்கள் இப்படிப் பல வடிவங்களை வரைந்து கத்திரித்து மகிழலாம். நீயே செய்து பார். அப்போதுதான் அதன் சுவாரஸ்யம் தெரியும்.—கௌசிகன்.







டிராலி மஸ்க் சோப்

இன்பென்டோன்
க்ரைப் வாட்டர்

உடனடியாக நிவாரணம் அளிக்கிறது



இளங்குழந்தைகளுக்கேற்ற சாலச் சிறந்த க்ரைப் மிக்ஸர் இதுதான். வயிற்று வலி, குடல் வலி, வாயு உபாதை, பல் முளைக்கும்போது ஏற்படும் பிணி எல்லாவற்றிற்கும் உடனடியாக நிவாரணம் அளிக்கிறது. சிசுக்களை கலகலவென்று ஆரோக்கியத்துடன் இருக்கச் செய்கிறது. 40 ஆண்டுகளுக்கு மேலாக நற்பெயர் பெற்றுள்ள மருந்து.

தயாரிப்பாளர்கள் :
ஹைதராபாத் கெமிகல் & பார்மஸூடிகல் ஒர்க்ஸ் லிட்.,
ஹைதராபாத் டெக்கான்

FSHC-48

பாங்க் ஆப் இந்தியா லிட்.

ஸ்தாபிதம் : 1906

செலுத்தப்பட்ட மூலதனம்	...	ரூ. 3,00,00,000
ரிஸர்வ் நிதி	...	ரூ. 3,10,00,000

தலைமைக் காரியாலயம் : மகாத்மா காந்தி ரோடு, கோட்டை, பம்பாய் - 1

இந்தியாவின் பிரதான நகரங்களில் கிளைகள் உள்ளன

அயல்நாட்டுக் கிளைகள் :

ஏடன் ★ தாரேஸ் - ஸலாம் ★ ஜின்ஜா ★ கம்பாலா ★ கராச்சி ★ லண்டன்
மொம்பாஸா ★ நைரோபி ★ ஓஸாகா ★ சிங்கப்பூர் ★ டோக்கியோ

சேர்மன் : சர் கவாஸ்ஜி ஜஹாங்கிர், Bart., G. B. E., K. C. I. E.

- ஸேவிங்ஸ் பாங்க் கணக்கு : ரூ. 50,000 வரையில் 2½ சத விகிதம் வட்டி தரப்படுகிறது. எவ்வித முன் அறிவிப்பும் இன்றி செக்குகள் மூலம் பணம் திரும்பப்பெறலாம். (விதிகளுக்குட்பட்டு)
- 3 ஆண்டு மற்றும் 5 ஆண்டு காஷ் சர்ட்டிபிகேட்டுகள் வழங்கப்படும்.
- அயல்நாட்டு பரிவர்த்தனை ஏற்று நடத்தப்படும்.
- உயில், வாரிசுரிமை சம்பந்தப்பட்ட சாசனங்களுக்குப் போஷகர்களாகவும் தர்மகர்த்தாக்களாகவும் பாங்கி பணியாற்றுகிறது.
- சகலவிதமான பாங்கிங் அலுவல்களும் ஏற்று நடத்தப்படும்.

கே. பி. ஷா
ஏஜெண்ட், மதராஸ்

டி. ஆர். லால்வானி
ஜெனரல் மானேஜர்

தேன்கூடு

ஆர்வி

அத்தியாயம் 17

தட்டிக்குப் பின்னால்

மாலை நேரங்களில் பாபு வெளியில் எங்கும் போவது வழக்கமில்லை. அவசியம் இருந்தால் அவன் போவதை யாரும் தடுக்கப் போவதில்லை. இருந்தாலும் இன்று உஷாவைப் பார்த்துப் பேசிவிட்டு வெளியில் வந்ததும் அவன் பங்களாவுக்குத் திரும்பி விடத்தான் எண்ணினான். ஆனால் சைக்கிள் என்னவோ அவனுடைய அந்தரங்கத்தைக் கண்டறிந்தது போல, வெள்ளையன் தோட்டத்துக்குச் செல்லும் பாதையில் திரும்பியது.

கட்டவிழ்த்த கன்று போல், உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளிக்கொண்டிருந்தது. உஷாவின் இனிய தோற்றம் அவன் கண்களை விட்டு அகலவேயில்லை. சாலையிலும் செடிகளிலும் அவளுடைய வண்ணச்சாயலையே அவன் கண்டான். அந்தி வேளையின் பொன்னிற ஒளியில் அவள் மேனியின் காந்தி தெரிந்தது. கூடுகளை நாடிப் பறந்து வரும் பறவைகளின் இன்குரல் அவளுடைய சிரிப்பொலியை ஒத்திருந்தது. மாலைக் காற்றிலே அசைந்தாடும் இலைகள் அவளுடைய எழில் வடிவின் ஒவ்வோர் அசைவையும் நினைவூட்டின.

எங்கும், அதிலும் அவளுடைய அழகின் பொலிவையே அவன் கண்டான். புலனுக்குப் புரியாத கவர்ச்சி அவளிடம் இருந்தது. அவன் கண்ணுக்கு மிகவும் அழகாகத்தான் இருந்தாள். ஆனால் அதைவிட அவளுடைய எளிய தன்மையே அழகாக இருந்ததாக அவனுக்குத் தோன்றியது. அன்பு ததும்ப அவள் பேசிய வார்த்தைகள் அனைத்தும் வழியெல்லாம் காதிலே ஒலிப்பது போலவே இருந்தன. போதவிழும் மலர்போல அவள் புதுமை பூத்து விளங்கினாள். அவள் எதிரிலே நின்ற போது வீசிய மென் மணம் அவன் கூடவே தொற்றிக் கொண்டு வந்துவிட்டதுபோல் தோன்றியது. எந்தப் பெண்ணுமே இதுவரையில் அவனை இவ்வளவு ஆரம்கவர்ந்ததில்லை. அவனும் இவ்வளவு அருகில் நெருங்கி யாரையும் பார்த்ததில்லை. பச்சைக் கரை போட்ட பாவாடையும், சிவப்பு நைலான் தாவணியும் அணிந்து நின்ற உஷா ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு, அவன் முதல் முதலாகக் கண்ட போது இவ்வளவு கவர்ச்சியாகவா இருந்தாள்? இவளுக்குத்தான் எத்தனை நீளமான பின்னல்! அடர்த்தி! என்ன அழகான கண்கள்! குளிர்ச்சி! எவ்வளவு செழிப்பான உடம்பு! மென்மை!



அவனுக்கே தன் நினைவு போகும் விதத்தைக் கண்டு நடுக்கமாக இருந்தது. 'சீச்சீ! இப்படியெல்லாம் இவளைப்பற்றி எண்ணுவது தகாது!' என்று தோன்றியது. தன்னுடைய கண்ணே பட்டுவிடுமோ என்ற அச்சமும் தலைகாட்டியது. அப்படி ஏதாவது கண் திருஷ்டிப்பட்டு, அதனால் உஷாவின் அழகுக்கு ஊனம் வந்துவிட்டால்...? அதை அவனால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை; உள்ளம் துடித்தது.

ஆனால் நீதிபதி ராமசுந்தரத்தின் இரண்டாவது பிள்ளை சேகர் அன்றே சொன்னது இப்பொழுது எவ்வளவு உண்மையாகி விட்டது. அந்த நினைவு தான் இப்பொழுது பாபுவுக்குச் சட்டென்று வந்தது. சொர்ணம்பாளின் பிரசவத்தின் போது அங்கே தங்கியிருந்த உஷாவைப் பார்த்துவிட்டு, அவன் "அடே பாபு, யாரடா இவள்? பாரிஸ்டரின் பெண்ணா? இன்னும் நாலைந்து வருஷங்கள் கழித்துப் பார்க்க வேண்டுமே! அப்பொழுது எப்படியிருப்பாள் தெரியுமா?" என்று சொன்னான். இத்தனைக்கும் அப்போதுதான் அவன் கல்லூரிக்குள்ளேயே அடியெடுத்து வைத்திருந்தான். படிப்பில் அவன் சற்று முன்பின்னாக இருந்தாலும் இந்த உண்மை அன்றே அவனுக்கு எப்படித் தெரிந்தது? இப்பொழுது இந்த உஷா அவன் கண்ணில் படாமல் இருக்க வேண்டுமே என்று அவனுக்கு வீண் கவலை ஒன்று உண்டாயிற்று. அவன் நீதிபதியின் மற்றப் பிள்ளைகளைப் போல இல்லை. இந்த விஷயங்களில் எல்லாம் அவனுக்கு அநுபவம் இருந்ததோ இல்லையோ, அவன் கொஞ்சம் முரட்டுச் சுபாவம் உடையவன் என்பது உண்மை. பேச்சு, செயல் இரண்டிலும் கூச்சமே படமாட்டான். மாணவனைப் போல இருந்த கல்லூரி விரிவுரையாளர் ஒருவரைக் கைநீட்டி அறைந்துவிட்டு, படிப்புக்கே

அவன் இப்போது ஒரு முழுக்குப் போட்டு விட்டு வந்துவிட்டான். எதற்காக அவரை அறைந்தான் என்பது ஆண்டவனுக்குத்தான் தெரியும். அவனுக்கே இன்று வரையில் தெரியாது. "ஏதோ புத்தித் தவறுதலாக நடந்து கொண்டு விட்டேன்!" என்று அவரிடமே போய் வேண்டிக் கொண்டிருந்தால்கூட அவர் அவனை மன்னித்திருப்பார். ஆனால் அவனோ, "நான் யாரிடமும் போகமாட்டேன்!" என்று சொல்லி விட்டான்.

"ஏனடா போகமாட்டாய்? உன்னால் உன் அப்பாவுக்கு எவ்வளவு தலையிறக்கம் வந்து விட்டது?" என்று கேட்டாள் அவன் தாயார் மீனாட்சி.

"ரிடையர் ஆகப் போகிறவர்தானே? கொஞ்சம் முன்னாலேயே ஓய்வு எடுத்துக் கொள்ளட்டுமே. பாவம், எத்தனை நாள்தான் நீதி என்ற கத்தி முனையில் உட்கார்ந்திருப்பார்?" என்றான் அவன்.

அப்படிப்பட்டவன் கண்களில் இந்த உஷா மட்டும் பட்டுவிட்டால், ஒரு கடிதம் எழுதி, தன்னையே கொண்டு போய்க் கொடுக்கச் சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று எண்ணினான் பாபு. ஏனெனில் பாபு ஒருவனிடம்தான் அவன் சிறிது பிரியமாக நடந்து கொண்டான். மற்றவர்களுக்கு அவனைக் கண்டாலே நடுக்கம்தான்.

வெள்ளையன் தோட்டத்துக்குத் தென்புறமாகச் சிறிது தூரத்தில்; வண்டித் தடம் ஏற்பட்டிருந்தது. ஐந்து வருஷங்களுக்குள் மனிதன் மட்டும்தானா வளர்ச்சி அடைகிறான்? நகரமே உருமாறுவது போல் வளர்ந்து கொண்டிருந்தது. லாரி லாரியாகச் செங்கல்லும் மணலும் சிமெண்ட்டும் மரமும் அந்தப் பாதை வழியாகவே சென்று ஒரு புதிய காலனியை மேற்கே உருவாக்கிக் கொண்டிருந்தன. மழை நீர் தேங்கும் பள்ளங்களில் எல்லாம் இப்போது மாளிகைகள் எழுந்து நின்றன. கறம்பாகக் கிடந்த இடங்களில் எல்லாம் அட்டைப் பெட்டிகளை அடுக்கியது போன்ற கட்டடங்கள் முளைத்து நின்றன. இதயத்திலிருந்த ஈரமே உலர்ந்து போய்க் கொண்டிருந்தது போல் பசுமையையே மனிதன் அழித்துக்கொண்டு வந்தான்.


வெள்ளையன் தோட்டத்துக்கு வேறு பாதை ஏற்பட்டது மற்றவர்களுக்கு எப்படி இருந்ததோ, என்னவோ! அது பாஞ்சாலியின் பெருமையைக் குலைத்து விட்டது. அவள் கண்ணில் படாமல் அந்தத் தோட்டத்தினுள் அடியெடுத்து வைக்க முடியாதவர்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து அவளைக் கர்வ பங்கம் செய்து விட்டதாகவே அவள் கருதினாள்.

"ஐயே இப்ப புரண்டு போய் நிக்குதடி, செல்லாயி! ஒரு நிலைபாக் கவுந்து போய்த்தான் நிக்குது!" என்று கையைக் கொட்டி, மோவாயை ஏந்திக் கொண்டாள் அவள். செல்லாயி சமீபத்தில்தான் கல்யாணமாகி காட்டுப்புறத்திலிருந்து வந்திருந்தாள். பாஞ்சாலியிடம்தான் அவளுக்குச் சிட்சை நடந்து வந்தது. அவளுடைய கணவன் சினிமாக் கொட்டகை ஒன்றில் கடைசி வகுப்பு வாயிலைக் காவல் புரிந்து வந்தான். பாஞ்சாலிக்கும் செல்லாயிக்கும் எந்தப் படமாக இருந்தாலும் கடைசி நாள், கடைசிக் காட்சிக்கு அனுமதி உண்டு. செல்லாயிக்கு இன்னும் 'பட்டணத்துப் பம்புத் தண்ணீர் பிடிபடவில்லை. அதனால் பாஞ்சாலியிடம் இன்னும் அவளுக்குப் பக்தி குறையவில்லை. கணவனை வசியப்படுத்தும் வழிகளில் பாடம் இன்னும் அரைகுறையாகத்தான் இருந்தது அவளுக்கு. அக்கா மகன் பாபுவை அறையிலிருந்தே எடுத்து வந்தது, வளர்த்தது முதல் இன்று அவன் வீட்டுப் பக்கமே திரும்பிப் பார்க்காமல் இருந்தது வரையில் அவளிடம் சொல்லித்தான் ஆறுதலோ பெருமையோ அடைந்து வந்தாள் பாஞ்சாலி.

"அதை ஒரு நாளைக்கு எனக்குக் காட்டு அக்கா, பார்க்கலாம்!" என்றாள் செல்லாயி.

பாஞ்சாலி பெருமூச்சு விட்டுக் கொண்டே, "அந்தக் கழுதை ஒரு நாளு இல்லாட்டி ஒரு நாளு இங்கே வந்து நிக்காமலா போகப் போவுது? பாத்துக்கிட்டு இரேன்!" என்றாள்.






"இங்கே எங்கியோ சங்கம் வச்சிருக்கிறாங்களாமே, அங்கே அது நித்தமும் வந்து போய்க்கிட்டுத்தானே இருக்குதாம்! உனக்குத் தெரியாதா, அக்கா?"

"சங்கமா? செங்கமுனி மகன் சண்முகம் ஓலைப் பாயைப் போட்டுக்கிட்டுத் தூங்குறானே, அதுவா?"

"தூங்கலே யக்கா. தூங்கலே. ஆறு மணி ஆட்டம் உட்டு, ஒம்பது மணிக்குச் சனங்க வராங்க, பாரு! அதுக்கு மேலே ஆம்புளைங்க எல்லாரும் அங்கே கூடிப் பேசுறாங்களாம்!"



ஆனால் பாபு அதே நேரத்தில் சண்முகத்தோடு சங்கத்தில் உட்கார்ந்திருப்பது அவளுக்கு எப்படித் தெரியும்? குப்பன் குடிசைக்குப் பின்புற வரிசையில் தான் இருந்தது அந்தச் சங்கம். இடுப்பு உயரத்துக்கு இருந்த மூன்றடிக் குச்சுக்குள்ளே குடி புகுந்திருந்தார் வெல்லப் பிள்ளையார். அவருடைய உண்மையான பெயர் வெள்ளைப் பிள்ளையாரா, வெல்லப் பிள்ளையாரா என்பது யாருக்கும் நிச்சயமாகத் தெரியாது! அவர் வெள்ளையும் அல்ல; வெல்லமும் அல்ல என்பது மட்டும் எல்லாருக்கும் நிச்சயமாகத் தெரியும். அவருடைய மூன்றடிக் குச்சுக்கு முன்னால்தான் சங்கத்துக்கு ஒரு கொட்டகை போடப்பட்டிருந்தது. எல்லாம் சண்முகத்தின் ஏற்பாடுதான். இந்தச் சங்கக் கொட்டகைக்கு அவன் திறப்பு விழா ஒன்றும் நடத்தவில்லை. கூப்பிட்டிருந்தால் அறுநூறு, எழுநூறு ஓட்டர்கள் உள்ள அந்தக் கோட்டத்துக்கு அறிவுரை நிகழ்த்தி, திறப்பு விழாவைச் சிறப்பிக்க யாராவது ஓர் அமைச்சரோ, அரசியல் தலைவரோ வராமலா போயிருப்பார்கள்? சண்முகம் அதையெல்லாம் விரும்பவில்லை. அப்படியெல்லாம் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ள அவனுக்குப் பிடிக்க



"என்னன்னு பேசுறாங்களாம்?"

"அது என்னத்தைப் பேசுவாங்களோ? யாரு கேட்டாங்க!"

"உனக்கு யாரு சொன்னது?"

"மச்சான்தான் மூந்தா நாளு சொல்லிச்சுது! ஆட்டம் முடிஞ்சு அந்தப் பக்கமா வரப்போதான் கூட்டம் கலைஞ்சி எல்லாரும் போறாங்களாம். அப்பத்தான் உங்க அக்கா மவனை இது பாத்திச்சாம்!"

"அப்படியா சேதி?" என்று ஆத்திரத்தோடு கறுவினாள் பாஞ்சாலி. "வரட்டும் இன்னிக்கு — அதுக்குச் சரியான வழி வைக்கிறேன்!" என்று உறுமினாள் அவள்.



வில்லை. அந்தச் செய்திகளெல்லாம் பத்திரிகைகளில் வரும் என்பது உண்மையே. ஆனால் அந்தப் பத்திரிகைகள் கடைசியாக எங்கே வந்து சேருகின்றன என்பது அவனுக்குத்தான் தெரியும். ஒரு கோணிச் சாக்கையும் தராசுப் படிக்கல்லையும் பொழுது விடிந்ததுமே தூக்கிக் கொண்டு, "பழைய பேப்பர்!" என்று குறிப்பாகச் சில தெருக்களில் சுற்றுவதுதான் அவன் வேலை. ஆகவே விளம்பரப்படுத்திக் கொள்வதில் அவனுக்கு ஒரு பிரமையில்லை. அந்தச் சங்கத்தைக் கட்டி முடித்ததுமே அவனே சந்தடி செய்யாமல் திறப்பு விழாவையும நடத்தி முடித்து விட்டான். பழைய காகிதம் ஒன்றை எடுத்து, 'வெள்ளையன் தோட்டத்து இளைஞர் சங்கம்' என்று நீல மசியால் பெரிதாக எழுதி, ஓர் அட்டையில் ஒட்டி, அதை அந்தக் கொட்டகைக்கு முன்னால் தொங்கவிட்டு விட்டான்.

இதற்குள் அவனுக்கு வேர்த்து விறுவிறுத்து விட்டது. பல நாள் கனவு பலித்துவிட்ட பெருமையோடு அவன் தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்தான். ஒருவரையும் காணவில்லை. எதிரே இருந்த குடிசைக்குப் பின்னால் ஒரு முருங்கை மரம் பூத்துக் காய்த்து நின்றிருந்தது. அதன் கிளையில் இருந்த ஓணான் ஒன்று மட்டும் அவனைப் பார்த்து அழகு காட்டிக் கொண்டிருந்தது.

மூன்று நாள் ஆகியும் அவன் சங்கத்தை எட்டிப் பார்ப்பவர்களே இல்லை. நாலாம் நாள் அவன் தெருக்களைச் சுற்றிவிட்டு, அண்ணியிடம் அன்று கிடைத்த பணத்தைக் கொடுத்து விட்டு, சங்கத்துக்குள் வந்து நுழைந்த போது அங்கே ஆட்டுக் குட்டி ஒன்றைப் பிடித்து ஒரு காலிலே கட்டிக் கொண்டிருந்தாள் ஒரு குமரி.

சண்முகத்துக்கு வந்த கோபத்தைச் சொல்லி முடியாது. "இந்தா, இது என்ன, ஆட்டுப்பட்டின்னு உனக்கு நினைப்பா? இதுக்காகத்தான் இங்கே கொட்டகை போட்டுக் குளுமையா வச்சிருக்குன்னு பாத்தியா?" என்று மிரட்டலாகப் பேசினான்.

அவனுடைய மிரட்டலை அவள் காதில் போட்டுக் கொண்டதாகவே தெரியவில்லை. கையில் அகப்படாமல் துள்ளி ஓடித் துன்பப்படுத்தி விட்ட ஆட்டுக் குட்டியைக் கட்டிவிட்டுத்தான் அவள் தலை நிமிர்ந்து பார்த்தாள்.

"உன்னைத்தான்!" என்றான் அவன்.

"என்ன?" என்றாள் அவள்.

அவளுடைய குரலையும் பார்வையையும் கண்ட பிறகு அவனுடைய தொனி சிறிது மாறியது. "இவ்வளவு நேரமாச் சொல்லிக்கிட்டிருந்தது எல்லாம் காதிலே விழல்லியோ?" என்று கேட்டான்.

"நீங்க வரதுக்குள்ளே ஓட்டிக்கிட்டுப் போயிடத்தான் பார்த்தேன். ஆனால் நீங்கதான் பாத்துப்புட்டீங்களே, இனிமே என்னன்னுதான் கட்டி வெச்சுட்டேன்!" என்றாள், மெல்லச் சிரித்துக் கொண்டே.

"ஆட்டுக்குட்டி கட்டத்தான் இங்கே உங்களுக்குக் கொட்டகை போட்டு வச்சிருக்குதோ?"

"ஒருத்தரையும்தான் காணோமே. இதையாவது கட்டி வைப்பமேன்னுதான்—"

"கட்டி வெச்சியாக்கும்! ஏன், கன்னுக் குட்டி, குதிரைக் குட்டின்னு ஒண்ணும் இல்லியா? இருந்தா அதையும் கொண்டு வந்து கட்டி வெக்கிறதுதானே!"

இதற்குள் ஒரு பெட்டைக் கோழியும் அதைச் சுற்றி ஐந்தாறு குஞ்சுகளும் ஒரு பரிவாரமாக அங்கே, 'கொக், கொக்' என்று கத்திக் கொண்டே நுழையத் தொடங்கின; சண்முகத்துக்கு வேகம் பற்றிக் கொண்டு வந்தது. "அட சனியன் பிடிச்ச பீடைகளா? நீங்க வேறேயா இங்கே?" என்று கையை ஓங்கிக் கொண்டு பாய்ந்து போய் விரட்டினான்.

அவள் 'களுக்'கென்று சிரித்தாள்.

"செய்யறதையும் செய்துப்பிட்டு, சிரிப்பு வேறேயா?"

"நாங்க கோழி கீழி ஒண்ணும் வளக்க மாட்டோம்! இது யாருடைய கோழியோ தெரியாது!" என்றாள் அவள், முகபாவத்தைச் சட்டென மாற்றிக் கொண்டு.

"ஆடுதான் வளப்பீங்களாக்கும்?"

அவள் அதற்கு ஒன்றும் சொல்லாமல், ரோசத்தோடு ஆட்டுக் குட்டியை அவிழ்த்துக் குழந்தையைப் போல் மார்போடு அணைத்துத் தூக்கிக் கொண்டாள். திரும்பிப் பார்க்காமல் சரசர வென்று அவ்விடத்தை விட்டுச் சென்றாள்.

பழைய பேப்பர் வியாபாரி கிட்டப்பாதான் இந்தத் தொழிலுக்குச் சண்முகத்தை இழுத்து விட்டவன். அவனுக்குப் புதிய பத்திரிகை வியாபாரமும் உண்டு; பழைய பத்திரிகை வியாபாரமும் உண்டு. சண்முகம் ஐந்தாம் வகுப்பு வரையில் படித்திருந்தான். படிப்பை நிறுத்த வேண்டியதாகி விட்ட பிறகு கூட அவன் பத்திரிகைகள் படிப்பதை நிறுத்தவில்லை. கிட்டப்பாவுக்கு வெற்றிலை பாக்கு வாங்கித் தருவான்; கும்பகோணம் கடைக்குப் போய்க் காப்பி வாங்கிக் கொண்டு வருவான்; சமயத்தில் கல்லாப் பெட்டி யடியிலும் அவன் உட்காருவதுண்டு. இதற்கெல்லாம் பிரதிபலனாக அவன் பழைய - புதிய பத்திரிகைகள் ஒன்று விடாமல் படித்து முடித்து விடுவான். அவனிடம் போய், அன்று நடந்த ஆட்டுக் குட்டிக் கதையைச் சொன்னதும் கிட்டப்பாவுக்குச் சிரிப்புத்தான் வந்தது. "அடே, சண்முகம்! உலகத்திலே, நடப்பிலே இவ்வளவு தாண்டா நடக்கும். இதுக்கு மேலே நடக்கிறதெல்லாம் படிக்கிற கதைகளில் மட்டும்தான்; தெரிஞ்சிக்க!" என்றான் அவன்.

ஆனால் மறுநாள் வழக்கம்போல் அவன் சங்கத்துக்குள் நுழைந்தபோது தன் கண்களையே அவனால் நம்ப முடியவில்லை.

சங்கத்துக் கட்டாந் தரையைச் சாணி போட்டு மெழுகி, சுத்தமாய்த் திண்ணை போகப் பெருக்கி, வெல்லப் பிள்ளையார் சந்நிதிக்கு ஒரு கோலமும் போட்டு வைக்கப்பட்டிருந்தது. வெயில் வேளைக்கு அங்கே நுழைந்ததுமே ஜில்லென்று ஒரே குளிர்ச்சியாக இருந்தது. அவன் அப்படியே மலைத்துப் போய் நின்றான். இதெல்லாம் யாருடைய வேலை என்பதைப் புரிந்துகொள்ளக் கற்பனா சக்தியா வேண்டும்? அந்தப் பெண்ணின் பார்வையையும் குரலையும் மீண்டும் மீண்டும் நினைவுக்குக் கொண்டுவரப் போராடினான்.

நாலைந்து நாள் இது தொடர்ந்து நடந்தது. சாயங்கால வேளைகளில் சங்கத்தில் வந்து சிலர் உட்காரத் தலைப்பட்டார்கள். ஆனால் யார் இதற்குக் காரணமோ, அவள் மட்டும் அவன் கண்ணிலேயே படவில்லை. ஆறு, ஏழு...ஒன்பது, பத்து நாட்களாகி விட்டன. இன்னொரு வெள்ளிக்கிழமை வந்தது. அன்று அவன் தோணிப் பையைத் தூக்கிக்கொண்டு போனவன் பாதி வழியிலேயே திரும்பி விட்டான். அவள் கோலக் குழாயும் கையுமாக அவனிடம் அகப்பட்டுக் கொண்டு விட்டாள்.

"நீதானா இது?"

'பின்னே யார் என்று நினைத்தாய்?' என்பதுபோல அவள், "ங்..." என்று இழுத்தாள்.

"உன் பெயர் என்ன?"

"எதுக்காக?"

"சும்மாத் தெரிஞ்சிக்கத்தான்!"

"தேவானை!"

"யாரது, யாரது! வள்ளி - தேவானை என்பாங்களே, அந்தத் தேவானையா?" என்று கேட்டான் அவன்.

"நான் வெறும் தேவானைதான்- அந்த வள்ளி - தேவானை இல்லே. இந்தத் தேவானைக்கிட்டே வள்ளின்னு யாரும் வந்து நிக்க முடியாது!" என்றாள் அவள்.

சண்முகம் இதைக் கேட்டுச் சிரித்தான். தேவானையின் முகம் கொடிக்குள் மாறியது. "ஆடு வளக்கறதைப் பத்தித்தானே அன்னிக்கு வந்தது பேச்சு? நாங்க பாலுக்காகத்தான் ஆடு வளக்கிறோம். வேறு எதுக்காகவும் இல்லே!" என்று சொல்லிவிட்டு அவள் அவனைத் தாண்டிக்கொண்டு ஓடி மறைந்து போனாள்.

வெல்லப் பிள்ளையார் சந்நிதியில் ஒழிந்த நேரங்களில் வந்து கூடியவர்கள் சங்கத்தின் விஷயமாக அக்கறை காட்டத் தொடங்கினார்கள். பெயர்தான் இளைஞர் சங்கமே தவிர, அங்கத்தினர்களில் பாதிப் பேர் இளமையைக் கடந்தவர்களாக இருந்தார்கள். சந்தாத் தொகை கூடக் கொஞ்சம் சேர்ந்து விட்டது. ஏழெட்டு ஓலைத் தடுக்குகள், விசிறிகள், அரிக்கேன் விளக்கு இரண்டு, பழைய பத்திரிகைகள் இவை இப்போது சங்கத்தின் ஆஸ்திகளாக இருந்தன. ஆண்டு விழா நடத்த வேண்டும் என்றார்கள் சில இளைஞர்கள்; வேண்டாம் என்றனர் வேறு சிலர்.



ஆனால் முந்தாநாள் நடந்த கூட்டத்தில் இரவுப் பாடசாலையையோ, வாசகசாலையையோ ஆரம்பிக்க வேண்டாம் என்று யாரும் கூறவில்லை.

பேசி முடித்த இரண்டாம் நாளே பாபு சைக்கிள் கொள்ளாமல் ஒரு கட்டுப் புத்தகத்துடன் வந்து சேர்ந்ததைக் கண்டு, "எல்லாம் சரி, பாபு! புத்தகம் வந்திட்டுது. ஆனால் இதையெல்லாம் கெட்டுப் போகாமல் எப்படி வைக்கிறது?" என்றான் சண்முகம்.

"சங்கத்துக்கு இடம் கிடைச்சாப்பலே இதுக்கு ஒரு பெட்டி கிடைக்காமலா போயிடப் போறது? பார்த்துக்கலாம்!" என்று சொல்லி விட்டு, பாபு சைக்கிளில் ஏறிக்கொண்டான்.

"அப்புறம் எப்பொழுது வருவாய் பாபு?" என்று கேட்டான் சண்முகம்.

"இன்னிக்கு இனி இல்லே; நாளைக்கும் சந்தேகம்தான்!" என்று சொல்லிக்கொண்டே வண்டித் தடத்தை அடைந்தான் பாபு. அவன் கண் பார்வையிலிருந்து மறையும் வரையிலும் அங்கேயே நின்று கொண்டிருந்தான் சண்முகம். அவன் நின்றதற்குக் காரணம் இருந்தது. முருங்கை மரத்தை ஒட்டிக் கட்டியிருந்த தட்டி மறைப்பிலிருந்து இவ்வளவையும் ஒரு முகம் கவனித்துக் கொண்டுதான் இருக்கும் என்பது அவனுக்குத் தெரியும். அதற்காகவே அவன் நின்றான். பிறகு வேண்டுமென்றே திரும்பிக் கூடப் பார்க்காமல் பிள்ளையார் கோயிலை நோக்கி நடந்தான். தன்னை முன்னிட்டு ஒருத்தி ஏங்குவதும், அவளை மேலும் ஏங்க வைப்பதும் ஒருவனுடைய தனிப் பெருமை அல்லவா? எல்லாருக்கும் இப்படி வாய்ப்பது ஏது? தனிப் பெருமை மட்டும் அல்ல; அதில் தனி இன்பமும் பொருந்தியிருந்தது.

அத்தியாயம் 18

புரிந்தது நாணம்

உஷா கண் கலங்க, கண்ணீர் மல்க அசையாமல் நின்றாள். தாயின் இந்த உதாசீனத்தை அவளால் தாங்க முடியவில்லை. தந்தையிடம்கூட அவள் எந்தவித மாறுதலையும் உணரவில்லை. ஆனால் அளவு கடந்து அன்பு காட்டிய தாய் இப்போதெல்லாம் அலட்சியப்படுத்திச் செல்வதை அவளால் எவ்வாறு பொறுக்க முடியும்?

நன்றாக இருட்டும் வரையில் கண்ணீர் மாலையாக வடிய அவள் சோபாவிலேயே உட்கார்ந்திருந்தாள். என்ன யோசித்தும் தாயின் அன்பைத் திரும்பப் பெறும் வழி எதுவும் அவளுக்குப் புலப்படவில்லை. சொர்ணம்பாள் அவளை அடித்திருக்கலாம்; கண்டித்திருக்கலாம். அந்த வருத்தமெல்லாம் அடுத்த கணமே மறைந்து விடும். முகம் மலர்ந்துவிடும். ஆனால் அந்தத் தாய்க்கு இத்தனை கோபம் வரும்படி இப்போது உஷா என்ன செய்து விட்டாள்?

"உஷா! இங்கேயா உட்கார்ந்திருக்கே?" என்று விளக்கைப் போட்டுவிட்டுத் திரும்பிய பொன்னி கேட்டாள். உஷாவின் கண்களில் கண்ணீர் வடிவதைக் கண்டு அவளுடைய இளகிய நெஞ்சம் பதை பதைத்தது.

"என்ன உஷா?" என்று அவளுடைய செழுங்கையைப் பற்றிக்கொண்டு அடித்தொண்டையில் வினவினாள்.

உஷாவின் சிவந்த முகம் இப்போது மேலும் கன்றியது; மேலும் புதிதாகக் கண்ணீர் பெருகியது. துக்கம் தாளாமல் அவள் தன்னுடைய கண்களை மூடிக்கொள்ள முயன்றாள்.

"என்ன உஷா...நான் கேட்டுக்கிட்டே இருக்கிறேன்; நீ அழுதுக்கிட்டே இருந்தால்? என்ன நடந்தது இப்ப? ஏன் தனியா உட்கார்ந்து இப்படி அழுதுக்கிட்டு இருக்கே?"

பொன்னி வந்தவுடனே பொங்கிய துக்கம் இப்போது சட்டென்று மட்டுப்பட்டது. அவள் பொன்னியின் தோளிலே முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினாள். வேறு எத்தனையோ சந்தர்ப்பங்களில் உஷா அவள் தோளில் சாய்ந்து அழுது ஆடையைக் கண்ணீரால் நனைத்திருக்கிறாள். ஆனால் அதற்கும் இதற்கும் தான் எத்தனை வித்தியாசம்? அப்போதெல்லாம் அவள் சின்ன விஷயங்களுக்குக் கூடப் பிடிவாதம் பிடித்து அழும் சிறுமியாக இருந்தாள். யார் வந்து எப்படிச் சமாதானப் படுத்தினாலும் அவளுடைய அழுகையை அடக்கவே முடியாது. கேட்டதெல்லாம் கொண்டு வந்து கொடுத்தாலும், சொன்னதை யெல்லாம் செய்து தந்தாலும் அழப் பிடித்துக் கொண்டு விட்டால் அவளை ஓய வைப்பது என்பது எளிதில் சாத்தியமில்லை. பொன்னியின் பொறுமையைக் கடைசி எல்லை வரையில் அவள் சோதித்து விடுவாள். அதட்டினாலோ, அடிப்பதுபோல் மிரட்டினாலோ, கேட்கவே வேண்டியதில்லை. குடியே மூழ்கிப் போனது மாதிரிதான்! அப்புறம் சொர்ணம்பாளின் வாயிலிருந்து தப்ப முடியாது. பொன்னியை அவள் பிடித்த காட்டில் கொண்டு போய்த்தான் விடுவாள்.

ஆனால் இன்று உஷாவின் அழுகை தாயைப் பிரிந்த கன்றின் குரலைப்போல் நெஞ்சை நெகிழச் செய்தது. இரு கைகளாலும் அவளை இறுக அணைத்துக் கொண்டு அவளுடைய மனச் சுமையை மாற்றிக் கொண்டுவிடப் பார்த்தாள்.

உஷாவுக்கும் தன் துக்கத்தைப் பிரித்துச் சொல்லத் தெரியவில்லை; பொன்னிக்கும் அதைச் சரிவரப் புரிந்து கொள்ளத் தெரியவில்லை. ஆனால் தன் முந்தானையால் அழுது சிவந்த கண்களை ஒற்றிவிட்டு. "விளக்கு வைத்த நேரத்திலே பெண்கள் வாழும் வீட்டில் அழக் கூடாது, உஷா!" என்று தேற்றினாள்.

"நான் என்ன செய்வேன், பொன்னி! அம்மாவுக்கு நான் என்ன பிழை செய்தேன்? பார்வையாலேயே சுட்டுப்பொசுக்கும்படி நான் என்ன தவறு செய்து விட்டேன்!" என்று விம்மலுக்கிடையே கேட்டாள் உஷா.

பொன்னியைக் கேட்டால் அவளுக்கு அதைப்பற்றி என்ன தெரியும்? அவளுக்கும் அதுதான் புரியாத புதிராக இருந்தது. "சுந்தரி பிறந்ததிலிருந்தே அம்மா உங்கிட்டே ஒரு மாதிரியாகத்தான் இருக்காங்க! அது இப்ப கொஞ்சம் அதிகமா இருக்கு. நீதான் வயசு வந்த பிள்ளை, விவரம் தெரியற பருவம். எல்லாத்தையும் சரிக்கட்டிக்கிட்டுப் போகணும். நம்ப அம்மாதானே அப்படி இருக்காங்கன்னு பொறுத்துக்கிட்டு போகணும்" என்றாள்.

உஷா சிறு வயதில் எவ்வளவுக்கு எவ்வளவு பிடிவாதம் பிடித்தாளோ அவ்வளவுக்கு அவ்வளவு அடக்கமாக இப்போது மாறி விட்டாள் என்பது அவளுக்குத் தெரிந்துதான் இருந்தது. ஆனாலும் பெற்ற தாயே வேற்றுக் கண் கொண்டு தன் மகளைப் பார்ப்பாள் என்பதை அவள் எங்கும் கண்டதில்லை; கேட்டதுமில்லை. உஷாவை அங்கேயே உட்காரச் சொல்லிவிட்டு அவள் மற்ற விளக்குகளையெல்லாம் போய்ப் போட்டுவிட்டு, எஜமானியைப் பார்க்கச் சென்றாள். சொர்ணம்பாள் சின்ன மகளிடம் கொஞ்சிக் கொண்டிருந்ததைக் கண்டு சிறிது நேரம் தயங்கி நின்றாள்.

"ஏன் இங்கே வந்து நிற்கிறாய்? என்ன வேணும் உனக்கு?"

"ஒன்றுமில்லை; உஷாவை எதுவும் கோவிச்சுக்கிட்டீங்களா?"

உஷாவின் பெயரைக் கேட்டதுமே அவள் முகம் சுண்டிப் போயிற்று. "சரி


எந்த நேரத்திலும்
எந்த இடத்திலும்
எந்த சந்தர்ப்பத்திலும்
நீங்கள் எழில் மேம்பட காண்கிறீர்கள்
கடாவ்
வாயில்களில்
சில்லரைக் கடை :
216, நேதாஜி சுபாஷ் சந்திர
போஸ் ரோடு, சென்னை-1

சிரிக்காதே!

பல்லாண்டு!

"என் மேல் உங்களுக்குக் கோபம் இருந்தால் 'பல்லே உடைத்து விடுவேன்' என்று ஒரு வார்த்தை சொன்னாலே போதுமே! அதற்காக இந்த மைசூர்ப் பாகைக் கொடுக்க வேண்டுமா என்ன?" —ஒரு சம்பந்தி

சொப்பனம்!

"நேற்றிரவு உங்கள் வீட்டுக்கு வந்த மாதிரி சொப்பனம் கண்டேன். அதற்கு எனக்குச் சேர வேண்டிய 'விஸிட்டிங் பீஸை' உடனே அனுப்பி வைக்கவும்." —ஒரு டாக்டர்

பிடித்துப் பார்!

"உயிருடனே வேறு எப்படியோ பிடித்துக் கொடுப்போருக்கு ரூபாய் பத்தாயிரம் சன்மானம் கொடுக்கப்படும் – வெகு காலமாகத் தலைமறைவாகக் கண்ணிலேயே படாமல் ஒளிந்திருக்கும் அந்தக் கடவுளை!"

—ஒரு நாஸ்திக விளம்பரம்!

காளிக் கன்னி!

"என் அழகைப் பார்த்துக் 'கன்னியும் காளியும்' என்ற சினிமாவில் எனக்குச் 'சான்ஸ்' கொடுத்திருக்கிறார்கள்!"

"கன்னியாக நடிக்கப் போகிறவர் யார்?"

ஆண்டு (நினைவு) விழா!

"டேய்! நம்ம ரெண்டு பேரும் சேர்ந்து ஹோட்டலில் காப்பி சாப்பிட்டு இன்று சரியாக ஒரு வருஷம் ஆகிறது. வாடா போய் ஒரு கப் காப்பி சாப்பிடலாம்!"

"டேய்! போன தடவை நான்தான் 'பில்' கொடுத்தேன். அது நினைவு இருக்கிறதா?"

கொர்...ர்...ர்!

"தூக்கம் வரும் மாத்திரை வியாபாரம் எப்படி இருக்கு?"

"வியாபாரம் தூங்கறது சார்!"

"அதுவும் உங்கள் மாத்திரைகளைச் சாப்பிட்டு விட்டதா?"

முடியாதே!

விக: ஏண்டாப்பா! உன் மனைவியின் முகம் கோணாமல் நடந்து கொள்ளக் கூடாதா?

பக: அது எப்படி முடியும்? பிறவியிலிருந்தே அவள் முகம் கொஞ்சம் கோணலாயிற்றே!

சரி; போய் உன் வேலையைப் பாரு!" என்றாள் சொர்ணம்பாள்.

பொன்னிக்கு மற்ற வேலைகளைவிட அந்த வேலைதான் முக்கியமாகப் பட்டது. ஆகவே நின்று கொண்டிருந்தாள்.

"அப்புறம் ஏன் நிற்கிறே? இன்னும் பீரோவிலே இருக்கிற புத்தகங்களையெல்லாம் எடுத்து எந்தப் பரதேசியிடமாவது கொடுக்கச் சொல்! நாளைக்கு இந்தச் சுந்தரி எங்கேயாவது எடுத்துப் படித்து விட்டால் என்ன செய்வது? போ போ!" என்று நொந்து கொண்டு பேசினான்.

"என்னமோ, வரவர உங்களுக்குக் கோபம்தான் அதிகமாக வருது... அதுதான் வேற யாரு? அது எங்கே போயிருக்கும்?" என்று விடுவிடெனச் சொல்லி விட்டாள்.

"சீ, அதிகப்பிரசங்கி! மூடுவாயை!"

"நீங்க செய்யறது ஒண்ணும் எனக்குச் சரியாகப்படல்லே. கல்யாணம் கட்டி ஊரான் வீட்டுக்கு அனுப்பப் போற பிள்ளையைக் கண்ணைக் கசக்க விடலாமா?" என்றாள்.

சொர்ணம்பாள் மௌனமாக இருந்தாள். சற்றுப் பொறுத்து அவன், "உஷா அழுதாளா, என்ன?" என்று கேட்டான். பொன்னியிடமிருந்து இதற்கு விடையை எதிர்பாராமலே, "நீ கீழே போனால் குழந்தையை இங்கே வரச் சொல்லி விட்டுப் போ!" என்றான்.

பொன்னி கீழே சென்று வெகு நேரமாகியும் திரும்பிவரவில்லை. உஷாவும் மேலே வரவில்லை. சின்னப் பெண் சுந்தரியோ அவளை அமைதியாக இருக்க விடாமல் நச்சரித்தாள்.

பின்னால் காலடிச் சத்தம் கேட்டது. பொன்னிதான் புன்சிரிப்போடு அங்கே தயங்கியபடியே நின்று கொண்டிருந்தாள்.

"குழந்தை எங்கேடி?"

"கீழேதாம்மா இருக்குது!"

"இதைச் சொல்ல புன்சிரிப்பு என்ன பொத்துக் கொண்டு போகிறது? என்னடி அப்படி ஆனந்தம்?"

"ஆனந்தமேதாம்மா, ஆனந்தம் தான்!" என்றாள் பொன்னி.


"குழந்தையைப் போய் வரச் சொல்லிவிட்டு அப்புறம்போய் ஆனந்தப்படு!" என்றாள் சொர்ணம்பாள்.

"அதைத்தாம்மா சொல்ல வந்தேன். இப்ப நீங்கதான் கீழே போகணும்!" என்று பல்லெல்லாம் தெரியச் சிரித்தாள் பொன்னி.

சொர்ணம்பாளுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. அவள் கீழே போய்ப் பார்த்த போது, சிவந்த முகத்தைச் சட்டென மூடிக் கொண்டு, தலையைக் குனிந்து கொண்டாள் உஷா. சொர்ணம்பாளுக்கு அந்த நாணம் உண்டானதற்கான காரணம் புரிந்து விட்டது. (தொடரும்)


SUPERLAC
Synthetic Enamel
6666
DRY DISTEMPER
Feltone
LUSTROL
Ready Mixed Paint
SHALIMAR PAINT
WOODKOTE
Duradol
... கடைசியாக, சகோதர சகோதரிகளே,
சாமான்கள் பளபளப்புடன், அதிக நாள் உழைப்
பதற்கு, பல வித ரகங்களில், எவ்வித வேலை
களுக்கும், ஷாலிமார் பெயிண்ட்கள் கிடைக்
கின்றன என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.
SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., PRIVATE LTD.
CALCUTTA • BOMBAY • MADRAS • NEW DELHI • KANPUR


வேப்பம் சக்தி
இணையற்றது
2,000 வருட காலமாக இதன் கிருமிநாசன
சக்தி நிரூபிக்கப்பட்டு இருக்கிறது.
உங்கள் ஈறுகளை
ஆரோக்கியமாக வைக்கவும்
பற்களைப் பலப்படுத்தவும்
நீம் டூத் பேஸ்ட்
Neem
CALCHEMICO
வேப்பங் குச்சியின் அற்புத கிருமி நாசன
சக்தியும், பல் சுகாதாரத்திற்கான நவீன
பொருள்கள் அடங்கிய ஒரே பற்பசை.
தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிமிடெட், கல்கத்தா-29.


இருட்டில் உங்களது துணைவன்
எஸ்ட்ரேலா
பாட்டரீஸ்
ISI
ESTRELA
YOUR GUIDE
IN DARKNESS
அணையாத வெளிச்சத்திற்கு எப்பொழுதும்
எஸ்ட்ரேலாவை உங்கள் டார்ச்சில்
உபயோகிக்கவும் நீடித்த உழைப்பு பிரகாசமான
வெளிச்சம்
எஸ்ட்ரேலா பாட்டரீஸ் லிட்.,
பம்பாய் - மதராஸ் - டில்லி - கல்கத்தா - கான்பூர்

பிள்ளையார் கவசம்

சோம. மகாதேவன்

பொழுது விடிந்ததுமே விளாம்பட்டி கடைத் தெருவில் 'கலகல'ப்பு நிறைந்து விடும்.

நீர்க் காவியேறிய வேட்டி தரித்து, விபூதிப் பட்டையில் மூழ்கித் தனது பலசரக்குக் கடையின் கல்லாவில் ஏறி அமர்ந்து விடுவார் சின்னத்தம்பியா பிள்ளை. அந்த நேரத்தில் வியாபாரம் மந்தமாக இருந்தாலும் அவருக்கு நாலு மனிதர்களோடு குந்திப் பேசும் நேரம் இதுதான்! அப்பொழுது அந்தப் பாதையைக் கடந்து செல்லும் அறிந்தவர்களோடு பேச்சுக் கொடுத்து, இழுத்து உட்கார வைத்துக் கொள்வார்.

முன்னறிவிப்பாகப் பிள்ளைவாள் இருமிக் கொண்டார்.

"என்னவே! சிவலிங்கம்......நேரத்தோட கிளம்பியாச்சு" என்று குரல் கொடுத்து விட்டு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

தெருவில், வேறு நினைவோடு சென்று கொண்டிருந்த சிவலிங்கம் நின்று திரும்பினார். அவர் தங்கம், பொன் வேலை செய்பவர்.

"வையாபுரி ஒழுங்கா வேலை செய்யிறானா?" என்ற அடுத்த கேள்வியில் அகப்பட்டு, சிவலிங்கம் கடைக்கு முன்னால் கிடந்த பலகையில் வந்து அமர்ந்தார்.

"வையாபுரி கடையிலே உக்காந்து வேலை செய்தாத்தான் என்னோட கவலை நீங்கிப் போகுமே, அண்ணாச்சி. அவன் போற பாதையைக் கண்டுதானே கிலியா இருக்குது" என்று உள்ள நிலையைச் சொல்ல ஆரம்பித்தார் சிவலிங்கம்.

"ஆமா...சிவலிங்கம்! தெய்வ வாக்குப் போல் இந்த வயசிலே தொழிலைப் பூரணமா கத்துக்கிட்டவன் ..... இப்படிப் பித்துப் பிடிச்சவன் மாதிரித் திரிய வேண்டாம் பாரு! இது நிச்சயமா 'செய்வினை' கோளாறுத்தான் இருக்கணும்!" என்று சொல்லிச் சிவலிங்கத்தின் நினைவில் நிறைந்திருந்த கவலையைக் கிளறினார் பிள்ளைவாள்.

நீண்ட பெருமூச்சு சிவலிங்கத்தின் உடலை அசைத்தது.

"வையாபுரி கை பட்டாலே..... 'ராசி'ன்னு உலகமே சொல்லுது. நடந்த தொழிலே நினைச்சு...புது மனை கட்ட ஆரம்பிச்சேன்! அது அடிப்படையோட நின்னு போச்சு! எனக்குக் கொடுத்து வைச்சது இவ்வளவுதான், அண்ணாச்சி!" என்று அலுத்துக் கொண்டார் சிவலிங்கம்.

ஊரறிந்த பேச்சுக்குச் சின்னத்தம்பியா பிள்ளையும் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார். சிவலிங்கம் புறப்பட்டார்.

அவரது நினைவுகள் தம்பி வையாபுரியை நோக்கி முன்னே சென்றன.

தந்தை இறந்து-அவரது பொறுப்பில் வையாபுரி வந்தபோது, அவனுக்கு வயது ஐந்து! அவன் தம்பியும் தனயனுமாக வளர்ந்தான். சிவலிங்கத்துக்குப் 'பிள்ளைப்பேறு' இன்று வரையிலும் கிடைக்கவேயில்லை. வையாபுரிக்கு ஏட்டுப் படிப்பு சிறிதளவுதான் நுழைந்தது. பன்னிரண்டு வயதிலேயே தொழிலில் நிலையாக உட்கார்ந்து விட்டான். குருவில்லாத சிட்சையாகவே அவனது கைத்திறன் வளர்ந்து புகழ் பெற்றது. அவனது கைபட்ட தங்க அணிகள் தனிச் சிறப்பைப் பெற்றன. அவனது கைராசியில் நம்பிக்கை கொண்டு வாய் நிறையப் பேசிக் கொண்டார்கள். தொழில் பெருகியது. சிவலிங்கம் பூரித்துப் போனார். எத்தனையோ மனக்கோட்டைகள் கட்டினார். ஆனால் அத்தனையும் இப்பொழுது கனவாகத்தான் போய் விட்டது. வையாபுரி தொழிலையே மறந்து விட்டான்.

அவன் பித்துப் பிடித்தவனாகி விட்டான். அவனது நினைவெல்லாம் வேறு எதிலோ லயித்து விட்டது!

சிவலிங்கம் பட்டறையின் வாசலில் நின்றார். அவரது பார்வை பட்டறைக்குள் சென்று தயங்கியது.

சிறு பையன் கண்ணாடி அலமாரியைத் துடைத்துக் கொண்டிருந்தான். முன்-இடது பக்கத்து அறையில் சாமிக் கண்ணு வெள்ளியைக் கம்பியாக இழுத்துக் கொண்டிருந்தான்.

'வெள்ளி வேலை செய்து என்றைக்கு விடியப் போகுது!'

"என்னடா வையாபுரி வரலையா?" என்று கேட்டார் சிவலிங்கம்.

சாமிக்கண்ணு வெளியே எட்டிப் பார்த்தான்!

"சொல்லிப் பார்த்தாச்சு...ஒண்ணுமே பேசாம...போயிட்டாரு!"

தங்கப் பிள்ளையாரை அவன் உருவாக்கினான். ஊர்க்காரர்களோ 'தங்கமான பிள்ளை' என்று அவனையே புகழ்ந்தார்கள்.

"இனிமே.......பொழுதடையத்தானே வந்து சேருவான்! அந்தச் செம்மேட்டுப் பிள்ளையார் கோவிலிலே உட்கார்ந்திருப்பான்! போய்க் கையோடு கூட்டி வா!" என்று உத்தரவிட்டபின் கடைக்குள் நுழைந்தார் சிவலிங்கம்.

சாமிக்கண்ணு கீழே இறங்கி ஆற்றுப் பக்கமாக நடையைக் கட்டினான்!

*

'டுமுக்' கென்று கூழாங் கற்கள் தண்ணீரில் மூழ்கும்போது வட்டமாக நெளிந்து படிக்கட்டுகள் வரை ஓடிவந்து மறையும் அலைகளையே இமையாது பார்த்துக் கொண்டிருந்தான் வையாபுரி. ஊருக்குள்ளே இந்த வையாபுரியைக் காணவில்லை யெனில் - அவனை நிச்சயமாக இந்தத் தாமரைக் குளத்தில் சந்திக்கலாம். குளத்தையொட்டிக் குடிகொண்டிருக்கும் இந்தப் பிள்ளையார் அப்பனோடு பேசிக்கொண்டிருப்பதில் அவனுக்கு ஒரு அலாதிப் பித்து.


சுற்றிலும் தீவுபோல் பரவியிருந்த வயல் வெளிகளுக்கு மத்தியிலே பிள்ளையார் கோவில் கொண்டு வீற்றிருந்தார். அவரது குடியிருப்பில் மேற்கூரையில்லை. இந்தக் கோவிலுக்கென்றே அமைந்த தர்மகர்த்தா சீனியா பிள்ளை மாதமொரு முறை பிள்ளையார் அப்பனுக்கு எண்ணெய் அபிஷேகம் செய்து வைப்பார்.

இந்தப் பிள்ளையாரைப் பொறுத்த வரையிலும் வையாபுரியின் மனக் கவலைகளே வேறு விதமாக இருக்கும்.

ஒரு காலத்தில் இந்தப் பிள்ளையார் கீர்த்தியுடன் குடியிருந்தாராம். இப்பொழுது.... மனித வாழ்வைப் போல் ஏழைமைக் கோலத்தோடு அமர்ந்திருக்கும் இந்தப் பிள்ளையாருடன் துயரோடு பேசிக் கொண்டிருப்பான் வையாபுரி. வேறு யாரிடமும் எதையும் பேசத் தோன்றவில்லை அவனுக்கு! கிராமத்திலே அவனுக்குப் பித்துப் பிடித்துவிட்டதாகத்தான் சொல்லிக் கொண்டார்கள்.

கோவில் புறத்திலிருந்து கேட்ட சலசலப்பு வையாபுரியின் நினைவுகளைக் கலைத்தது. அங்கிருந்தபடியே அவன் திரும்பிப் பார்த்தான். செவ்வரளிச் செடிகளின் இடைவெளி வழியாகக் கோவிலின் முன் பாகம் நன்முகத் தெரிந்தது.

கோவிலின் வெளித் திண்ணையின்மீது இரண்டு பித்தளைக் குடங்கள் கதிரொளியில் மினுமினுத்தன. கோவில் முற்றத்தில் செங்கமலமும், கோடிவீட்டு வாண்டையார் மகள் நந்தினியும் நின்றுகொண்டிருந்தனர். அநேகமாக இருவருக்கும் ஒத்த வயதாகத்தான் இருக்கும்.




உடலோடு ஒட்டிய-ஈரம் உலராத புடவை! முதுகெங்கும் விரிந்துகிடந்த கரிய கூந்தலில் ஈரம் சொட்டியது.

வையாபுரி திரும்பினான்! இந்தப் பிள்ளையாரிடம்பக்தி கொண்ட அந்தப் பெண்ணின் நினைவு வந்தது அவனுக்கு. ஆமாம்! இந்தச் சந்நிதியின் முன்பாக நடந்த -நடக்கும்- கதையிலே அவனுக்கும் பங்கு இருந்தது.

செங்கமலம் இந்தக் கோவில் தர்ம கர்த்தா சீனியா பிள்ளையின் ஒரே மகள். வெள்ளியும் செவ்வாயும் அதிகாலையில் இங்கு வந்து விடுவாள். ஒவ்வொரு சமயம் அப்போது வையாபுரியும் இந்தத் தெப்பப் படிகளில் உட்கார்ந்து கொண்டிருப்பான். அவளைக் கண்டாலும் இந்தப் பித்தனிடம் என்ன பேச்சு இருக்கப் போகிறது அவனுக்கு!

இந்தப் பிள்ளையாரிடம் பக்தி கொண்டுதான் செங்கமலம்கோவிலுக்கு வருகிறாள் என்பதை வையாபுரி நம்புவதற்குத் தயாராயில்லை. ஏனெனில் அதே சமயத்தில் அங்கு மூன்றுவது நபராகவுடி வந்து நிற்கும் குருநாதனைப் பற்றியும்அவனுக்குத் தெரியும்.



குருநாதன் யார் தெரியுமா? செங்கமலத்தின் அத்தை மகன்!

வெளியில் நின்று பேசுவதற்கு அவர்களுக்குள்ளே ஏற்றத் தாழ்வு நிறைந்திருந்தது. ஏக்கம் நிறைந்த அந்தச் சோக நாடகம் வையாபுரியின் கண்களிலும் படும். இந்தப் பிள்ளையாரிடம் வரம் கேட்டுப் போய் விடுவார்கள் அவர்கள்.

கோவில் பக்கத்திலிருந்து விம்மும் குரல் கேட்டது.

செங்கமலம் கோவில் திண்ணையிலேயே உட்கார்ந்து விட்டாள். செவ்வரளி மொட்டைப் போன்ற உதடுகளைப் புடவைத் தலைப்பால் பொத்தியபடி பொங்கி வரும் அழுகையை அடக்கிக் கொண்டிருந்தாள் அவள்.

வையாபுரி செடியின்மீது சாய்ந்து கொண்டான்.

செங்கமலத்தின் கதை ஒரு முடிவுக்கு வந்து விட்டதோ! இதற்கு மேலும் அவனது சிந்தை ஓடில் செல்லவில்லை.

'வையாபுரி' என்ற குரல் கேட்டு அவன் மீண்டும் திரும்பினான்.

அப்பொழுதுதான் அங்கு வந்து நுழைந்த சாமிக்கண்ணுவைக் கண்டதும், இரு பெண்களும் இடையில் குடம் சுமந்து புறப்பட்டு விட்டனர். சிறிது நேரம் வரையிலும் கோவில் முற்றத்திலேயே தங்கி நின்ற சாமிக்கண்ணு மீண்டும் "தம்பி" என்று அழைத்தான்!

*

வையாபுரி பட்டறைக்குள் நுழைந்தபோது உள்ளே கோவில் தர்ம கர்த்தா சீனியா பிள்ளையும் சிவலிங்கத்தோடு தனியாசனத்தில் அமர்ந்திருந்தார்.

வையாபுரி அவரைக் கடந்து சென்றவன் ஒன்றுமே பேசவில்லை. சிவலிங்கம் ஆரம்பித்தார்.

"வையாபுரி!....உன்னைப் பார்க்கணும் என்றுதான்... அண்ணாச்சி காத்திருக்காக!" என்றார்.

வையாபுரி தலை நிமிர்ந்தான். சீனியா பிள்ளையைக் கண்டதும் செங்கமலத்தின் நினைவு வந்தது அவனுக்கு!

"என்ன தம்பி...பிள்ளையார் அப்பன் இன்னமும் உனக்கு நல்ல புத்தியைக் கொடுக்கலையே!" என்றார் சீனியா பிள்ளை அவனது பக்கமாகத் திரும்பிப் பார்த்துக் கொண்டு.

வையாபுரி ஒன்றும் பேசவில்லை

"நீ கடையிலே உட்கார்ந்து வேலை செய்தா....சிவலிங்கத்தோட கவலையெல்லாம் நீங்கிப் போகும். வாலிபத்துக்குத் தக்கனே....தொழிலிலே கவனம் இருக்க வேண்டாமா?" என்று தொடர்ந்தார் சீனியா பிள்ளை.

"நானும்..,சொல்லிச் சொல்லி அசந்து போயிட்டேன், அண்ணாச்சி!" என்று இடையில் புகுந்தார் சிவலிங்கம்.

சீனியா பிள்ளை முடிவாகச் சொன்னார்.

"வையாபுரி... இப்ப உன்னை மறுபடியும் வேலையிலே உக்கார வைக்கணும் என்றுதான் வந்திருக்கேன். நீ 'சரி'ன்னு சொல்லிட்டா...அப்பவே நாப்பத்தேழு பவுனையும் தந்திட்டுப் போறேன். ஒரு மாதத்துக்குள்ளே 'லிஸ்டு'ப்படி சாமானைக் கொடுத்திடணும்!" என்று முடித்தார் சீனியாபிள்ளை.

"உன் கையாலே செய்து வாங்கிப் போடணும்னுதான் அண்ணாச்சி இவ்வளவும் சொல்றாக!" என்று ஆவலோடு குறுக்கிட்டார் சிவலிங்கம்.

"ஆமா.... பட்டணத்திலேயும் உன்னோட கைவேலை பேரு சொல்லப் போகுது!" என்று ஆமோதித்தார் சீனியா பிள்ளை,

வையாபுரி பதில் ஒன்றும் சொல்லவில்லை. தலைநிமிர்ந்து தனது தமையனைப் பார்த்தான்.

"ஒன்றுமே பேசலையே சிவலிங்கம்! பழைய கதைதான்" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார் சீனியாபிள்ளை.

"அண்ணாச்சி! நீங்க கொடுத்திட்டுப் போங்க....வையாபுரி கைப்படவே வேலையை முடிச்சுத் தாரேன்!" என்றார் சிவலிங்கம்.

"நீ ஒண்ணு! வையாபுரியோட 'கைராசி'யை நினைச்சுத்தானே நான் இங்கே வந்து நிக்கிறேன்! நீ சரியின்னு சொல்லி என்ன செய்ய?"

"சரியின்னு சொல்லேன்!" என்றார் சிவலிங்கம், தம் தம்பியைப் பார்த்து. அவரது குரலில் சிறிது கடுமை கலந்திருந்தது.

வையாபுரி தலை நிமிர்ந்தான்.

"வாங்குங்க...........நான் முடிச்சுத் தாரேன்!" என்றான் மெதுவான குரலில்.

சிவலிங்கத்தின் முகத்தில் மகிழ்ச்சி நிறைந்தது. நெருக்கும்போது பேசாது எழுந்து போய்விடுவானே! உட்கார்ந்து பதில் சொல்லி வேலையை ஒப்புக் கொண்டது அவருக்கே ஆச்சரியமாக இருந்தது.

சீனியாபிள்ளை மடியிலிருந்த பட்டுப் பையை அவிழ்த்தார்.

"தங்க நகையிலே வையாபுரியோட முத்திரை இருந்தா....இந்த வட்டாரமே இங்கே வந்து குவியுமே! இந்த அருமை தெரியலையே!" என்றவாறு பவுன்களை எண்ணி வைத்தார் சீனியாபிள்ளை. அவர் விடைபெற்றுச் சென்றதும் சிவலிங்கத்தின் மகிழ்ச்சி கரை புரண்டது.

"தம்பி.....! உன் கை ராசியிலே...எல்லாருக்கும் எவ்வளவு நம்பிக்கை இருக்கு; நீ பட்டறையிலே உக்காந்தாலே..... போதும்!" என்றார் உணர்ச்சியோடு!

"எப்போ....முடிக்கணும்?" என்று வாய் திறந்தான் வையாபுரி.

சிவலிங்கம் பூரித்துப் போனார்.

"அடுத்த வாரம் சீனியாபிள்ளை பொண்ணு செங்கமலத்துக்குப் பரிசம் போடப் போறாங்க! பட்டணத்து மாப்பிள்ளை. ஒரு மாசத்துக்குள்ளே வேலையை முடிச்சுக் கொடுத்தாப் போதும்!"

சிவலிங்கம் பேசிக் கொண்டே இருந்தார்.


அதற்குமேல் வையாபுரி ஒன்றுமே பேசவில்லை. அவனது நினைவுகளெல்லாம் செம்மேட்டுப் பிள்ளையார் கோவிலில் லயித்திருந்தன!

★

மறுநாள் காலையில் வையாபுரி பட்டறையிலேயே உட்கார்ந்து விட்டான்.

கறுகறுப்பாகக் கைக்கருவிகளை ஒழுங்கு படுத்தினான். அப்போது சிவலிங்கமும் உடனிருந்தார். தம்பி வேலை செய்வதைக் கண்டு மகிழ்ச்சி பொங்கி வழிந்தது அவருக்கு இனி என்ன குறை? எல்லாமே நிறைந்து விடும்! அவருக்கே அங்கு இருப்புக் கொள்ளவில்லை சின்னத்தம்பியா பிள்ளையின் பலசரக்குக் கடை முதற்கொண்டு— அறிந்தவர்களிடம் எல்லாம் வையாபுரி

சத்வைத்தியசாலை ( ) லிமிடெட் "கருசன்கூடு" திருநெல்வேலி ஜங்ஷன்
ஆயுர்வேத விற்பனர் அவர்களின்



காஸமஸ
கஸ்தூரி மாத்திரை
பாலகஸ
பேதியாக மாத்திரை
காஜன
சிசுராக

கண்டாமலக லேகியம்
உபாதைகளைக் குணப்படுத்த
ஜவரேக்
கூலெக்ஸ்
டிகாகோ

நடராஜா ஸ்டோர்ஸ்
திருச்சி: அப்பாஸ்ஷாப் கடைவீதி
காரைக்குடி:
நல்லபாதன் செட்டியார்
தஞ்சாவூர்: ராஜகோபால் பிள்ளை
குடந்தை:
நாகவேந்திர ராவ் சன்ஸ்
ஈரோடு: ஸ்ரீ கிருஷ்ணு & கோ.
திருப்பத்தூர்:
தாமோதர முதலியார்
வேலூர்: பாக்கிய முதலியார்
செங்கற்பட்டு: அம்பி ஸ்டோர்ஸ்

சோல் ஏஜண்டுகள் யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, சென்னை-1 (மதுரை, கோவை, பம்பாய்)

தரத்திற்கும் உறுதிக்கும் நிகரற்றது



ஹத்திபாயின்

தராசு மார்க்

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்

உத்திரவாதமுள்ளவை

எப்பொழுதும் பிரகாசத்துடன், நீடித்து உழைப்பவை

* *

122, கன்ஸரா சால், பம்பாய் 2.

ஸாண்டோஸ்

காப் ஸிரப்


இருமலுக்கு இதமளிக்கிறது

இருமல்—ஜலதோஷ நிவாரணமாக, இயற்கையன்னை அளித்தருளிய வைத்திய மூலிகைகளுள் மிகவும் கைகண்ட மூன்று மூலிகைகளில் இருக்கும் அதே சத்துக்கள், விஞ்ஞான முறையில் ஒன்றுசேர்ந்த நவீன மருந்தே ஸாண்டோஸ் காப் ஸிரப்.

தொண்டையிலுள்ள இரணவீக்கத்தை சட்டென்று கண்டித்து இதமளிப்பதற்கான மூலிகை பாபாவேர ஸோம்னிபேரோம்; கட்டிப்போன கபத்தைக் கரைத்து, வெளியேற்றிவிட உதவுவதற்கான மூலிகை ஸெனைபலிஸ் இபெகாகுவான்ஹா; மூச்சடைப்பு வேதனையை அதிவிரைவில் தணித்துவிடுவது எபேத்ரா என்ற 'இளைப்பாற்றும்' சக்தியுள்ள மூலிகை:—ஆகிய மூன்று சத்துக்களும் இதில் இணைந்துள்ளன.

அதனுல்தான் ஸாண்டோஸ் காப் ஸிரப், டாக்டர்கள் குறித்துக் கொடுக்கும் மருந்தாக விளங்குகிறது. மேலும், செர்ரிப் பழம் போன்ற அதன் இனிப்பை குழந்தைகள் பெரிதும் விரும்புகின்றனர்.

ஸ்விஸர்லந்து நாட்டு ஸாண்டோஸ் ஆராய்ச்சி சாலையின் மருந்துச் சரக்கு.



SANDOZ

லைசென்ஸ் பெற்ற, ஸாண்டோஸ்(ப்ராடக்ட்ஸ்)ப்ரைவேட் லிமிடெட் கம்பெனியினுல் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.


SCS.P. 2-50 TM.

வேலே செய்ய ஆரம்பித்து விட்ட பெருமையைச் சொல்லித் தீர்த்து விட்டார். அவரது மனைவி கோமதியோடு இதைத் தவிர வேறு பேச்சே இல்லே அவருக்கு! அவர் சீனியா பிள்ளையைத் தேடிச் சென்ருர். "வையாபுரியின் கையாலேயே பவுன்களே உருக்கி ஊத்தியாகி விட்டது!" என்று சொல்வதில்தான் எவ்வளவு பெருமை!

எல்லாமே சில நினங்களுக்குத்தான்!

ஒருநாள் காலே எங்கும் பொழுது விடிந்து. வெகு நேரமாகியும் வையாபுரியை காணவில்லே.

'பட்டறைக்குச் சென்று நேரத்தோடயே வேலே செய்யத் தொடங்கி விட்டானே?' என்ற எண்ணத்துடன் கடைத் தெருவுக்கு ஓடிஞர். பட்டறைக் கதவு பூட்டி யிருந்தது. நேரம் ஏறிய பொழுது அவரால் அமைதியாக வீட்டில் வையாபுரியை எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லே. ஆற்றங்கரையை நோக்கி நடந்தார். அவர் தாழம் புதரைக் கடந்து செம்மேட்டில் நுழைந்த போது எதிரே நீர் நிறைந்த குடத்துடன் செங்கமலம் வந்து கொண்டிருப்பதைக் கண்டு திகைத்து நின்று விட்டார்.



"எங்க தமிழ் வாத்தியாருக்குப் பண முடிப்பு அளிக்கப் போறு. உன்னையும் அதிலே பங்கெடுத்துக்க வாத்தியார் வரச் சொன்னர்."

"நான் வர முடியாது. நீயே என் பங்கை வாங்கிக் கொண்டு வந்துவிடு!"

'இங்கேதானே வையாபுரியும் வந்து விடுகிருன்!'

குனிந்த தலேயுடன் தனிமையில் செல்லும் அந்தப் பெண்ணே ஏறிட்டுப் பார்த்தார் சிவலிங்கம். அடுத்து அவரது பார்வை கோவிலின் பக்கமாகத் திரும்பிச் சென்றது.

அங்கு ஆள் அரவமே இல்லே.

தெப்பத்தை யெல்லாம் சுற்றி வந்து விட்டார் சிவலிங்கம்.

வையாபுரி அங்கும் இல்லே. சிவலிங்கத்தின் திகைப்பு அதிகமாகியது. மீண்டும் பட்டறைக்கு ஓடிஞர். சிறிது நேரம் வரையிலும் மெய்மறந்து உட்கார்ந்திருந்தவர், திடுக்கிட்ட நிலேயோடு பரபரப்புடன் இரும்புப் பெட்டியைத் திறந்தார்.

முதல்நாள் அவரது கண் எதிரில் வையாபுரி பெட்டியில் வைத்த தங்கத் தகடுகளே அங்கு காணேம். கொதிக்கும் நீரைத் தலேயில் கொட்டியது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று அவருக்கு!

வையாபுரியை ஊரெல்லாம் தேடிஞர். அவனேடு சீனியா பிள்ளையின் பவுன்களும் போய்விட்ட செய்தி எங்கும் எட்டி விட்டது.

சிவலிங்கத்துக்கு மேலாகச் சீனியா பிள்ளே தத்தளித்தார்.

மகளுடைய திருமணத்துக்கு நாள் குறித்தாகி விட்டது. பெரிய குடும்பம். தம்முடைய மகளுக்காகச் சேர்த்து வைத்திருந்ததென்னவோ கொஞ்சம் தான். அந்நியத்தில் செயலான இடமாகப் பார்த்த காரணத்தால் அத்தனே பவுன்களுக்கு மகளுக்கு நகை செய்து போடுவதாகச் சொல்லிச் சிவலிங்கத்திடம் ஒப்படைத்திருந்தார்.


சில தினங்களாகியும் வையாபுரியைக் குறித்து ஒருவிதமான தகவலும் கிடைக்காதது கிராமத்துக்கே பெரிதும் அதிர்ச்சியைக் கொடுத்தது. வையாபுரி எடுத்துச் சென்ற பவுன்களுக்கு ஈடாகக் கொடுக்கச் சிவலிங்கத்திடம் அந்தக்கடையைத் தவிர வேறு என்ன இருக்கிறது?

சிவலிங்கத்தின் நிலே கண்டும் சீனியா பிள்ளே ஊர்ப் பஞ்சாயத்தைக் கூட்டத் தவறவில்லே. சிவலிங்கத்தின் பட்டறையையே அடமானமாக எழுதி வாங்கியும் அவரது கோபம் அடங்குவதாக இல்லே.

திருமணம் நிச்சயம் செய்ய வேண்டிய தவணே தவறியது. பட்டணத்துச் சம்பந்தி வீட்டிலிருந்து கேள்வி வந்தது.

சீனியாபிள்ளே செயலற்றுப் போனர். வையாபுரி கொண்டு சென்ற தங்கத்தோடு கணக்குப் பார்த்தால் இன்னும் எத்தனே எத்தனேயோ செலவுகள் இருக்கின்றனவே!

மகளுக்கு முடிவு செய்த பட்டணத்துச் சம்பந்தம் ஒட்டாது போல் தோன்றியது.



"ஏம்பா, இங்கே ஷவர்பாத் இருக்கா?"
"இல்லே, ஸார்! டொமேட்டோபாத் இருக்கு...சூடா!"

அவரும் அக்கறை கொள்ளவில்லை. அதுவும் நழுவியது. பின்வாங்கிய அவமானத்தால் அவர் குன்றிப் போய்விட்டார்.

இந்தச் சமயத்தில் உள்ளூர் மருமகன் குருநாதனுக்குச் செங்கமலத்தைத் கொடுப்பது பற்றிப் பேச்சு வந்தது. மகளுடைய கண்ணீரைக் கண்டபோது சீனியா பிள்ளைக்குத் தலையசைக்க வேண்டிய நிலையே ஏற்பட்டது.

செங்கமலம் பூரித்துப் போனாள். செம்மேட்டுப் பிள்ளையார் அவள் கோரிய வரத்தைக் கொடுத்து விட்டதை நினைத்து நன்றியோடு கை கூப்பினாள்.

மணவினையின் போதெல்லாம் அவளது நினைவுகள் அந்தப் பிள்ளையார் கோவிலையே சுற்றி வந்தன. வையாபுரியின் நினைவும் இடையிட்டது. இதில் சிக்கலும் இருந்தது.

"தங்கத்தை எடுத்துக் கொண்டு இந்த வையாபுரி எங்கே போய் விட்டான்? எதிர்ப்பட்டு விட்டாலும் குனிந்த தலை நிமிராத இந்த அப்பாவிக்கு இவ்வளவு துணிவு எங்கிருந்து வந்தது? எப்படியோ இருக்கட்டும்! அவன் அளித்த மாங்கல்ய பாக்கியம்! அவன் பட்டறையில் உட்கார்ந்து வேலை செய்திருந்தால் இப்பொழுது நிம்மதியாகப் பெருமூச்சு விட முடியுமா?"

திருமணம் நடந்தேறியது!

செம்மேட்டுப் பிள்ளையாருக்குப் படையலிட்டு மணமக்கள் கும்பிடுவது அந்தக் கிராமத்தில் பரம்பரையான வழக்கம். அதிலும் அந்தக் கோவில் தர்மகர்த்தாவின் வீட்டுத் திருமணம் என்றால் சிறிது விசேடம் இருப்பதில் வியப்பில்லையல்லவா?

அன்று அதிகாலையில் செங்கமலமும் குருநாதனும் மணமக்களாக — கைக்கோத்து முன் நடக்க—கொட்டு முழக்கோடு கிராமம் முழுவதுமே பிள்ளையார் கோவிலை நோக்கிப் பின்தொடர்ந்தது.

என்றோ ஒரு நாள்—இந்தப் பிள்ளையாருக்கு விருந்து வருவதை நினைத்து ஆல மரத்தில் கூடியிருந்த பறவை இனங்கள் சிறகடித்துப் பறந்தன!

முன்னோடியாகச் சென்ற சீனியா பிள்ளைதான் முதலில் அந்தக் காட்சியைக் கண்டார்.

கோவிலின் உள் முகப்பின் நிலைப் படியின்மீது இரண்டடி உயரத்தில் தங்கத்தினாலான புதிய பிள்ளையார் கம்பீரமாக வீற்றிருந்தார். காலைக் கதிரவனின் கிரணங்கள் பட்டு அவரது நீண்ட துதிக்கை ஒளி வீசியது. கருணை வழியும் அந்தக் கண்களின் கவர்ச்சியிலே எல்லோரும் மெய்மறந்து விட்டனர். அந்தத் தெய்வச் சிலையின்மீது வைத்த பார்வையைத் திருப்பச் சக்தியற்றுச் செயலற்றுப் போனார் சீனியாபிள்ளை.

"என்னப்பனே! நீ சுய உருவம் கொண்டு விட்டாயா..... கணேசா?" என்று நடுங்கும் குரலில் கூறியவர்—முன்னால் விழுந்து கும்பிட்டார்.


சிவலிங்கம் எல்லோருக்கும் முன்னால் படியேறி வந்தார். அவரது கண்கள் கலங்கின. வையாபுரியின் கை வண்மை அந்தப் பிள்ளையாரின் பொன் மேனியில் நிறைந்திருப்பதைக் கண்டார்.

"அண்ணாச்சி! வையாபுரி இங்கே இருக்குது!" என்ற குரல் கேட்டு எல்லோரும் தெப்பத்தை நோக்கி ஓடினர்.

தெப்பத்தின் தண்ணீரில் கால் படும் படியாக அவன் உட்கார்ந்திருந்தான். எல்லோரும் கூடி நிற்பதைக் கண்டு ஏறிட்டுப் பார்த்த அவனது முகத்தில் எந்தவிதமான சலனமும் ஏற்படவில்லை. எழுந்து படியேறி மேலே வந்தான்! எல்லோரும் வியப்போடு இமையாது அவனையே பார்த்துக் கொண்டிருக்கக் கோவில் முற்றத்தில் சிறிது நேரம் நின்ற வையாபுரி கிராமத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான். சிவலிங்கம் கண்ணீர் பெருக நின்றார். தம்பியைக் கட்டித் தழுவ அவரது கைகள் துடித்தன. ஆனால் மனம் துணியவில்லை.

கூடி நின்ற கூட்டம் உட்கார்ந்து பேசியது. தங்கப் பிள்ளையாரைப் பாதுகாக்க அந்தக் கிராமமே ஒன்று கூடியது.

இப்பொழுது......தங்கப் பிள்ளையார் பிரசித்தமாகி விட்டார். தெய்வம் வாழ்கிறது. அதை உருவாக்கிய மனிதன் பூத்து, பழுத்து, மடிந்து விட்டான்!



இந்தியாவில் ஏராளமான

சீட்டுக் கட்டுகள்


தயாரிப்பாளர்கள். அனைவருக்கும் ஏற்ற பற்பல ரகங்கள் வசிகரமான அனேகவித டிசைன்களில் கிடைக்கும்

விற்பனை விவரங்களுக்கு எழுதவும்

THE POPULAR FINE ART LITHO WORKS, Tardeo Road, BOMBAY-7

ஏஜண்டுகள் வ. சி. ராமலிங்கம் அண்டு சன்ஸ், 2/422, தங்கசாலைத் தெரு, சென்னை-1

எப்பொழுதும் உங்களுடைய சேவைக்கு I. O. B.



தி இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்

THE INDIAN OVERSEAS BANK LIMITED, MADRAS

IOB

IOB-6-5A



த்வார்க்கின்ஸ்

கை ஆர்மோனியப் பெட்டிகள் செய்வதில் கைதேர்ந்தவர்கள். மேற்படி ஆர்மோனியப் பெட்டிகள் தயாரிப்பதில் புதுமையைப் புகுத்தியவர்களில் 'த்வார்க்கின்ஸ்' முன்னணியில் நிற்கிறார்கள்.

விலை ரூ. 40/-லிருந்து ரூ. 550/- வரையில்

விலை விவர ஜாபிதாவுக்கு ஆங்கிலத்தில் எழுதுங்கள்

த்வார்க்கின் & சன் பிரைவேட் லிட்.

8/2, எஸ்பிளனேடு ஈஸ்ட், கல்கத்தா-1

[பொன்மணிப் பதிப்பகத்தின் முன் பாகம். நிர்வாகி சுந்தரமூர்த்தியும் உதவி நிர்வாகி தைரியசாமியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

சுந்தர : என்னையா தைரியசாமி! காலைத் தபாலெல்லாம் பார்த்தீர்களா? என்ன விசேஷம்? புஸ்தக ஆர்டர்கள் ஏதாவது வந்திருக்கின்றனவா?

தைரிய : எஸ். நோ. எஸ்.

சுந்தர : மூணு கேள்விகளுக்கும் ரத்தினச் சுருக்கமாக மீசைகூட ஆடாமல் மொத்தத்தில பதில் சொல்லிப்பிட்டீங்களாக்கும்?... எந்தப் புஸ்தகத்துக்கு நிறைய டிமாண்டு இருக்கு? கவனிச்சீங்களா?

தைரிய : மலிவுப் பதிப்பிலே வந்த 'அனுபவ ஒப்பாரிக் கலை'க்குத்தான் மொத்த ஆர்டர் ஒண்ணு வந்திருக்கிறது! தலையூர் ஆசாமிதான் இந்நூறு புத்தகங்கள் கேட்டிருக்கிறான். அட்வான்ஸ் செக்கும் அனுப்பி விட்டான்.

சுந்தர . புஸ்தகம் ஸ்டாக்கு இருக்கா?

தைரிய : நாலாவது பதிப்புவேலை நேற்றே முடிஞ்சு போச்சு. பைண்டு நடந்து நாளைக்குக் காபிகள் தயாராகி விடும். அவருக்கு அனுப்பிச்சுடலாம்.



'புத்தகத்தைக் கரைத்துக் குடிப்பது' என்று பெருமையாகச் சொல்லுவதுண்டு. புத்தகத்தை அரைத்துப் பிழைக்கிற இரகசியம்....

புத்தக

கோமதி சுவாமிநாதன்

சுந்தர தலையூரிலே மாத்திரம் இந்தக் குறிப்பிட்ட புத்தகத்துக்கு நிறையச் செல்வாக்கு இருக்கு! விஷயம் புரியலே!

தைரிய : கலா ரசிகர்கள் நிறைய இருப்பார்கள்! நான் எழுதிச் சேர்த்த சில பாட்டுக்கள் ரொம்பப் பிரமாதமாக அமைந்திருந்தன. துணிஞ்சு பழங்காலப் பாடல்கள் என்றும் போட்டு விட்டேன்!... (தணிந்த குரலில்) நீங்கதான் அந்த வகையிலே எனக்குச் சரியாக......

சுந்தர : இப்ப ஏனையா ஒப்பாரி வைக்கிறீர்! மொத்தமாகத்தான் அந்தப் புஸ்தகத்திலே வைத்தாயிற்றே! தலையூரிலே மற்றப் புஸ்தகங்களெல்லாம் எப்படி விற்பனையாகின்றன?

தைரிய : (நோட்டுப் புத்தகத்தைப் பார்த்து) அனுபவக் குடும்பக்கலை ஐந்து. அனுபவ அரட்டைக் கலை மூன்று. அனுபவ ஒப்பாரிக் கலை - ஆறுயிரத்து முந்நூற்றுப்பத்து.

சுந்தர : அந்த ஊர் ஜனத்தொகையே அவ்வளவு இருக்காது போலிருக்கே. இத்தனைக்கும் அந்தப் புஸ்தகத்துக்கு என்று மட்டமான நியூஸ் பிரிண்ட்தானே போட்டோம்?

தைரிய : நூறு நயா பைசாவுக்கு முந்நூறு ஒப்பாரி வைக்கிறோமே?... அதுதான் காரணம். ஒப்பாரியோ, சிரிப்போ ஜனங்களுக்கு மலிவுதானே கணக்கு!

சுந்தர : அனுபவச் சண்டைக் கலை அந்த ஊருக்குப் போகலியோ?

தைரிய : மறந்தே போனேன்! வம்பூர் கோர்ட்டிலிருந்து சம்மன் வந்திருக்கிறது. அங்கு யாரோ இரண்டு பேர் சண்டைப் பிடித்துக் கொண்டு, நம்ப புஸ்தகத்திலே போட்டிருக்கும் பிரகாரம், அதாவது நூற்றி மூன்றுவது சண்டைபோடும் ரகம் மாதிரி, அடித்துக் கொண்டதாகக் கோர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். கோர்ட்டிலிருந்து பிரகாசகர்த்தர்களைச் சாட்சிக்குக் கூப்பிட்டிருக்கிறார்கள்.

சுந்தர : நல்ல வேளை! அடிதடி நடக்கும்போது கப்பிடாமல் இருந்தார்களே! வம்புக்குப் போய் வரும்போது தவளையூரையும் பார்த்தால் நல்லது!... அங்கே விற்பனையாளர் யாரு?

தைரிய : ' பொன்னு ' என்று கையெழுத்து வரது. ஆசாமி ஆம்பிளையா பொம்பிளையா என்று கூடத் தெரியாது. பொன்னுசாமியாகவும் இருக்கலாம். பொன்னம்மாளாகவும் இருக்கலாம்.

சுந்தர நல்ல ஆளையா நீர்! அதிகப் படியாகப் புத்தகம் விற்பவனைப் பாராட்டினால் அவனுக்கும் கௌரவம். நமக்கும் விளம்பரம். செலவைச் சரிபாதியாகப் போட்டுக் கொள்ளலாம். தவளையூர் ஆசாமிக்கு நாளுக்காக ஒரு கடிதம் எழுதிப் பாருமேன்.

தைரிய : தவளையூரிலே ஒரு ஒப்பாரி மகாநாடு கூட்டி விடலாம்! நிகழ்ச்சிகளை ரேடியோவிலே ஒலிபரப்பக்கூட ஏற்பாடு செய்யலாம்! விற்பனையாளருக்கு ஒரு கேடயம். உங்களுக்கு ஒரு வீர வாள். ஸார்க்காரங்க கொடுக்கிறதுபோலே ஏற்பாடு!

சுந்தர : வீரவாளாம், வீர வாள்! முதலில் வீட்டில் இளநீர் வெட்ட ஒரு அரிவாளைக் காணோம்! அடக்கமாக, அந்த ஸார்க்காரங்களைப் பாராட்ட ஒரு விழா நடத்தலாமென்றால், ஆடம்பரமாக நம்மை அங்கு போய்ப் பாராட்டிக் கொள்ள வேண்டு மென்கிறீரே! ... பேப்பர் ஸ்டாக் எப்படி இருக்கிறது?

தைரிய : அதுதான் முன்னுலேயே வாங்கிப் போட்டாயிற்றே! சன்னைக் கலை மூன்ருவது பதிப்பும் அரட்டைக் கலை இரண்டாவது பதிப்பும் கொண்டு வந்தாக வேண்டுமே!

[அாசத்திலே பதிப்பகத்தை நோக்கிக் கவிஞர் கண்ணுச்சாமி வருகிருர்.]

சுந்தர : ஐயையோ!...... கண்ணுச்சாமி வராரே!... அவருக்குச் சரியான பதில் சொல்லி அனுப்புங்க! மனுஷன் என்னைப் பார்த்துட்டாரு! இல்லாத போனல் நான் நழுவியிருப்பேன்.

தைரிய : நீங்க சும்மா இருங்க! நான் சமாளிச்சு அனுப்பறேன். என் பேச்சை அனுசரிச்சு நீங்கள் தலையை ஆட்டி வையுங்கள்.

கண்ணு : (வந்து உட்கார்ந்து) வணக்கம்!

தைரிய : (உற்சாகத்துடன்) வாங்க, வாங்க! கவிஞரையா? டேய் பையா! ஓடிப் போய் வெற்றிலே சீவல், நயம் பன்னீர் புகையிலை எல்லாம் வாங்கி வா! (கண்ணுச்சாமியிடம்) சௌக்கியமா? 'மஞ்சள் கொத்து' பொங்கல் இதழிலே உங்கள் கவிதையைப் பார்த்தேன்! பிரமாதம், பிரமாதம்!

கண்ணு : மிகுந்த நன்றி! தமிழன் பண்பு என்பது இங்கு தான் தனி உருவம் பெற்று விளங்குகிறது! என்ன உபசாரம்?

தைரிய : உங்களை உபசாரம் செய்வது எங்கள் கடமை! உங்கள் கவிதைகளை வெளியிடுவதில் எங்களுக்கு எத்தனை பெருமை, தெரியுமா?

கண்ணு கடைசியிலே என் கவிதைகளைப் புத்தக உருவமாக வெளியிடுவது என்று முடிவு செய்து விட்டீர்களா?

தைரிய: அதென்ன அப்படி பொடிவைச்சுக் கேட்கிறீங்க?

கண்ணு: இல்லே. கடந்த ஆறு வருஷமாக, ' கண்ணுச்சாமியின் கவிதைகள் ' (அச்சில்) என்று விடாமல் விளம்பரத்தை உங்க விலைப்பட்டியலிலே போட்டு, அச்சில் என்கிற வார்த்தையை வலையத்துக்குள்ளே சிறை வைத்திருக்கிறீர்களே! அந்தச் சிறைச்சாலையைத் திறந்து விட்டு விட்டீர்களோ என்று கேட்டேன். ஒருவேளை, சங்ககால இலக்கியத்தின் தரத்தைக் காலத்தால் அடையவாவது இன்னும் இரண்டாயிரம் வருஷங்கள் கழித்துத் தான் போடுவீங்களோ என்ற சந்தேகம்.....!

தைரிய : (தனக்குள்) கவிஞர் இன்றைக்கு வெண்டல் வேகத்திலேயே வந்திருக்கிருர்போலிருக்கு! பேப்பர் பஞ்சம்



ஒப்பாரி





"என்னை டிஸ்மிஸ் பண்ணி விட்டீர்களே... நான் ஒன்றுமே செய்யவில்லையே!"
"அதனால்தான் போய் வாருங்கள்!"

பற்றி உங்களுக்கு நான் சொல்லியா தெரிய ணும். கண்ட கண்ட நியூஸ் பிரிண்டைக் கவிதைப் புத்தகத்துக்கு உபயோகப் படுத்த லாமா? வெளிநாட்டுப் பேப்பர் கொஞ்சம் நேற்றுத்தான் கிடைத்தது. இன்றைக்கு உங்க கவிதைத் தொகுப்பைக் 'கம்போஸ'க்கு அனுப்பிச்சுட்டோம். முதலாளி கிட்டே கூட அதைத்தான் சொல்லிக்கிட்டு இருந்தேன்.

சுந்தர : ஆமாம்! ஆமாம்!

கண்ணு : சந்தோஷம்! இத்தனை நாள் வரை என் தொகுப்பை, என் வாரிசுகள்தான் பார்க்கும் என்று நினைத்துக் கொண்டிருந் தேன். நானேகூடப் பார்க்கலாம் என்ற நம் பிக்கை இன்று வந்திருக்கிறது! வரட்டுமா? வெத்திலே பாக்குக்குப் போன பையன், நான் கிளம்பறவரை வரமாட்டான் போலிருக்கு!

[கிளம்புகிறார்.]

சுந் : தைரியசாமி!......குண்டு தைரியமா கண்ணுச்சாமிகிட்டே சொல்லிப்பிட்டீங்களே! நிஜமா.....அல்லது....

தைரி : மருந்துக்குக்கூட நிஜம் கிடையாது. பயப்படாதீங்க! அவருகிட்டே வாங்கின கவிதைத் தொகுப்பு தொலைஞ்சு போயி வருஷம் ஒண்ணாச்சு! அதனாலே அவருடைய வாரிசுகள்கூடப் புஸ்தகத்தைப் பார்க்க முடி யாது. மேலும் அவருடைய கவிதைகள் எல் லாம் காலத்துக்கு ஏற்ற தகுதியைத் தியாகம் செய்து வருஷம் இரண்டாயிற்று.

சுந் : மனுஷன் அடுத்த வாரமே வந்து நிற்பானே?

தைரி : பயப்படாதீங்க! 'லைன்' பாயிண்ட் டைப்புக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறது என்று நாலு மாசம் இழுத்தடிக்கலாம். அப் புறம் பேப்பர் பஞ்சம் என்று நாலு வருஷங் கள் சொல்லலாம்.

சுந் : நல்ல ஆளையா!......அனுபவ புளுகுக் கலைன்னு ஒரு புத்தகம் வெளியிட வேண்டி யதுதான்.

தைரி : 'ஹரிச்சந்திரன்' என்கிற புனைபெய ரிலே நானே எழுத ஆரம்பித்து விட்டேன்!

சுந் : அங்கே வரது யாரு!....டலாய்லாமா மாதிரி இருக்கு! டலாய்லாமா பட்டிணத் துக்கு வருகிறார் என்று பேப்பரிலே போடலியே! அதுவும் இப்படியா தனியாய் வருகிறார்....?

தைரி : டலாய்லாமாவுமில்லே? டி. ஸ் வி மாமாவுமில்லே. சிறுகதை எழுத்தாளர் 'டால் வைரம்'. இத்தனை நாள் நாடி வைத்திருந் தார்! அதைக் காணோம்!

சுந் : இவர் புஸ்தகம்கூட....

தைரி : அடுத்த பத்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஒரு வேளை அதற்கு அடுத்த பத்தாண்டு திட்டத்துக்குத் தள்ளப் படலாம்!....நீங்க இப்படியே பின்னாலே போங்க! நான் அவரைப் பக்குவமாக அனுப்பி விடுகிறேன்.

சுந் : சரி! சரி!.... அந்தக் தலையூர்க்கார னுக்குக் கடிதம் எழுதும். அனுபவ ஒப்பாரிக் கலைக்கு ஒரு சிறு விழா நம் செலவில் கொண்டாடி விடலாம்!

[சுந்தரமூர்த்தி நழுவுகிறார். சில நிமிடங் களில் 'டால் வைரம்' வந்து உட்காருகிறார்.]

தைரி : வாங்க! வாங்க! வைரம் டால டிச்சு ரொம்ப நாளாச்சு! வெளியூர் போயிருந் தீங்களா?

டால் வைரம் : திருப்பதிக்குப் போயிருந் தேன். பார்த்தால் தெரியலே!

தைரி : பிரார்த்தனை போலிருக்கிறது!.... உங்க புஸ்தகம் சீக்கிரமே வெளிவருகிறது!

டால் : புஸ்தகம் வரணும் என்பதற்காகப் பிரார்த்தனை செலுத்தப் போகவில்லே, ஐயா! அந்த ஆசைக்கு நான் அப்பவே ஸ்நானம் பண்ணி விட்டேன்!

தைரி : வார்த்தைகளாலே ஆளைத் துளைக் கிறீங்களே! பேப்பர் மார்க்கெட் நிலவரம் கொஞ்சம் சரியாகட்டும், சார்!

டால் : சார்!....நீங்க இப்போ புஸ்தகப் பிரசாலயம் நடத்தவில்லே. செங்கல் சூளை நடத்துகிறீர்கள். அலமாரி அலங்காரத்துக்குப் புஸ்தகங்கள் வாங்கும் மோகம் தணிந்த பிறகு படிப்பதற்காகப் புஸ்தகங்கள் வாங்கும் காலம் வந்த பிறகு, என் புஸ்தகத்தை நீங்கள் கொண்டு வரலாம்...நான் வரட்டுமா?

[போகிறார்.]

தைரி : (தனக்குள்) சிறுகதை ஆசாமிக்குப் பெரிய கோபமாகத்தான் வருகிறது. வியா பாரமாகிற புத்தகம்தான் எங்களுக்கு உயர்வே தவிர, படிக்கப்படும் புஸ்தகம் எங்களுக்குப் பெரிதல்ல!

(ஏதோ எழுதத் தொடங்குகிறார்.)

2

[ஒரு வாரம் கழிந்து ஒரு நாள் மாலை. அதே இடம்.]

சுந் : தலையூர் விஷயம் என்ன ஆயிற்று?

தைரி : சுத்த வறட்டுத்தனமாக அந்த ஆசாமி பதில் எழுதியிருக்கிறான்.

சுந் : தலையூர் வறட்டுத் தலையூர் ஆகி விட்டதாக்கும். விழாச் செலவு தன் கையைக்

ராம்தீர்த் யோகாஸ்ரமத்தின் சில செயல்கள்



SHRI YOGIRAJ UMESHCHANDRAJI



ராம்தீர்த் பிராமி ஆயில் - ஸ்பெஷல் நெ. 1

கூந்தல் தைலம், மூளைக்கு ஔஷதம், கண்களுக்கும் ஞாபக சக்திக்கும், ஆழ்ந்த நித்திரைக்கும் உடல் வலியைப் போக்குவதிலும், ராம்தீர்த் பிராமி ஆயில் யாவருக்கும், எக்காலத்தும் உகந்தது. கிடைத்தற்கரிய பலவித மூலிகைகளினுல் விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட ராம்தீர்த் பிராமி ஆயில் இப்பொழுது எல்லா இடங்களிலும் புதிய பாட்டிலில் கிடைக்கிறது.

பெரிய பாட்டில் விலை ரூ. 4/-; சிறியது ரூ. 2/-

எங்கும் கிடைக்கும்

பலவித உன்னத மூலிகைகளினுல் ராம்தீர்த் பிரம்மி என்ணெய் விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டது

யோகாசன வரைவு படம்

ஆரோக்யமாகவும், திடமாகவும் திகழ யோகாசனங்களை விவரிக்கும் எமது அழகான ஆசனம் படத்திற்கு எழுதுங்கள். ரூ. 2.50 மணியார்டர் அனுப்பி இப்படத்தைப் பெற்றுக்கொள்ளலாம். வீட்டிலிருந்தே ஆசனங்களைச் சுலபமாகப் பழகலாம்.

யோகாசன வகுப்புகள்: காலை 7-30லிருந்து 9-30 மணி வரையிலும், மாலையில் 6-லிருந்து 7-30 மணி வரையிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பிரதி ஞாயிறுதோறும் காலை 10 மணிக்கு யோகாசன சொற்பொழிவுகள் உண்டு.

ஸ்ரீ ராம்தீர்த் யோகாஷ்ரமம்

Phone: 62895 தாதர் - சென்ட்ரல் ரயில்வே - பம்பாய் - 14 Grams: PRANAYAM, Dadar - Bombay

ராம்தீர்த் பிராமி டெப்போ: 257, தங்கசாலைத் தெரு, சென்னை - 1

கடிக்கும் என்று பயந்திருப்பான் போலிருக்கு! விஷயத்தைத் தெளிவாக எழுதித் தொலைப் பதுதானே?.....பந்தல்கால் முதற்கொண்டு இங்கேயிருந்து கொண்டு வருகிறோமென்று.

தைரி : ஆசாமி அஸ்திவாரத்திலேயே வெடி வைக்கிறான்! 'விழாவிழா என்ற பேச்சே உதவாது. புஸ்தகம் வியாபாரமாகணும்னு எப்போதும்போல இருக்கணும். விழா நடத்திப் புத்தகத்துக்கு விளம்பரம் தேடுவது என்பது எனக்குப் பிடிக்காது' என்று எழுதியிருக்கிறான்.

கந் : விளம்பர விரோதின்னு இந்தக்காலத்திலே அவன் ஒரு அவதார புருஷன் ஐயா!....

தைரி : அவனுக்கு விளம்பரம் தேவையில்லாமல் இருக்கலாம்! நம்ப புஸ்தகத்துக்கு வேணுமே! தவளையூரிலே ஏழாயிரம் பிரதிகள் போயிற்று என்று பத்திரிகையில் வந்தால் மாறு ஊர்க்காரங்களும்....

கந் : ஆமாம்!.....ஆமாம்....நமக்கு அவசியம்!...அதென்ன தந்தி பாரும்!

[தந்திச் சேவகன் ஒரு தந்தியைக் கொடுத்து விட்டுப் போகிறான்.]

தைரி : (உடைத்துப் பார்த்து) தவளையூர் தந்திதான்!

கந் : சம்மதிச்சுட்டாரா?

தைரி : விஷயம் விபரீதமாக இருக்கிறது! மேலும் ஆயிரம் பிரதிகள் அதே புஸ்தகம் வேண்டுமாம்!

கந் : ஏன் ஐயா! எனக்கு ஒரு சந்தேகம்!... பயல் நம்ப அட்டையைக் கிழித்து விட்டுச் சொந்தத்திலே வேறு அட்டை போட்டு விலையை இரண்டு ரூபாயாக்கிச் சிங்கப்பூர் மலேயாவுக்கு ஏற்றுமதி பண்ணுகிறானோ?

தைரி : தொட முடியுமா?... புஸ்தகத்துக்கு நடுவிலே நாலு இடத்திலே புத்தக விலையைக் கொட்டை கொட்டையாகப் போட்டு வைத்திருக்கிறேன்!...

கந் : சரி!...நாளைக்கு மறுநாள் நாம் இருவரும் தவளையூர் போகிறோம். ஒரு பொன்னாடை மாத்திரம் வாங்கி வைத்துக் கொள்ளும். ரகசியமாகவாவது ஆசாமியைப் பாராட்டவேண்டியதுதான்... இன்றைக்கு லாரியிலேயே புஸ்தகத்தை அனுப்பிவிடும். நாளைக்குக் காலையிலே அங்கு டெலிவரி ஆகிவிடும்!

தைரி : ஓ. எஸ்!

3

[தவளையூரில் ஒதுக்குப்புறமான தெரு. சுந்தரமூர்த்தியும் தைரியசாமியும் வருகிறார்கள்.]

கந் : என்னையா அதிசயமாக இருக்கிறது? புத்தக வியாபாரம் பொன்னுன்னு கேட்டால் யாருக்கும் தெரியலே!

தைரி : கண்ட்ராக்டர் பொன்னுன்னுதான் இருக்கானும்!....இதோ அவர் வீடு!... விசாரிப்போம்.

[பெரிய வீட்டின் காம்பௌண்டில் நுழைகிறார். பொன்னு வெளியே வருகிறார்.]

பொன்னு : யாருங்க? என்ன வேணும்!

தைரி : பொன்னுங்கறது நீங்கதானே?

பொன் : ஆமா!.......கண்ட்ராக்டர் பொன்னு!....

கந் : இங்கே புஸ்தக வியாபாரம் செய்ற ஆசாமியும்....

பொன் : நான்தான்!.....எப்போதாவது பொழுது போக்காக....

கந் : ஓஹோ! எங்களுக்கு ஒரு புஸ்தகம் வேணும்!...அநுபவ ஒப்பாரிக்கலை ஒரு பிரதி.

பொன் : இல்லீங்க!.....அந்தமாதிரி அழுகைப் புஸ்தகங்களெல்லாம் நான் வரவழைக்கிறதில்லே!....

தைரி : பொன்மணிப் பிரசுரம் போடற புத்தகமுங்க!

பொன் : பொன்மணியோ வெள்ளி மணியோ! தெரியாது. இந்த ஊரிலே வருஷத்துக்கு ஒரு ராமாயணப் புஸ்தகம், இரண்டு மதனகாமராஜன் கதைப் புஸ்தகம் விற்கும்! அவ்வளவுதான்!

கந் : (திடுக்கிட்டு) என்னங்க! உங்களுக்கு அடிக்கடி பெரிய பெரிய புஸ்தகக் கட்டு வரதுன்னு லாரி ஆபீசிலே சொன்னாங்க!...

பொன் : வருது....ஆனால் நான் விற்பதற்காக அவைகளைத் தருவிப்பதில்லையே!

தைரி : இலவசமாக அவற்றை விநியோகம் பண்றீங்களோ?

பொன் : என்கிட்டே காசு துருப்பிடிச்சுப் போயிருக்கோ?...தொழில் முறை உபயோகத்துக்குத் தேவையாக இருக்குது.

தைரி : புஸ்தகத்தைப் படிப்பதற்குத் தவிர வேறு வழியிலே கூட உபயோகிக்கலாமா, என்ன?

பொன் : (எரிச்சலுடன்) ஏன் ஐயா உபயோகிக்க முடியாது!....நான் வீடு கட்ற கண்ட்ராக்டர்! சில ரகப் பேப்பர்களை ஊற வைச்சு அரைச்சு சிமிண்டோடு சேர்த்துப் போட்டால் பிரமாத பளபளப்பு இருக்கு. செலவு குறைவு, உறுதி மிச்சம்!....ஒப்பாரிக் கலைப் புஸ்தகத்துக்கு அவங்க போட்ட கடுதாசி எனக்குப் பிடித்திருந்தது. எட்டாயிரம் வாங்கி ஊறப்போட்டு அரைச்சேன்! புதுப் பஞ்சாயத்து போர்டு கட்டடம் கட்றேனே! அத்தனையும் ஒப்பாரிக் கலை!....நான் எப்படி விற்க முடியும்! இது தொழில் ரகசியம்!...

கந் : அடபாவி!...உனக்கு...

தைரி : பொன்னாடையை அந்தப் பஞ்சாயத்துக் கட்டடத்துக்குப் போர்த்தலாம் வாங்க! விழா வேண்டாம் என்ற ரகசியம் இப்பவாவது தெரியுதா?

பொன் : (திகைப்புடன்) நீங்க...

கந் : நான்தான் அந்தப் புஸ்தகத் தயாரிப்பாளர்.

தைரி : நீங்க அந்தப் புஸ்தக அழிப்பாளர்!

கந் : இனிமேல் மலிவுப் பதிப்புக்கு....

தைரி : ஒப்பாரி வைத்து விடலாம்!

(போகிறார்கள்)

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam



பிறந்து 5 மாதங்கள் கூட ஆகவில்லை—
—அவன் தவிழ ஆரம்பித்து விட்டான்!

அவனுக்கு அவன் தாயார்

டூமெக்ஸ் பேபி புட் புகட்டுகிறாள்

என்பதைச் சொல்லவும் வேண்டுமா!

டூமெக்ஸ் பிரைவேட் லிமிடெட், வேவல் ஹவுஸ், பம்பாய்-1

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



பட்டுப் போன்ற மென்மையான விநோலியா ரோஸ் டாய்லெட் பவுடர் உங்கள் சருமத்தைப் பூவிதழ் போன்ற மழமழப்புடன் வைத்திருக்கும். இனிய பிரியாத அதன் ரோஜா மணம் மணிக்கணக்காக உங்கள்மீது கமழ்ந்திருக்கும்.

விநோலியா ரோஸ் டாய்லெட் பவுடர்

வசீகரிக்கும் ரோஜா மணமுள்ள, வெண்மையான பவுடர்

VRTP. 4-23 TM